விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 12 சனிக்கிழமை (25.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 127



ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ


# வாக்குமூலம் அளிக்க முடியாது மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்



(கொழும்பு)

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு வாக்குமூலம் அளிக்க முடியாது. என்ன காரணத்திற்காக என்னிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது பற்றிய விபரங்களை இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை. என்ன விடயம் குறித்து விளக்கம் தேவைப்படுகின்றது என்பதை அறிந்து கொள்ளும் உரிமை எனக்கு உண்டு என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## தீக்குளிப்போம்! பொது பல சேனா

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ நாட்டை ஆட்சி செய்திருந்தால் நாடு சுத்தமாகியிருக்கும். தலைசிறந்த தலைவர் கோத்தபாய என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவை தண்டித்தால் தீக்குளிக்கவும் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொது பல சேனா அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழகத்துக்கு மீண்டும் அகதிகள் படகுகளில் பயணம்

(சென்னை)

இலங்கையில் இருந்து மீண்டும் அகதிகள் ஐவர் தமிழகத்திற்கு சென்றுள்ளனர்.

நேற்று 5 பேர் தமிழகத்திற்கு வந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்த காலத்தில் திருகோணமலையைச் சேர்ந்த இவர்கள் ஐவரும், 1999 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையில் இராமேஸ்வரத்திலுள்ள அகதிகள் முகாமில் தங்கியிருந்தனர்.

எனினும் உள்நாட்டுப் போர் முடிந்த பின்னர் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தாய் நாட்டிற்கு திரும்புவதற்கு ஆர்வம் கொண்ட இவர்கள சட்டமுறைப்படி இலங்கை திரும்பியிருந்தனர்.

ஆனாலும் இலங்கையில் தாம் இவ்வளவு காலமாகவும், குறிப்பாக 2010ஆம் ஆண்டு நாட்டிற்கு திரும்பி வாழ்ந்த 5 வருடங்களிலும் வசிப்பதற்கு வீடின்றி கஷ்டங்களை அனுபவித்ததாகவும், அங்கு வாழ்வதற்கான சூழ்நிலைகள் மோசமாக இருப்பதாகவும் அவர்

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு முதலமைச்சருக்கு இந்.ஊடகத்தால் களங்கம்

(கொழும்பு)


வட மாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பெயருக்கு களங்கம் ஏற்படும் விதத்தில் இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அனுப்பியுள்ள கடிதத்தை திரிவுபடுத்தி இந்திய ஊடகங்கள் செய்திகளை தவறாக வெளியிட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நேர்மையான பேச்சும், எதையும் நேரடியாக துணிந்து சொல்லக் கூடியவருமான முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செல்வாக்கு இலங்கையில் மட்டுமன்றி உலகத்தமிழர்கள் மத்தியிலும் உயர்ந்து நிற்பதை தடுப்பதற்காகவே இந்த பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாக தமிழ் மக்கள் சந்தேகிக்கின்றனர். இச் செய்தி குறித்து தெரிய வருவதாவது,

பிரேமானந்தா ஆசிரம வழக்கில் இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட மூவரை விடுதலை செய்யுமாறு கோரி, இந்தியப் பரதமர் நரேந்திர மோடிக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் வெளியிட்

24ஆம் பக்கம் பார்க்க....



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இலங்கையின் 9 மாகாணங்களையும் சேர்ந்த ஆயர்கள் குழு சந்தித்து பேசியுள்ளது. கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையில் இச்சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றதாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 90 ஆயிரம் மில்லியன் ரூபாய் அரச ஊழியர்களுக்கு ஒதுக்கீடு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்குவதற்காக வருடத்திற்கு 89 ஆயிரத்து 700 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஆலோசகர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ்வழங்கிய வாக்குறுதிக்கு அமைய கர்ப்பிணி தாய்மாருக்கு 20 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கு வதற்காக வருடத்திற்கு ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மகாபொல மாணவர் உதவி நிதியாக மே மாதம் முதலாம் திகதி முதல் 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

100 நாள் வேலைத்திட்டத்தில் வாக்குறுதியளிக்கப்படாத போதிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை 2 ஆயிரம் ரூபாயில் இருந்து 2 ஆயிரத்து 500 ரூபாயாக

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியை புகழ்ந்த நோர்வேத் தூதுவர்

(கொழும்பு)

எத்தகைய தடைகள் வந்தாலும், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும், நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் சிறப்பாக செயற்படுவதாக இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிறேடா லோச்சன் தெரிவித்துள்ளார்.

நோர்வே தூதுவருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

100 நாட்கள் செயற்றிட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவது தொடர்பில் நோர்வே

24ஆம் பக்கம் பார்க்க....

## பேரவை உறுப்பினர்களை மானிய ஆணைக்குழு நியமித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திற்கான பேரவை உறுப்பினர்கள் 14 பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக இழுபறியில் இருந்து வந்த பேரவை உறுப்பினர்கள் தெரிவு தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

பல்கலைக்கழகங்களின் அதியுயர் சபையாக கருதப்படும் பேரவையில், உள்வாரி உறுப்பினர்களாக இருக்கும் துணைவேந்தர், பீடாதிபதிகள், மூதவை பிரதிநிதிகள் உள்ளிட்ட புலமையாளர்களுடன், வெளிச்சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, சமூகத்தில் மதிப்பார்ந்த சேவையை வழங்கிவரும் கல்வி, தொழில்சார், வணிக, கைத்தொழிற்றுறை, விஞ்ஞான மற்றும் நிர்வாகத் துறை சார்ந்தவர்கள் வெளிவாரி உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்ற, 1985-ம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சட்டத்தின் 44 (1) 7 பிரிவின்படி வெளிவாரி உறுப்பினர்கள் பல்

24ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்றத்தை அவமதித்த 27 பேருக்கு அழைப்பாணை

### கோத்தாவுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டத்தில்

(கொழும்பு)

நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 27 பேருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவிற்கு முன்பாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியமை தொடர்பில் இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்த நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது. எனினும் அதனை பொருட்படுத்தாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 27 பேருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார நீதிமன்றில்

24ஆம் பக்கம் பார்க்க....

## காய்ச்சலினால் மாணவி மரணம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த மாணவி ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்.மருதங்கேணி நாகர் கோவில் கிழக்கைச் சேர்ந்த விஜய காந்தன் தர்ஷினி (வயது-18) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சளி மற்றும் காய்ச்சல் காரணமாக மந்

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

மின் விநியோக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக யாழ்.குடாநாட்டின் சில பகுதிகளில் இன்று சனிக்கிழமை (25.04.2015) காலை 08 மணியிலிருந்து மாலை 5.30மணிவரை மின் விநியோகம் தடைப்படுமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி யாழ் பிரதேசத்தில் துணைவி, பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை, தொல்புரம், சங்கானை, சாந்தை, சில்லாலை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை ஒருபகுதி, தொட்டிலடி, பிரான்பற்று, மாரிசன்கூடல், சேந்தான்குளம், இளவாலை பெரியவிளான், மெய்கண்டான், சுழிபுரம், ஜம்புகோளப்பட்டினம்,

நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு, கோகிலாக்கண்டி, கைதடி, நுணாவில், மட்டுவில், வாகையடி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# தமிழர்களின் தீர்வுத் திட்டத்திலும் பாக். அக்கறை செலுத்த வேண்டும்

## வணிகர் கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இடம்பெற்ற போருக்கு பலவிதங்களிலும் இலங்கை அரசாங்கத்திற்கு உதவி செய்த பாகிஸ்தான் அரசாங்கம் தமிழர்களின் தீர்வுத் திட்டத்திலும் தனது பங்களிப்பை செய்ய வேண்டுமென யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. போர் முடிவுற்று ஐந்தரை வருடங்களிற்கு மேலாகியும் தமிழர்களிற்கான தீர்வு கிடைக்காத நிலையே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ். வந்த பாகிஸ்தானுக்கான பதில் உயர்ஸ்தானிகர் யாழ்.வணிகர் கழகத்தினரை அவர்களது அலுவலகத்தில் நேற்று முற்பகல் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் போதே யாழ்.வணிகர் கழகத்தால் மேற்படி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.



இச்சந்திப்பு தொடர்பில் யாழ்.வணிகர் கழக தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவிக்கையில்,

பாகிஸ்தானுக்கான பதில் உயர்ஸ்தானிகர் விஜயம் செய்திருந்தார். பாகிஸ்தான் அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் விளக்கமளித்திருந்தார். அதனடிப்படையில் இருநாடுகளிற்கிடையிலான ஏற்றுமதி இறக்குமதிகள் தொடர்பிலும் விளக்கமளித்திருந்தார்.

இரு நாடுகளிற்கிடையிலான ஏற்றுமதி இறக்குமதி தொடர்பில் இலங்கை அரசின் மற்றும் பாகிஸ்தான் அரசின் அனுசரணையுடனும் யாழ்.வணிகர் கழகத்தின் ஒத்துழைப்புடனும் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு ஒன்றை மிகவிரைவில் மேற்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்தனர்.

இதனைவிட யாழ்ப்பாணத்தில் தற்போது உள்ள தள நிலை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர். தமிழ் மக்களின் பிரச்சினைகள் இந்நாட்டிலே எவ்வாறு போர் ஏற்பட்டது?, இங்கு நடந்த சம்பவங்கள், மக்களின் இடப்பெயர்வு, மக்களின் அகதி முகாம் வாழ்வு மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் அவர் மிகுந்த அக்கறையுடன் கேட்டிருந்தார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி தொடர்பில் ஏதும் கோரிக்கை விடுக்கப்பட்டால் செய்து தருவதாக அவர் உறுதியளித்திருந்தார். குறிப்பாக யாழ்.போதான வைத்திய சாலை, யாழ்.பொது நூலகம் போன்ற விடயங்களில் உதவி செய்ய காத்திருப்பதாக அவர கூறியிருந்தார் என யாழ்.வணிகர் கழக தலைவர் தெரிவித்தார். (எ-4)

# மோசடிகளை விசாரிக்க கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் மேற்கொண்ட, மேற்கொள்கின்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் கால வரையறையின்றி நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் மற்றும் இன்னாள் அரசியல்வாதிகள், அரச ஊழியர்கள் மற்றும் நியதி சட்ட சபைகளில் கடமைபுரிவோர், மேற்கொண்ட ஊழல், மோசடிகள், குற்றவியல் நம்பிக்கை மீறல்கள், அரச சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பிலான முறைப்பாடுகளை ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் முன்வைக்கலாம் என அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, சொத்துக்களை சட்ட விரோதமாகப் பயன்படுத்துவதால் அரசாங்கத்துக்கு ஏற்படும் நஷ்டங்கள் தொடர்பான அனைத்து முறைப்பாடுகளையும் இங்கு முன்வைக்கலாம்.

இக்குற்றங்களை புரிபவர்கள் தொடர்பில் முறையிடுவதற்காக பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த காலம் கடந்த 10-ம் திகதியுடன் நிறைவு பெற்றமையினால் அதற்கான காலத்தை கால வரையறையின்றி நீடிக்க குறித்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பொதுமக்கள் முறைப்பாடுகளை பதிவு செய்யப்பட்ட தபாலில், ஆணைக்குழுவின் செயலாளர், 5-வது தொகுதி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு -7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என அதன் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

# மகேந்திரனுக்கு எதிராக கையெழுத்து வேட்டை

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை அந்த பதவியில் இருந்து நீக்கக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்துக்கள் பெறப்படவுள்ளன.

இந்த கையெழுத்துக்களை உள்ளடக்கிய மனு சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர்,

சிங்கப்பூரை சேர்ந்த மகேந்திரன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இருப்பதை அனுமதிக்க முடியாது.

அத்துடன் அண்மையில் மத்திய வங்கியில் ஏற்பட்ட பிணைமுறி கொள்வனவு விடயம் தொடர்பிலும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அந்த குற்றச்சாட்டில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டாலும் அவர் ஆளுநர் பதவிக்கு உரியவர் அல்லர் என்று பந்துலகுணவர்த்தன குறிப்பிட்டார். (எ-11)

# தென்மராட்சியில் கடும் மழை

தென்மராட்சி பிரதேசத்தில் ஒரு மணி நேரம் சுழல்காற்றுடன் பெய்த கடும்மழை மற்றும் இடிமின்னல் தாக்கத்தினால் பல இடங்களில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. நேற்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணி தொடக்கம் 3.30மணி வரை தொடர்ச்சியாக கண்ணைப் பறிக்கும் பயங்கர இடி மின்னலுடன் பெருமழை பெய்தது.

இந்தவேளை, சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில் ஏற்பட்ட திடீர் சுழல்காற்றினால் இரு கட்டடங்களின் கூரைத் தகடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. அப்பகுதியில் உள்ள தோட்டவெளியில் உருவான சுழல் காற்று அங்குள்ள அரைக்கும் ஆலையின் கூரைத் தகடுகளையும் அருகில் இருந்த வீட்டுக் கூரைத் தகடுகளையும் பிடுங்கி எறிந்தன.

இதேவேளை, மின்னல் தாக்கியதில் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மின் இணைப்புகள் முற்றாக எரிந்துள்ளன. பாடசாலை முடிந்து மாணவர்கள் அனைவரும் வீடு சென்றதால் பாதிப்பு ஏற்படவில்லை.(எ-11)

# கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுமி மரணம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பகுதியில் சிறுமி ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார். இச் சம்பவம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு தேவிபுரம் ஆ பகுதியை சேர்ந்த தேவிபுரம் அ.த.க பாடசாலையில் கல்வி பயிலும் மரியதாஸ் தமிழ்மதி (வயது - 7) என்ற சிறுமியே உயிரிழந்தவர் ஆவார்.

இச் சம்பவம் நடைபெற்றபோது அவரது தாயார் தோட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

மேற்படி உயிரிழந்த சிறுமியின் உடல் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-267)

# மெழுகுவர்த்தியால் வீடு முற்றாக எரிந்தது

(கரணவாய்)

தவறுதலாக மெழுகுவர்த்தியால் கல்வீடு ஒன்று முற்றுமுழுதாக எரிந்து நாசமான சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

கிளான் துன்னாலை தெற்கில் அமைந்துள்ள பிரதீபன் தில்லைநாதன் என்பவரது வீடே இவ்வாறு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று மாலை 5.30 மணியளவில் வேலை ஒன்று தொடர்பில் குறித்த வீட்டில் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டுள்ளது. தவறுதலாக மெழுகுவர்த்தி கீழே விழுந்ததில் வீட்டில் இருந்த புத்தகம், கடதாசியில் தீ பற்றியுள்ளது.

நெருப்பினை கட்டுப்படுத்துவதற்குள் வீட்டிலிருந்து அனைத்துப் பாகங்களுக்கும் நெருப்பு பரவி வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இதுதொடர்பில் உடனடியாக யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் படைக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் யாழ்ப்பாணம் நல்லூரிலிருந்து துன்னாலைக்கு செல்வதற்குள் வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இதுதொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். வடமராட்சிப் பகுதியில் தீயணைப்பு படைப்பிரிவு ஒன்று இயங்காதனாலேயே குறித்த தீயினை உடனடியாக கட்டுப்படுத்த முடியவில்லை என பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த தீயினை கட்டுப்படுத்த [illegible]வெட்டி பிரதேச செயலக தண்ணீர்வண்டி பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-60)


## யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 54ஆவது வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 26.04.2015 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைவர் திரு.சி.விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ சிகிச்சைப் பகுதி மண்டபத்தில் நடைபெறும் என்பதனை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருவதுடன் அனைவரையும் பொதுக் கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

சி.பாக்கியலிங்கம்
செயலாளர்

(183)

## தேவை

கப்பலில்/விமானத்தில் வேலை செய்ய விருப்பமா? துறைமுகம் விமான நிலைய வேலைக்கு ஆண்/ பெண் உடனடியாக தேவை. உயர் சம்பளத்துடன் (பின்னர் வெளிநாட்டு துறைமுகம்) விமான நிலையங்களில் வேலை)

இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்:-

0716476000

(157)

## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரியசந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். விமான நிலையம் (குனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/=-35000/= வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

தொடர்புகளுக்கு:-0766398366

(18)

## தேவை

மஞ்சி, மெலிபன், நெஸ்லே, ஏமாஸ், ரிஸ்பரி சொக்லட் தொழிற்சாலைகளுக்கு ஆண்/ பெண் தேவை.

18-55 வயது.

35,000/= உயர் சம்பளம்

(157)

இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்:-

0717002057


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு- கிழக்கைப் பிரித்தது போன்று

# இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்தியத்தை பிரிக்கவிடமாட்டோம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டு தமிழ் மக்களினை பிரித்து ஆட்சி செய்வது போன்று இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய அலுவலகத்தினையும் பிரித்து வன்னியில் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் ஒன்றுமாக செயற்பட அனுமதிக்க முடியாது என்ற கோசத்துடன் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.




இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய அலுவலகத்தின் கீழ் யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, ஆகிய ஏழு டிப்போக்கள் இயங்கி வந்துள்ளன. இதில் வடபிராந்திய முகாமையாளராக இருந்த ஏ.எஸ்.அஷ்கர் திடீரென கொழும்பிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டு மாற்றப்பட்டிருந்தார்.

இதனையடுத்து வடபிராந்திய போக்குவரத்து சாலை யாழ்.பிராந்தியம் வன்னி பிராந்தியம் என இரண்டாக முன்னறிவித்தல் இன்றி பிரிக்கப்பட்டு யாழ்.பிராந்திய முகாமையாளராக கே.கேதீஸ்வரனும், வன்னி பிராந்திய முகாமையாளராக ஏ.அஷ்கரும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு வடபிராந்தியம் வன்னி,யாழ்ப்பாணம் என துண்டாடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வன்னி பிராந்தியத்திற்குள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் சிலாபத்துறை உள்ளடங்கலாகவும் யாழ்.பிராந்தியத்திற்குள் யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி உள்ளடங்கலாகவும் வடபிராந்தியம் இரண்டு போக்குவரத்து சாலைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

1958 ஆம் ஆண்டு இலங்கை போக்குவரத்து சபை அமைக்கப்பட்ட போது வடபிராந்திய போக்குவரத்து சாலையும் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது புதிதாக வந்தவர்கள் தமது சுயநல நோக்கங்களிற்காக ஏழு டிப்போக்கள் கொண்ட சாலையை பிரிக்க முயற்சிக்கின்றனர்.

எங்களை பலதடவைகள் பிரிக்க முயற்சித்த போது எம்முடைய எதிர்ப்பு காரணமாக அது கைவிடப்பட்டு தற்போது எமது அமைச்சர்களே அதனை செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 17 டிப்போக்கள் உள்ள போதிலும் அவை அனைத்தும் ஒரே பிராந்திய சாலையின் கீழே இயங்குகின்றன. ஆனால் ஏழு டிப்போக்கள் மட்டுமேயுள்ள வடபிராந்திய சாலையினை தமது சுயநல நோக்கங்களுக்காக இரண்டாக பிரித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளை இரண்டாக பிரித்தனர், வடக்கு கிழக்கு மாகாணத்தை இரண்டாக பிரித்தனர்.இப்போது வடக்கு நிர்வாக எல்லையையும் இரண்டாக பிரிக்க முயல்கின்றனர். இது இப்போது போக்குவரத்து சபைக்கு இடம்பெறுகின்றது. நாளை இன்னொரு சபைக்கோ அல்லது திணைக்களத்திற்கோ இடம்பெறும்.

ஆகவே பிரிக்கப்பட்ட வடபிராந்திய சாலையை இணைக்க வேண்டும் என கோரியும் தொடர் பணிப்புறக்கணிப்பு உடனான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த னர். இதனால் சுமார் ஒரு மணித்தியாலங்கள் வரையில் அரச போக்குவர்த்து சேவைகள் தடைப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26.04.1948

மறைவு 10.05.2011

அமரர்

இளையதம்பி மகாலிங்கம்

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த எம் குலவிளக்கே
எம் வாழ்வில் ஒளி விளக்கேற்றிய தெய்வமே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - உங்கள்
நினைவுகள் பசுமையாக எம் மனதினில்
எப்போதும் தெய்வமாக சுமந்து நிற்போம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## இராசி பலன்

25.04.2015
(சித்திரை 12, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சப்தமி முன்னிரவு 8.30 மணிவரை
புனர்பூசம் மாலை 5.13 மணிவரை
இராகுகாலம் 9.00-10.30 மணிவரை
சுபநேரம் 3.00-4.30 மணிவரை

வளவன்

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்:** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பயணங்களால் பலனுண்டு, உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மிதுனம்:** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும், கணபதி வழிபாடு காரிய வெற்றிதரும்.

**கடகம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி:** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், செல்வ நிலை உயரும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்புகள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், எதிர்பாரா வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும் பயணங்களின் போது விழிப்புணர்ச்சி அவசியம்.

**மகரம்:** எடுத்த காரியங்களை நிறைவேற்ற பெரிதும் பாடுபடுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, களஸ் திர நன்மையுண்டு.

**கும்பம்:** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ் தாபங்கள் அகலும், கடன் பிர சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தேகாரோக் கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், கல்வி நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 186**

## பொறாமையிலிருந்து விடுதலை



எனக்குப் பக்கத்தில் இருக்கும் இந்த மணியை எடுத்துக்கொள் ளுங்கள். இந்த மணியை நான் இங்கிருந்து அகற்ற விரும்பினால், இதை நான் சுலபமாக இந்த அறைக்கு வெளியே கொண்டு வைத்து விட முடியும். அதற்குப் பிறகு அது அங்கு இங்கு இருக் காது. சரிதானே? இந்த மணிக்கு நேர்மறை இருப்பு இருப்பதால் என்னால் இதைச் செய்ய முடிகிறது. நாம் இப்பொழுது இந்த அறையில் இருள் இருப்பாக வைத்துக்கொள் வோம். உங்களால் அந்த இருளை எடுத்து வெளியே வைக்க முடி யுமா? முடியாது...

ஆனால் நான் இந்த அறைக்குள் ஒ ளியைக்கொண்டு வந்தால் இருள் தானாகவே மறைந்துவிடுகிறது. சரிதானே? ஏனெனில், இருளிற்கு நேர்மறையான- இருப்பு கிடை யாது. இது எதிர்மறையான- இரு ப்பை உடையது. அதற்கு எதிர்மறை இருப்பு இருப்பதால் நம்மால் அதைச் சுலபமாக அகற்ற முடியாது.

அதேபோல், ஒப்பிடுவதற்கு நேர் மறையான இருப்பு கிடையாது. அது நம் மனதில் மட்டுமே இருக் கிறது; இது நம் மனதில் ஒருவித மான எண்ணத்தைச் செயற்படுத் தும் பொழுதே நிகழ்கிறது. ஒப்பிடு தல் நிஜத்தில் இல்லாமததால், உங்களால் அதைச் சுலபமாக வெளி யேறச் சொல்லி வெற்றி கொள்ள முடியாது. வெளிச்சத்தைக்கொண்டு வரும் பொழுது இருள் மறைவது போல உங்கள் மனதில் ஒரு புரிந்து கொள்ளுதலைக் கொண்டு வருவதன் மூலம் அதை வெல்ல முடியும். சமஸ்கிருதத்தில் மாயை, மாயா என்று மொழி பெயர்க்கப்படுகிறது. யாமா இதி மாயா என்று சொல்கி றோம்; அதன் பொருள், எது இல் லையோ அது மாயா எனப்படுகிறது!

எது இல்லையோ, அது தொடர்ந்து தொல்லை கொடு த்துக்கொண்டிருக்கிறது! அதுதான் மாயையின் தன்மை! நீங்கள்தான் அதற்கு உயிர் கொடுக்கிறீர்கள். அவ்வளவு தான். ஒப்பிடுதல் கலப்பட மற்ற மாயை சொல்லுங்கள்...?

ஸ்வாமிஜி, நாம் வரிசையில் எந்தப் பக்கத்தையுமே பார்க்காமல் இருப்பதே மிகவும் நல்லது!

ஏன் அவ்வாறு சொல்கிறீர்கள்? மேலும் எப்படியாயினும், பார்ப்பத ற்கு ஏன் பயப்படுகிறீர்கள். நீங்கள் அதைப் பார்க்க பயப்படுவதே உங்கள் மனதிலிருந்து தப்பி ஓடப் பார்க்கி றீர்கள் என்பதைக் காட்டுகிறது. உங்களால் பாதிக்கப்படாமல் பார்க்க முடியுமானால், நீங்கள் சரியான வழி யைக் கண்டுபிடித்து விட்டீர்கள்.

உங்களால் எல்லாவற்றையும்- உங்களிடம் இருப்பதையும் மற்றும் மற்றவர்களிடம் இருப்பதையும் பார்க்க முடியுமானால் அதன் பிறகும் உங்களால் எப்பொழுதும் நிறைவாக இருக்க முடியுமானால் இந்தச் சக்கரமானது சக்தியூட்டப் பட்ட நிலையிலேயே இருக்கும் பாருங்கள், மிகவும் தெளிவாக இருங்கள்...

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



# அதிசய உலகம்

### 4 வயதில் முன்ஜென்ம கணவனைத் தேடியலைந்த அதிசய சிறுமி...

டெல்லியில் 1926 ஆம் ஆண்டு சாந்தி தேவி என்பவர் பிறந்தார். அவர் 4 வயது குழந்தையாக இருந்தபோது, தான் மறுபிறவி எடுத்துள்ளதாக, தன்னுடைய பழைய நினைவுகளை கூற ஆரம்பித்து அனைவருக்கும் ஆச்சரியம் அளித்தார். இதைத் தொடர்ந்து சாந்தி தேவியை சுவிடன் நாட்டு எழுத்தாளர் பேட்டி எடுத்தார். இந்த பதிப்பு 1994 ஆம் ஆண்டு வெளியானது. ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்ட பதிப்பு 1998 ஆம் ஆண்டு வெளிவந்தது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:- 'சாந்தி தேவி 4 வயதாக இருந்தபோது, தனது பெற்றோர்களிடம், தன்னுடைய உண்மையான வீடு மதுராவில் இருப்பதாகவும், அங்கு தன் கணவனுடன் வாழ்ந்து கொண்டிருந்தாகவும், தற்போது டெல்லியில் உள்ள இடத்தில் இருந்து 145 கி.மீ தொலைவில் அந்த வீடு உள்ளதாகவும் கூறியுள்ளார்.



இதையெல்லாம் பெற்றோர்கள் கண்டு கொள்ளாத காரணத்தால் அவர் தனது 6 ஆவது வயதில் வீட்டை விட்டு வெளியேறி, தன் கணவனை தேடி மதுரா செல்ல முயன்று பின்னர் வீடு திரும்பினார். பள்ளியில் இது தொடர்பாக அவளின் ஆசிரியர் மற்றும் தலைமையாசிரியர் அவளிடம் விசாரிக்கையில், தனக்கு திருமணம் ஆகிவிட்டதாகவும், குழந்தை பிறந்து 10 நாட்களில் தான் இறந்து விட்டதாகவும் கூறியுள்ளார்.


அப்போது அவளின் ஒவ்வொரு வார்த் தையும் மதுரா பாணியில் இருந்துள்ளது. தனது கணவர் ஒரு வணிகர் என்றும், அவர் பெயர் கேடார் நாத் எனவும் குறிப் பிட்டுள்ளார்.

இதனை கேட்ட தலைமையாசிரியர் அதிர்ச்சியடைந்தார். ஏனெனில் அவருக்கு மதுராவில் கேடார் நாத் என்ற வணிகர் தெரியும். அவரது மனைவியும் 9 வருடங் களு க்கு முன் குழந்தையை பெற்று 10 நாட்களில் இறந்துள்ளார். அவரது பெயர் ஹலுக்டி தேவி.'

கேடார் நாத் டெல்லி வந்தபோது, அவரையும், அவரது குழந்தையும் எளிதாக அடையாளம் கண்டுள்ளார் சாந்தி தேவி. இது கேடார் நாத்திற்கு ஆச்சரியத்தை அளித்தது. அதுமட்டுமல்லாது லுக்டி தேவியின் பல தகவல்களை கூறி அனைவரையும் வியப்பில் ஆழ்தியுள்ளார் சாந்தி தேவி. இதனை கேட்ட கேடார் நாத், சாந்தி தேவி, லுக்டி தேவியின் மறுபிறவி தான் என்று அடித்துக் கூறினார்.இதை பற்றி அறிந்த மகாத்மா காந்தி அந்த குழந்தையை நேரில் சென்று சந்தித்து, இது தொடர்பான விசாரணையில் அதிரடியாக களமிறங்கினார்.

இந்த விசாரணை குழு, சாந்தி தேவியை அழைத்து கொண்டு 1935 ஆம் ஆண்டு மதுரா புறப்பட்டது. அப்போது அந்த பகுதியில் இருந்த சில அக்கம்பக்கத்து வீட்டு மனிதர்களை அடையாளம் கண்ட சாந்தி தேவி, லுக்டி தேவியின் தாத்தாவையும் அடையாளம் கண்டார். மேலும், லுக்டி தேவி மரணப்படுக்கையில் இருந்தபோது கொடுத்த வாக்குறுதி அனைத்தையும் கேடார் நாத் புறக்கணித்தையும் கூறி ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளார். பின்னர் அந்த சிறுமி தனது பெற்றோர்களுடன் வீட்டுக்கு திரும்பினார்.

சாந்தி தேவி அதன் பிறகு திருமணம் செய்து கொள்ளவில்லை. அவர் 1987 ஆம் ஆண்டு 27, டிசம்பர் அன்று இறந்தார்.



# சமைப்போம் சுவைப்போம்

## பக்கோடா



**தே.பொருட்கள்:**

உதிர்த்த மக்காச்சோளம் -1 கப் நறுக்கிய வெங்காயம்-1 கப் ஸ்வீட் கார்ன், வெள்ளைச் சோளம்- தேவையானஅளவு, பச்சரிசி பச்சை மிளகாய்- 4, உப்பு-சிறிதளவு, எண்ணெய்- தேவையானஅளவு

**செய்முறை**

பச்சரிசி வெள்ளைச்சோளம் ஆகியவற்றை தனிதனியாக ஒரு மணி நேரம் ஊறவைத்து வடிகட்டவும். இவற்றை ஒன்றாக மிக்ஸியில் போட்டு உதிர்த்த மக்காச்சோளம், ஸ்வீட்கார்ன், நறுக்கிய பச்சை மிளகாய், சிறிதளவு உப்பு சேர்த்து கரகரப்பாக அரைக்கவும். பின்னர் நறுக்கிய வெங்காயம் மற்றும் கறிவேப்பம் இலைகளை சேர்த்து நன்கு கலந்து சூடான எண்ணெயில் கிள்ளிப்போட்டு பொரித்து எடுத்து பரிமாறவும். ஸ்வீட் கார்ன் சேர்க்காமல் செய்து சர்க்கரை நோயாளி களுக்கு கொடுக்கலாம். கூடுதல் சுவைக்கு பூண்டு பல்லை நறுக்கி சேர்க்கலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# விசாரணையை துரிதப்படுமாறு உத்தரவு

சட்டவிரோதமாக மற்றும் முறையற்ற வகையில் நிதி சேகரித்தமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன குறித்து முன் எடுக்கப்படும் விசாரணையை துரிதப்படுத்துமாறு கோட்டை நீதவான் கிஹான் பிலப்பிட்டிய நேற்று உத்தர விட்டுள்ளார்.இந்த உத்தரவு இரகசிய பொலி ஸாருக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரகசிய பொலிஸாருக்கு மோசடி எதிர்ப்பு முன்னணியினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் நேற்று இடம் பெற்ற வழக்கு விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சஜின் வாஸ் குணவர்த்தன வுக்கு சொந்தமான 21 நிறுவனங்களின் வருமானம் தொடர்பாக இரகசிய பொலிஸா ருக்கு உடனடியாக அறிக்கை வழங்குமாறு கோட்டை நீதவான் இதன்போது, தேசிய வருமானவரி திணைக்களத்திற்கு உத்தர விட்டுள்ளார். (இ-5)



## தந்தை செல்வா 38 ஆவது ஆண்டு நினைவு நாள்-26.04.2015

## அஞ்சலியும் நினைவுரையும்

காலம்:- 26.04.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30மணி.

இடம்:- தந்தை செல்வா நினைவிடம்
தந்தை செல்வா சதுக்கம்,
யாழ்ப்பாணம்.

தலைவர்:- பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்கள்
(தலைவர்,தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு)

**நிகழ்ச்சிகள்**

**தந்தை செல்வா சிலைக்கு மலர்மாலைகள் அணிவித்தலும் சமாதியில் மலர் அஞ்சலி செலுத்தலும்**

வரவேற்புரை:- பேராசிரியர் ச.சத்தியசீலன்
(செயலாளர்,தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு)

அஞ்சலியுரைகள்:- மௌலவி M.I.மஹ்மூத் (பலாஹி)
அருட்தந்தை C.S.ஜெயக்குமார் அடிகள்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமச்சாரிய சுவாமிகள்

சிறப்புரை:- திரு.கனக மனோகரன்
(சட்டத்தரணி,கனடா)

நினைவுப்பேருரை:- "செந்தமிழ் சொல்லருவி" ச.லலீசன் அவர்கள்

நன்றியுரை:- திரு.வி.ஜி.தங்கவேல்
(தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு உறுப்பினர்)

**தமிழ் தேசியத்தின் தந்தை அவர்களை நினைவுகூரும் இந்த அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**தந்தை செல்வா**
**நினைவு அறங்காவற் குழு**

# நாடாளுமன்றில் இடம்பெற்ற போராட்டத்தில் மதுபானம் அருந்தப்பட்டதா என விசாரணை

(கொழும்பு)

நாடாளுமன்றில் நடைபெற்ற போரா ட்டத்தின் போது மதுபானம் அருந்தப்பட்டதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வுள்ளது.

அண்மையில் நாடாளுமன்றிற்குள் எதிர்க கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர் போராட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

அன்றைய இரவை அவையிலேயே கழித்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவிற்கு அழைக்கப்பட்டமையை எதிர்த்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டிருந்து.

குறித்த தினத்தில் மதுபானம் வெளியி லிருந்து தருவிக்கப்பட்டு அருந்தப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளதாக ஆளும் கட்சியினர் தெரிவித்து ள்ளனர்.

நாடாளுமன்ற உணவகத்தில், மோத ல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்படும் என ஆளும் கட்சியினர் தெரி வித்துள்ளனர். (இ-5)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/613 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 79 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/1056 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 4<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>தொ.இ: B/619 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 48 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1058 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: B/623 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 54 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1059 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 67<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/625 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 16<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDA, AAT/ கணக்காளர்<br>தொ.இ: G/1063 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல் லத்தில் கீழ்வரும் ஆசிரியர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்படி பாடங்களில் பட்டத்தினைப் பூர்த்தி செய்த ஆண், பெண் பட்டதாரிகளும் பட்டதாரி பரீட்சைக்கு தோற்றியவர்கள் இருபாலாரும் தங்கள் விண்ணப்பங்களை 30.04.2015க்கு முன்பாக தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பாடங்களின் விபரம்:-**

சங்கீதம், நடனம், வரலாறு, தமிழ், கணிதம், விஞ்ஞானம், புவியியல், குடியியல், ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT), நாடகமும் அரங்கியலும், விவசாயம்.

குறிப்பு:-
- இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்
- தங்குமிடம், உணவு, பராமரிப்பு செலவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்.
- சம்பளம் மாதம் ரூபாய் 18000க்கு குறையாது வழங்கப்படும்.
- சம்பளத்துக்காக மட்டுமன்றி தியாக மனப்பான்மையும் சமூக சேவையில் ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

கடித உறையின் இடதுப்க்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண் ணப்பம் என்பதனைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட் டுக் கொள்கின்றோம்

(சி-790) **விண்ணப்ப முடிவுத் திகதி:-30.04.2015**

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-
தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல:-0770604950, 0214922318
மின்னஞ்சல் முகவரி:-rasa46@yahoo.com


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தலைவர்களுடைய ஆலோசனைகளைக்கூட புதிய அரசு பெறவில்லை!

## 100 நாள் திட்டம் குறித்து சித்தார்த்தன் கருத்து

**(யாழ்ப்பாணம்)**

**100 நாட்கள் வேலைத்திட்டத்தை தமிழ்த் தலைவர்களூடாகவே அவர்களின் ஆலோசனைகளை பெற்றோ மைத்திரி அரசு மேற்கொண்டிருக்கவில்லை என யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் குற்றம் சாட்டியுள்ளார்.**

100 நாட்கள் வேலைத்திட்டம் தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுபான்மையின மக்கள் ஆட்சியில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே வாக்களித்திருந்தனர். பாரிய அளவிலான மாற்றங்களை புதிய அரசிடம் இருந்து எதிர்பார்க்கவுமில்லை.

தமிழ் மக்களின் எதிர்பார்த்திருந்த அடிப்படை தேவைகள் கூட உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை.

நாம் அரசாங்கத்தை ஆதரித்தாலும் அரசாங்கத்துடன் இல்லை. ஆனால் நடைமுறை விடயங்களில் கூட தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களுக்கு உரிய இடம் கொடுத்து செயற்படவில்லை.

இந்த அரசு தமது கட்சியின் ஊடாகவும் கட்சி அமைச்சர்களின் ஊடாகவும் தான் இந்த 100 நாட்கள் வேலைத்திட்டத்தை மைத்திரி அரசு மேற்கொண்டிருந்தது. மீள்குடியேற்றம் பெரிய அள வில் இடம்பெறா விட்டாலும் அந்த செயற்பாட்டை வரவேற்கின்றோம். ஆனால் அது விரைவாக நடை பெறவில்லை என்பது கவலை அளிக் கின்றது.

காணாமற் போனோர் தொடர்பாகவும் சிறைக்கைதிகள் தொடர்பாகவும் எந்த ஒரு விடயமும் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறான விடயங்களை தான் நாம் எதிர்பார்த்திருந்தோமே தவிர இனப்பிரச்சினைக்கான தீர்வை தற்போது எதிர்பார்த்திருக்கவில்லை.

எனவே இந்த 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் மக்கள் எதிர்பார்த்த அடிப்படை விடயங்களைக் கூட உரிய முறையில் திருப்திகரமாக நிறைவேற்றப்படவில்லை என்றே கூற முடியும் என அவர் தெரிவித்தார். (இ-9)

# டிமிக்கிகொடுத்த நபரை மடக்கிப்பிடித்த பொலிஸ்

## இரண்டு மணிநேரம் துரத்தினராம்

(கரணவாய்)

பொலிஸாரைக் கண்டு ஓட்டம் பிடித்த நபரை இரண்டு மணித் தியாலங்களுக்கு மேலாக துரத்திய வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் தமது முயற்சியை கைவிட்டுச் சென்ற வேளை எதிர்பாராத விதமாக ஓய்வெடுத்துக் கெண்டிருந்த அவரை மடக்கிப்பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு கரவெட்டிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

நெல்லியடி- கொடிகாமம் வீதியில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரைக் கண்ட நபர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு ஓடியுள்ளார்.

இதனை அவதானித்த பொலிஸார் அந்நபரைப் பின் தொடர்ந்துள்ளனர். பிரதான வீதியிலிருந்து சிறு ஒழுங்கைகள் ஊடாக மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற நபரை பொலிஸாரும் விடாது துரத்தியுள்ளனர்.

சுமார் இரண்டரை மணித்தியாலங்களாக பிரஸ்தாப நபரைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட பொலிஸார் முயற்சி பயனளிக்காத நிலையில் அதனைக் கைவிட்டு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் பிரஸ்தாப நபர் பொலிஸார் தன்னைத் துரத்துவதை கைவிட்டு விட்டதை உணர்ந்த நிலையில் கரவெட்டி வைத்தியசாலை அருகே ஓய்வெடுத்துக் கொண்டிருந்துள்ளார்.

எதிர்பாராத விதமாக அங்கு வந்த பொலிஸார் குறித்த நபர் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதை அவதானித்துள்ளனர்.

உடனடியாக உஷாரடைந்த பொலிஸார் அவர் தனது மோட்டார் சைக்கிளை இயக்கி தப்பியோட முன்னர் அவரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் தற்பொழுது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். பிரஸ்தாப நபரிடம் வாகன அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி பத்திரம் என்பவை இருக்கவில்லை என்பதுடன் இது தொடர்பாக பொலிஸார் 5 குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர். அதேவேளை இந்த நபர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்யவுள்ளனர். (இ-3-60)




# குழைபோட்டு கணவாய் பிடித்த எட்டு மீனவர்களுக்கும் மறியல்

வடமராட்சி கிழக்கு தாளையடி பிரதேசத்தில் கடற்றொழில் நீரியல் வளத்துறையினர் மீன்பிடி அனுமதிப்பத்திரம் இன்றி மீன்பிடிக்கு இடையூறாக கணவாய் குழைகளை பயன்படுத்தி தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட 8 மீனவரையும் மே மாதம் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக் குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா நேற்று உத்தர விட்டுள்ளார்.

கடந்த 23ஆம் திகதி கடற்படையினரின் உதவியுடன் நீரியல் வளத்துறையினர் மேற் கொண்ட சோதனை நடவடிக்கையின் போது பருத்தித்துறை தாளையடி பிரதேசத்தில் கணவாய் குழைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 4 படகுகளில் இருந்து 8மீனவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் 22ஆம் திகதி வரை அவர்களின் படகுகள், இயந்திரங்கள் யாழ் கடற்றொழில் நீரியல் வளத்துறையினரின் பாதுகாப்பில் வைக்குமாறு நீதிபதி உத்தர விட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 7ஆம் திகதி அனும திப்பத்திரம் பெறப்படாமல் அதேபிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட்ட 7பேர் கைது செய்ய ப்பட்டு 8ஆம் திகதி 13 அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு 22ஆம் திகதி வழக்கு விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 6 பேரு க்கும் தலா ஐந்தாயிரம் ரூபாய் தண்டமாக அறவிடும் படி பருத்தித்துறை நீதவான் உத் தர விட்டிருந்தார். ஒருவர் தான் குற்றவாளி என்று கூறியதை அடுத்து அவருடைய வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-9)

# சதுரங்கப்போட்டி இன்றும் நாளையும்

(குடத்தனை)

பருத்தித்துறைதிருநாவலூர்விளையாட்டுக்கழகம் வடிவேலு இலங்கேஸ்வரனின் நினைவாக யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்படும் இவ்வாண்டுக்கான சதுரங்க சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் திருநாவலூர் சனசமூக நிலையத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

9,11 வயது மற்றும் 13 வயதுப் பிரிவு மாணவர்களுக்கு இன்று சனிக்கிழமையும் 15, 17, 19 வயதுப் பிரிவு மாணவர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

இதேவேளை ஆண், பெண்களுக்கான திறந்த சதுரங்கப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. போட்டிக ளில் பங்குபெற விரும்புவோர் 0776103259 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (இ-3-20)

# தேர்த்திருவிழா

வட்டுக்கோட்டை- அடைக்கலந்தோட்டம் திருவருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் திவ்ய மஹோற்சவ விஞ்ஞாபனம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான அதேவேளை தேர்த்திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு இடம்பெறும்.

மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ

# வளமான எதிர்காலத்திற்கான முதலீடு மலேரியா நோயைத் தோற்கடிப்பதே!

உலகெங்கும் ஆண்டொன்றிற்கு 1300 சிறார்களை உயிர்ப் பலி எடுக்கும் ஆட்கொல்லி நோயா கிய மலேரியா நோய்க்கு எதிராக உலக மலேரியா தினம் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின் றது. "வளமான எதிர்காலத்திற்கான முதலீடு மலேரியாவை தோற்கடி ப்பதே" (invest in future defeat malaria) எனும் தொனிப் பொரு ளில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இலங்கையில் மலேரியா நோயானது 1962 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 1.5 மில்லியன் மக் களை நோய்த் தாக்கத்திற்கு உள் ளாக்கி 7 மாதங்களில் பலியெடுத்த உயிர்களின் எண்ணிக்கை 80,000 ஆகும்.

தற்போது இலங்கையில் மலேரியா நோயானது அனைவரினதும் அர்ப்பணிப்பான சேவைகளினால் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் உள்ளூர் மலேரியா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை முற்றாக தடுக்கப்பட்ட போதும் வெளிநாடுகளில் இருந்து வரும் நோயாளர்கள் இன்னமும் இனம் காணப்பட்ட வண்ணம் உள்ள னர்.

தேசிய ரீதியில்

2013-95 நோயாளர்கள்
2014-49 நோயாளர்கள்
2015-04 நோயாளர்கள்
இன்றுவரை

இதேவேளை யாழ். மாவட்டத்திலும் [illegible] இருந்து மலேரியா தொற்றுடன் வந்த நோயாளிகளின் எண்ணிக்கையானது

2013 - 03 நோயாளர்கள்
2014-01 நோயாளர்கள்
2015- 00 நோயாளர்கள்
இன்றுவரை

இவ்வாறான மலேரியா நோயற்ற நிலையானது இலங்கையில் கடந்த 1962 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலவிய போதும் மலேரியா சம்பந்தமான விழிப்புணர்வு நடவடிக்கைகள் நலிவடைந்த காரணத்தினால் மீண்டும் மலேரியா நோயானது உக்கிர நிலையில் பரவலடையத் தொடங்கியது.

எனவே மலேரியா நோய் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள பின்வரும் நடைமுறைகளைக் கையாள்வதன் மூலம் மலேரியா அற்ற இலங்கையை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைவோம்.

1. மலேரியா தொற்றுடைய நாடொன்றிற்கு செல்வதற்கு முன்னர் மலேரியா தொற்றப்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கான முன் சிகிச்சை மருந்துகளைப் பெற்றுக் கொள்ளவும். (அருகில் உள்ள அரச சுகாதார நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்)

2. மலேரியா காணப்படும் நாடொன்றில் இருந்து வருகை தரும் போது மலேரியாவை இனங்கண்டு கொள்வதற்கான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவும்.

3. காய்ச்சல் இருப்பின் மலேரியாவை இனங்காண்பதற்கான எளிமையான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவும்

4. நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்படைவதற்கு நுளம்பு வலைகளை பயன்படுத்தப் பழகிக் கொள்ளவும்.

யாழ்.மாவட்ட மலேரியா விழிப்புணர்வு நிகழ்வுகள்- 2015

- தெருவெளிநாடகமும்
- மலேரியா விழிப்புணர்வை முன்னிட்டு "நுளம்பிற்கு எதிராக ஒன்றிணைவோம்" என உறுதியெடுத்து பொது மக்களிடமிருந்து கையொப்பம் பெறும் நிகழ்வும் பின்வரும் ஒழுங்குகளில் நடைபெற இருக்கின்றன.

28.04.2015

- ❖ காலை 8 மணி- யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையம்
- ❖ மு.ப. 10 மணி- சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையம்
- ❖ மு.ப.11 மணி- மல்லாகம் பஸ்தரிப்பு நிலையம்
- ❖ பி.ப. 2 மணி- மானிப்பாய் பஸ்தரிப்பு நிலையம்

29.04.2015

- ❖ காலை 9 மணி- சாவகச் சேரி பஸ்தரிப்பு நிலையம்
- ❖ மு.ப. 10 மணி- கொடிகாமம் பஸ்தரிப்பு நிலையம்
- ❖ மு.ப. 11 மணி- நெல்லியடி பஸ்தரிப்பு நிலையம்
- ❖ பி.ப. 2 மணி- பருத்தித்துறை பஸ்தரிப்பு நிலையம்
- ❖ பி.ப. 4 மணி- அச்சுவேலி பஸ்தரிப்பு நிலையம்

வைத்திய கலாநிதி
**அ.ஜெயக்குமரன்**
பிராந்திய வைத்திய அதிகாரி,
பிராந்திய மலேரியா தடை இயக்கம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா எம் தொப்புள் கொடி; சென்னை சென்ற யாழ்.மாணவர்கள்

## அரசியல்வாதிகள் அல்லாத, மீனவர்கள் அல்லாத மாணவர் விஜயம் இது



இலங்கை வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் விமான நிலையச் செயற்பாடுகள் குறித்த பயிற்சிக்காக சென்னை வந்திருந்தனர். கல்வியின் அவசியத்தின் ஒரு பகுதியாக இந்தப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கைக்கான இந்தியத் தூதர் நட்ராஜின் முயற்சியால், 30 பேர் கொண்ட யாழ்ப்பாண மாணவர் குழு தமிழகச் சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டது.

இந்தக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கிரிதரன், "யாழ்ப்பாணத்தில் சர்வதேச விமான நிலையம் அமைய வாய்ப்பிருக்கிறது. இந்தச் சூழலில் விமானத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், விமான நிலைய செயற்பாடுகளை அறிந்துகொள்வதற்காக இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்றார்.

யாழ்ப்பாணம், வன்னி, வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 மாணவர் - மாணவியர் இந்தச் சுற்றுப் பயணத்தல் பங்குபற்றுள்ளனர். அவர்களிடம் உரையாடியதில் இருந்து...

**"சிறிசேன அரசு இலங்கையில் என்னென்ன புதிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?"**

"உள்நாட்டு விமான நிலையங்கள் அனைத்தும் சர்வதேச விமான நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும். எங்கள் சொந்த மண்ணிலேயே பணியாற்ற வேண்டும். முக்கியமாக, பட்டதாரி இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்த வேண்டும். இலங்கையால் மட்டுமே இது சாத்தியப்படாது. அண்டை நாடான இந்தியாவும் எங்களுக்கு உதவ செய்ய வேண்டும். யாழ்ப்பாணம் மட்டுமின்றி, ஏனைய பகுதிகளிலும் புதிய கல்வி நிலையங்களை உருவாக்க எங்கள் அரசு முயற்சி எடுக்க வேண்டும். மேலும், போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த இலங்கை அரசு முயற்சிகளை எடுக்க வேண்டும்."

**"போர் முடிந்து ஐந்தரை ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இலங்கையில் தமிழர்களின் நிலை எப்படி இருக்கிறது?"**

"விலைவாசி அதிகமாகவும் வேலைவாய்ப்புகள் குறைவாகவும் இருக்கின்றன. பணிக்காக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே செல்ல வேண்டிய சூழல் இருக்கிறது. வட மாகாணம் முழுவதும் இதே நிலைதான். இந்த நிலை மாறவேண்டும்."

**"இந்திய அரசிடமிருந்து என்ன மாதிரியான உதவிகளை எதிர்பார்க்கிறீர்கள்?"**

"போர் முடிந்தவுடன் இந்திய அரசானது பல நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. ரயில்வே துறையில் இந்தியாவின் பங்கு அதிகம். இதுமட்டுமின்றி, வீடமைப்புத் திட்டம், வீதியமைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களை தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது. இப்போது நிலவக் கூடிய விலைவாசியில் வெளியிலிருந்து வட்டிக்குப் பணம் பெற்றுத்தான் வீடுகளைக் கட்டி முடிக்கும் சூழலில் பலரும் உள்ளனர். ஆக், இந்திய அரசு கொடுக்கும் மானியத்தை உயர்த்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும். யாழ்ப்பாணத்தில் சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்கான முயற்சிகளில் இந்திய அரசு ஈடுபட வேண்டும்."

**"இந்திய பிரதமர் மோடியின் இலங்கை பயணத்தைத் தொடர்ந்து தமிழர்கள் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா?"**

"காலங்காலமாக இந்தியாவை நம்பித்தான் இலங்கைத் தமிழர்கள் இருக்கிறார்கள். அது என்றைக்கும் மாறாது. போருக்குப் பிறகு எந்த நாட்டு பிரதமரும் யாழ்ப்பாணத்துக்கு வந்தது இல்லை. பிரதமர் மோடியின் வருகை தமிழர்களுக்கு மேலும் நம்பிக்கை கொடுத்திருக்கிறது. 'எங்களைப் பற்றி யோசிக்கவும் எங்கள் மீது அக்கறை காட்டவும் ஒரு நாடு இருக்கிறது' என்ற புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது."

**"புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?"**

"புலம்பெயர்ந்து வாழும் எங்கள் மக்கள் நாடு திரும்ப வேண்டும். உங்கள் உதவிக்காக இங்கு பலரும் காத்துக்கொண்டிருக்கிறோம்."

**"இந்தச் சுற்றுப் பயணத்தின் முக்கிய நோக்கங்கள் என்ன? என்ன கற்றுக் கொண்டீர்கள்?"**

"விமானங்கள், விமான நிலையங்கள் இந்த இரண்டுமே எங்களுக்குப் புதிய விடயங்கள். இந்தத் துறையில் பணிபுரிவது எங்கள் கனவாக இருந்தது. ஆனால், அதற்கான படிப்புகள் இலங்கைத் தலைநகரான கொழும்பில் மட்டுமே இருந்தன. தற்போது, பல நல்ல உள்ளங்களின் பெரு முயற்சியோடு யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்டு அதன் முதல் முயற்சியாக இந்தியாவுக்குக் குழுவாக வந்திருக்கிறோம். வகுப்புகளில் விமானங்களைப் பற்றி நிறைய கேட்டிருக்கிறோம். ஆனால், பயணம் செய்ததில்லை. மேலும், எங்கள் பகுதிகளுக்கு அருகே விமான நிலையங்களும் கிடையாததால், வாழ்நாளில் விமானத்தில் ஒருமுறையாவது பயணம் செய்யமாட்டோமா என்று ஏங்கிக்கொண்டிருந்தோம். இந்த நேரத்தில் இந்திய அரசு எங்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க நாங்கள் தமிழகம் வந்திருக்கிறோம்."

ஜூனியர் விகடன்



### தேர்தல் முறைமை மாற்றத்தின் ஊடாக

# சிறுபான்மை இனத்தவருக்கு நியாயம் கிடைக்க வேண்டும்!

## ரவூப் ஹக்கீம் வலியுறுத்து

சிறுபான்மை மக்களுக்கும் நியாயம் கிடைக்கும் வகையில் தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமை மாற்றத்தின் போது பெரும்பான்மை சமூகத்தைப் போன்றே சிறுபான்மை சமூகத்திற்கும் நியாயம் கிட்டும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

19 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தால் அது ஓர் சுபமான விடயமாக கருதப்பட்டிருக்கும்.

எனினும், 19 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த விடாது எதிர்க்கட்சிகள் தடை ஏற்படுத்தி வருகின்றன.



திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த 27 ஆம் திகதி வரையில் கால அவகாசம் கோரப்பட்டது.

கோல் அடிப்பதற்கு செல்லும் போது கோல் கம்பத்தை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வது போன்று எதிர்க்கட்சிகள் 19 ஆம் திருத்தச் சட்ட அமுலாக்கத்தை காலம் தாழ்த்தி வருகின்றன.

தேர்தல் முறைமை மாற்றத்தின் போது பிரதான இரண்டு கட்சிகளினதும் தேவைகள் மட்டும் கருத்திற்கொள்ளப்படக் கூடாது.

ஏனைய கட்சிகள் ஏனைய இன சமூகங்களினதும் கருத்துக்கள் கோரப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## இலங்கை உறவில் பாதிப்பில்லையாம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தினால் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் பாதிப்பு ஏற்படாது என்று சீனா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சீனாவின் தூதுவர் ஈ சியாங்லியாங், சீனாவின் சின்ஹுவா ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் வரலாற்று காலம் தொடட்டு நல்லுறவு காணப்படுகிறது.

புதிய அரசாங்கத்தின் கீழ் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர ஒத்துழைப்பு உறவுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே பல இணக்கப்பாடுகள் காணப்பட்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு எதிர் காலத்திலும் மேலோங்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய வங்கி திறப்பு விழா

(மல்லாவி)

வவுனியா வடக்கு ப.நோ.கூட்டுறவு சங்கத்தின் கிராமிய வங்கி திறப்புவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 7மணி தொடக்கம் 9மணி வரையுள்ள சுப வேளையில் மேற்படி கூட்டுறவு சங்கத்தலைவர் சி.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் கூட்டுறவுத் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின்பதிவாளருமானதிருமதி. மதுமதி வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு வங்கி கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளனர்.


கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா வடக்கு பிரதேசசபை தவிசாளர் மு.பாலசுப்பிரமணிம், அகில இலங்கை கூட்டுறவு சபை தலைவர் டபிள்யூ.லலித் ஏ.பீரிஸ், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.ரவீந்திரநாதன், வவுனியா மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் இ.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-15)

# வர்த்தகர்களின் கோரிக்கைகளைப் புறந்தள்ளி விளம்பரப்படுத்தியுள்ளது பூநகரி பிரதேச சபை

(மல்லாவி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆளுகைக்குட்பட்ட பூநகரி பிரதேச சபையின் கீழுள்ள நாச்சிக்குடா சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முழங்காவில் பொதுச் சந்தையில் அமையப் பெற்றுள்ள வர்த்தகநிலையங்களை முன்னர் வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு வழங்குமாறு பல தடவைகள் பிரதேச சபைக்கு கோரிக்கை விடுத்திருந்த நிலையில் கேள்வி மனுக் கோரல் மூலம் வர்த்தக நிலையங்களை வழங்குவதற்கு விளம்பரப்படுத்தப்பட்டது.

இததையடுத்து பழைய பொதுச் சந்தை வர்த்தகர் ஒருவர் உரிய கடையொன்றை திறந்து தனது தையல் கடையினை ஆரம்பிக்க முனைந்த போது பூநகரி பிரதேச சபையினரால் முழங்காவில் பொலிஸ் நிலையத்திற்கு முறையிடப்பட்டதை அடுத்து பொலிஸாரினால் வர்த்தகர் விசாரணைக்கு அழைக்கப்பட்டதை எதிர்த்து முழங்காவில் நகர வர்த்தகர்களும் மற்றும் முழங்காவில் பொதுச் சந்தை வர்த்தகர்களும் தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் தெரியவருவதாவது,

வன்னி இடப்பெயர்விற்கு முன்னரும் மற்றும் மீள்குடியேற்றத்திற்கு பின்னரும் நாச்சிக்குடா சந்தியிலுள்ள முழங்காவில் பொதுச் சந்தையில் 10 இற்கு மேற்பட்ட வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தனர். பூநகரி பிரதேச சபையினரால் பழைய பொது சந்தை வளாகத்தில் புதிய சந்தை அமைக்கப்படுவதை முன்னிட்டு தற்காலிக கொட்டகைகள் அமைத்து சந்தை வளாகத்தில் வர்த்தக நடவடிக்கையினை மேற்கொண்டு வந்தனர்.

புதிய சந்தைக்கான வேலைகள் முடிவடைந்துள்ள நிலையில் மரக்கறிக் கடைகள், பழக்கடைகள், வெற்றிலைக் கடைகள் ஆகியவற்றிற்கு வியாபார அனுமதி வழங்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

பலசரக்கு வர்த்தக நிலையங்களுக்கான வியாபார அனுமதி கிடைக்குமென எதிர்பார்த்திருந்த வர்த்தகர்கள் தமக்கான அனுமதி வழங்கப்படாததை அடுத்து பல தடவைகள் பூநகரி பிரதேசசபையிடம் தொடர்பு கொண்டு கேட்டுள்ளனர்.

ஆயினும் அதனை வழங்காது நேற்று முன்தினம் புதிய கடைகளுக்கான கேள்வி மனுக்கோரலுக்கான பகிரங்க அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இதனை அடுத்து முன்னர் வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்கள் புதிய கட்டடத்தில் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க முயற்சித்தனர்.

இந்நிலையில் வர்த்தகர் ஒருவர் முழங்காவில் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டார். எனவே முழங்காவில் பொதுச் சந்தையில் வர்த்தக நிலையங்களை நடத்திய முன்னர் வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு கடைகளை வழங்கிய பின்னர் மிகுதியாகவுள்ள வர்த்தக நிலையங்களுக்கு கேள்வி மனுக் கோரலை விடுக்குமாறு முழங்காவில் நகர வர்த்தகர்களும் மற்றும் முழங்காவில் சந்தை வளாக வர்த்தகர்களும் தமது எதிர்ப்பின்போது கருத்துத் தெரிவித்துள்ளனர். (2-15)



வவுனியா இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி யின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "உயிர்காக்க இரத்ததானம் வழங்குவோம்" எனும் கருப் பொருளில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு பாடசாலைமண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாண வர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் முன்வந்து இரத்ததானம் செய்து கொண்டனர். (படம்:-குருமன்காடு செய்தியாளர்)

# பதுங்கு குழியிலிருந்து சடலம் மீட்பு

முல்லைத்தீவு இரட்டை வாய்க்கால் காட்டுப்பகுதியிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலமொன்று நேற்று முன்தினம் மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக முல்லைத் தீவு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேசத்தில் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளியின் தகவலின் அடிப்படையில் குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட சடலம் ஆணா அல்லது பெண்ணா? என அடையாளம் தெரியாத வகையல் தீயினால் கருகிப்போயுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு கண்ணெடுக்கப்பட்ட சடலம் முல்லைத்தீவு இரட்டை வாய்க்கால் காட்டுப் பகுதியில் தூர்ந்துபோன பதுங்கு குழியிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

சடலத்தின் அருகில் தீப்பெட்டி, தக்குச்சிகள் மற்றும் வெற்றுப் போததல்கள் காணப்பட்டதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-302-281)




# பன்னங்கண்டி மருதநகர் மக்களின் காணிப்பிரச்சினை குறித்து ஆராய்வு

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் பன்னங்கண்டி மருதநகர் கிராம மக்களின் காணிப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள பன்னங்கண்டிப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான நெற் காணிகளில் சுமார் 280 குடும்பங்களும் மருதநகர் பகுதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளில் சுமார் 100 குடும்பங்களும் குடியேறி கடந்த 5 ஆண்டுகள் கடந்த நிலையிலும் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அவர்களுக்கு சொந்தக் காணிகள் இல்லாத நிலை ஒரு காரணமாக தெரிவிக்கப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு இந்த கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது.

மாகாண மேலதிக காணி ஆணையாளர் அலுவலகத்தின் உதவிப்பணிப்பாளர் ஆர்.மகேஸ்வரன், வனவள திணைக்கள அதிகாரிகள், கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், யு.என்.எச்.சீ.ஆர்.பிரதிநிதிகள், மேற்படி கிராமங்களின் கிராம அலுவலர்கள், கிராமமட்ட அமைப்புக்கள், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

தனியார் காணிகளில் மிக நீண்ட காலமாக வாழ்ந்து வருபவர்களுக்கு அந்த காணிகளின் உரிமைகளை பெற்றுக்கொடுப்பது அல்லது மாற்று இடங்களில் குடியமர்த்துவது போன்ற விடயங்கள் குறித்தும் ஏற்கனவே மருதநகர் பகுதி மக்களை மாற்றிடத்தில் குடியமர்த்தும் பொருட்டு கோணாவில் பகுதியில் காடுகளை வெட்டியபோது வனவள திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தமையால் தற்போதுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (2)

# விசேட சந்திப்பு

(மல்லாவி)

துணுக்காய் வலயத்திற்குட்பட்ட மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய கல்விக் கோட்டங்களிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கும் வடக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சர் த.குருகுலராசாவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு [illegible] பெறவுள்ளது. (2-15)

# மோட்டார் சைக்கிளிலிருந்து கஞ்சா பொதி கைப்பற்று

மன்னார் எழுத்தூர் செம்மண் வீதி பகுதியில் உள்ள பற்றையினுள் மோட்டார் சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் ஒரு கிலோ கிராம் நிறை கொண்ட கஞ்சா பொதியை நேற்று முன்தினம் இரவு மன்னார் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

எழுத்தூர் செம்மண் வீதியில் நேற்று வியாழக்கிழமை இரவு 7.45 மணியளவில் சந்தேகத்திற்கிடமான முறையில் இருவர் மோட்டார் சைக்கிளில் வருகை தந்ததோடு அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளை அவ்வீதியில் உள்ள பற்றைக்காட்டினுள் மறைத்து வைத்துவிட்டு தப்பிச் சென்று விட்டனர்.

இந் நிலையில், சந்தேகம் கொண்ட அப்பகுதி மக்கள் அவசர பொலிஸ் பிரிவிற்கு உடனடியாக தகவல் வழங்கிய நிலையில் இரவு 9 மணியளவில் அவ்விடத்துக்கு விரைந்த மன்னார் பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளை மீட்டு சோதனையிட்டனர். இதன்போது குறித்த மோட்டார் சைக்கிளின் இருக்கைக்கு கீழ் சுமார் ஒரு கிலோ கொண்ட கஞ்சாப்பொதி காணப்பட்டுள்ளது. இந்த நிலையில் கஞ்சாப்பொதியினையும், மோட்டார் சைக்கிளையும் மன்னார் பொலிஸார் மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென் றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸார் தெரிவிக்கையில்,

மன்னார் சௌத்பார் பகுதியைச் சேர்ந்த இருவரே குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள். ஆனால், மோட்டார் சைக்கிள் மன்னார் மூர்வீதியைச் சேர்ந்த பிறிதொரு நபருடையது. கோயிலுக்குச் செல்வதாகக் கூறி மோட்டார் சைக்கிளை வாங்கிக்கொண்டு கஞ்சாவை வைத்து கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போதே அப்பகுதியில் பொலிஸாரை கண்டவுடன் ஓடியுள்ளனர். இந்த நிலையில் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் இருந்து சுமார் ஒரு கிலோ கஞ்சாப் பொதி கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது என அவர்கள் தெரிவித்தனர். (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மானிய உரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

**(கிளிநொச்சி)**

**கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு ஒரு மாத காலம் கடந்துள்ள நிலையில் விவசாயிகளுக்கான மானிய உரம் வழங்கப்படவில்லை எனவிவசாயிகள் சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து கமநல சேவைகள் உதவி ஆணையாளருடன் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இதில் மானிய உரம் வழங்குவதற்கு உரிய பட்டியல்களை கமக்கார அமைப்புக்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக உதவி ஆணையாளர் இதன் போது தெரிவித்தார்.

உடனடியாக விபரப்பட்டியல்கள் அனைத்தும் பெறப்பட வேண்டும் என்ற அறிவித்தலுக்கு அமைய தற்போது பட்டியல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 16845.5 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கையும் 118.5 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு நீர்ப்பாசன நெற்செய்கையும் 843 ஏக்கர் நிலப்பரப்பில் வேறு சிறு தானியங்களும் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

மேற்படி பயிர்ச் செய்கைகளுக்கு 1504.931 மெற்றித்தொன் யூரியா,349.862 மெற்றித் தொன் TSP உரம் ,387.040 மெற்றித் தொன் MOP உரம் தேவையாகவுள்ளது.

தற்போது கையிருப்பில் இருக்கும் உரங்களான 153.290 மெற்றித் தொன்யூரியா, 65.313 மெற்றிக் தொன் TSP,29.268 மெற்றித் தொன் MOP உரம் என்பன விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மிகுதியாக தேவைப்படும் உரங்களை பெற்றுக் கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி ஆகியுள்ளநிலையில் கமநல சேவை திணைக்களத்தின் ஊடாக ஓரிரு நாட்களில் கிடைக்கப்பெற்று விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

வவுனியா நகர் பகுதி

## வர்த்தக நிலையங்கள் திடீரென பரிசோதனை



(குருமன்காடு)

வவுனியா நகர்ப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதார பிரிவினரால் திடீர் பரிசோனை நடைபெற்றது.

சுகாதார மற்றும் உணவு மாதத்தை முன்னிட்டு வவுனியா பொது சுகாதார பரிசோதகர்களால் நேற்று மேற் கொள்ளப்பட்ட இத்திடீர் பரிசோதனையின் போது பல வர்த்தக நிலையங்களில் பாவனைக்குத வாத பொருட்கள் இனங் காணப்பட்டு அழிக்கப் பட்டன.

அத்துடன உணவுப் பொருட்கள கையாளப்படும் விதம் தொடர்பிலும் சோதனை நடத்தப்பட்டது.

இதேவேளை உணவு கையாளும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு நோய் தடுப்பு ஊசி ஏற்றும் செயற்பாடும். சுகாதார பிரிவினரால் மேற்கொள்ளப்படவுள்ளது. (2-250)

## கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் மருத்துவர்கள், தாதியர்கள் பற்றாக்குறை

### சுகாதார மருத்துவ பணிமனையின் தகவலின் படி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் வைத்தியர்கள், தாதியர்கள் ஆகியோருக்கான வெற்றிடங்கள் நிலவி வருவதாக கிளிநொச்சி மாவட்ட சுகாதார மருத்துவ பணிமனையின் புள்ளிவிபரத்தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் 24 பேரும் தாதியர் 32 பேரும் பணிக்கு அமர்த்தப்படவேண்டிய தேவையுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 6 வைத்தியர்களும் 11 தாதியர்களும் தேவையாகவுள்ளது.

இதேபோல் முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் 3 வைத்தியர்களும் 6 தாதியர்களும் அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் 2 வைத்தியர்களும் 4 தாதியர்களும் பூநகரி பிரதேச வைத்தியசாலையில் 2வைத்தியர்களும் 4 தாதியர்களும் பளை பிரதேச வைத்தியசாலையில் 4 தாதியர்களும் பணிக்கு அமர்த்தப்படவேண்டியுள்ளது.

தருமபுரம்,பிரதேச வைத்தியசாலையில் 3 தாதியர்களும் உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலையில் 2 வைத்தியர்களும் வேரவில் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவரும் வட்டக்கச்சி பிரதேச வைத்தியசாலையில் மருத்துவர் ஒருவரும் கண்டாவளை, வன்னேரிக்குளம், ஜெயபுரம் ஆகிய ஆரம்ப மருத்துவ சுகாதார பராமரிப்பு நிலையங்களில் தலா ஒரு மருத்துவர் வீதம் நிரப்பப்படவேண்டியுள்ளது.

அத்துடன் கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் ஒரு வைத்தியர் பற்றாக்குறையாகவுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-277)




## புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு

(மல்லாவி)

தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு, வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட வாழ்வின் எழுச்சி திணைக்கள சமுதாய அடிப்படை வங்கிமட்டத்திலான புத்தாண்டுவிளையாட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற இருப்பதோடு புத்தாண்டு சேமிப்பை மேற்கொண்ட சமுதாய அடிப்படை வங்கி வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்குதல் மற்றும் அதிக சேமிப்பை மேற்கொண்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பரிசில்கள் வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற இருப்பதாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார். (2-15)

## பப்பாசி செய்கையின் அறுவடையும் சந்தைப்படுத்தலும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பப்பாசி செய்கையின் அறுவடையும் சந்தைப்படுத்தலும் நடைபெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் 100 விவசாயிகளுக்குப்பப்பாசிசெய்கையை மேற்கொள்வதற்காக சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ILO) நிதி அனுசரணையுடன் பப்பாசி நாற்றுக்களும் உள்ளீடுகளும் வழங்கப்பட்டு செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதற்கான அறுவடை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்கு சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் Target Agriculture நிறுவனத்தின்மூலம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பப்பாசி பழங்களின் அறுவடையானது 17 ஆம் கட்டை, பழம்பாசி, ஒலுமடு ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் நடைபெற்று வருகின்றது.

முதற்கட்டமாக 2 ஆயிரம் கிலோ பப்பாசிப் பழங்கள் இந்நிறுவனத்தினால்கொள்வனவுசெய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து இந்நிறுவனத்தினால் பப்பாசி செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து தரமான பப்பாசிப் பழங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## மஹோற்சவம்

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் ஆலய மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும்.

இதில் 8 ஆவது நாள் வேட்டை த திருவிழா திருவையாறு சித்திவிநாயகர்ஆலயத்தில்இடம்பெறுவதுடன, அன்றிரவுசப்பறத்திருவிழாஇடம்பெறும்.

எதிர்வரும் மேமாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை தேர் திருவிழா நிகழ்வானது வசந்தமண்டபபூசையை தொடர்ந்து காலை 9.30 மணிக்கு பரிவார மூர்த்திகள் சகிதம் மூன்று சித்திர தேரில் ஆரோகணிப்பார்.

3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தத் திரு விழாவானது இரணைமடு நீர்தேக்கத்தில் இடம் பெறும். எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை பூங்காவனத் திருவிழா இடம்பெறும். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1124

## ஆட்டுக்கார ஆண்டியப்பன்

ஆண்டியப்பனின் பெற்றோர் அவன் சிறுவனாக இருக்கும் போதே இறந்துவிட்டனர்.

அநாதையான ஆண்டியப்பனை,



அவனுடைய தந்தையின் நண்பர் ஒருவர் புகலிடம் தந்து வளர்த்தார்.

வளர்ந்து பெரியவனான பின், அவன் தன் வாழ்க்கைக்கு வழி தேடும் வண்ணம் சிறிது பண உதவியும் செய்தார்.

ஆண்டியப்பன் தனக்கென ஒரு குடிசை அமைத்துக்கொண்டு, மிஞ்சிய பணத்தில் இரண்டு ஆட்டுக் குட்டிகள் வாங்கினான்.

தன் குடிசையைச் சுற்றியிருந்த புல்வெளியில் அவற்றை மேயவிட்டு வளர்த்தான். அவை வளர்ந்த பின் அவற்றை விற்று, கிடைத்த பணத்தில் நான்கு ஆடுகள் வாங்கினான்.

இவ்வாறு ஆடுகள் வாங்கி, வளர்த்து, அவற்றை விற்று நல்ல லாபம் சம்பாதித்தான். ஓரளவு பண வசதி ஏற்பட்டதும், அந்த கிராமத்தில் வசித்த ஏழைப் பெண் லட்சுமியை மணம் புரிந்தான்.

அந்த கிராமத்தில் அவனுக்கு ஆட்டுக்கார ஆண்டியப்பன் என்ற பெயரே ஏற்பட்டுவிட்டது.

ஆனால் லட்சுமிக்கு தனது கணவன் செய்யும் தொழில் பிடிக்கவில்லை.

பல முறைகள் அவள் தன் கருத்தைத் தெரிவித்தும், ஆண்டியப்பன், தொழிலை மாற்ற முடியாது என்று மறுத்துவிட்டான்.

ஆண்டியப்பனிடம் இருந்த ஆட்டுக் குட்டிகளில் ஒன்றுக்கு ஒரு கண் இல்லை. பரிதாபத்துடன் லட்சுமி அதற்கு "ராமு" என்று பெயரிட்டுச் செல்லமாக வளர்த்தாள்.

ஒருநாள் ஆண்டியப்பன் பல ஆடுகளை ஓட்டிக் கொண்டு நகரம் சென்று மாலை வீடு திரும்பினான். அவனுக்கு உணவு பரிமாறியபடி, "அவ்வளவு ஆடுகளையும் விற்றுவிட்டாயா?" என்று லட்சுமி கேட்க, அவன், "ஆமாம்! ஒரு கசாப்புக் கடையில் விற்றுவிட்டேன்!" என்று பதிலளித்தான்.

"நம் பிள்ளைகளைப் போல் வளர்த்த ஆடுகளை கசாப்புக் கடைக்கு விற்க உனக்கு எப்படி மனம் வந்தது?" என்று லட்சுமி கேட்டதும், ஆண்டியப்பன் கோபத்துடன், "மூன்று வேளை நாம் சாப்பிடவேண்டும் என்றால் அதையெல்லாம் பார்க்க முடியாது!" என்றான்.

'அப்படி சாப்பிட்டு உயிர் வாழ வேண்டுமா? இந்த பாழாய்ப்போன வேலையை விட்டுவிட்டு, பசுமாடு வாங்கிப் பால் வியாபாரம் செய்து பிழைக்கலாமே!' என்றாள்.

அதற்கு ஆண்டியப்பன் 'எனக்கு உன் புத்திமதி தேவையில்லை! பேசாமல் நான் சம்பாதித்துத் தரும் பணத்தை வைத்து சோறு ஆக்கிப் போடு! மறுபடியும் என் தொழிலைப் பற்றிப் பேசினால் உன்னைத் தொலைத்து விடுவேன்!' என்று எரிந்து விழுந்தான்.

லட்சுமி அன்றிரவு சாப்பிடாமல் அழுதுகொண்டே படுத்துக் கொண்டாள்.

தன் கணவன் செய்வது பாவம் என்று நம்பிய அவள், அவனை எப்படித் திருத்துவது என்று யோசித்தவாறே தூங்கிப் போனாள்.

மறுநாள் காலை ஆண்டியப்பன் அவளிடம், "லட்சுமி! கங்காபுரத்து ஜமீன்தார் தன் குலதெய்வத்திற்கு பூஜை செய்யப் போகிறாராம்!

அம்மனுக்குப் பலியிட ஒரு ஆட்டுக் குட்டி வேண்டும் என்று சொன்னார்....... (தொடரும்)

### புதுமைப்பித்தன்



புதுமைப்பித்தன் என்ற புனைப்பெயர் கொண்ட சொ. விருத்தாசலம் 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி கடலூர் மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார்.

இவர் மிகச்சிறந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். நவீன தமிழ் இலக்கியத்தின ஒரு முன்னோடியாக இவர் கருதப்படுகிறார். கூரிய சமூக விமர்சனமும் நையாண்டியும், முற்போக்குச் சிந்தனையும், இலக்கியச் சுவையும் கொண்ட இவருடைய படைப்புகள், இவரின் தனித்தன்மையினை நிறுவுகின்றன. இவரது படைப்புகள் தமிழ் இலக்கியத்தில் மிகவும் அதிகமாக விவாதிக்கப்பட்டுள்ளன. 2002 இல் தமிழக அரசு இவரது படைப்புகளை நாட்டுடமை ஆக்கியது. இவரது முதற்படைப்பான குலோப்ஜான் காதல் காந்தி இதழில் 1933-இல் வெளிவந்தது.

1934-இலிருந்து மணிக்கொடியில் இவரது படைப்புகள் பிரசுரமாகத் துவங்கின. மணிக்கொடியில் வெளிவந்த இவரின் முதல் சிறுகதை ஆத்தங்கரைப் பிள்ளையார். இந்த காலகட்டத்தில் அவர் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். இவர் வாழ்ந்த இடங்களான திருநெல்வேலியையும் சென்னையையும் மையமாகக் கொண்டே இவரது படைப்புகள் அமைந்தன.

புதுமைப்பித்தன் எழுத்துப்பணியில் முழுவீச்சில் ஈடுபட்டது 15 ஆண்டுகளுக்கும் குறைவான காலம் தான். அக்குறுகிய கால அளவிலேயே அவர் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கிட்டத்தட்ட அதே எண்ணிக்கையுள்ள கட்டுரைகள், 15 கவிதைகள், சில நாடகங்கள், புத்தக விமர்சனங்கள் என எழுதிக் குவித்தார். அவரது எழுத்துக்கள் அவரைப் புரட்சி எழுத்தாளராக அடையாளம் காட்டின. அவர் கையாண்ட விடயங்களும் கதாபாத்திரங்களும் தமிழ்ப் புனைவு உலகுக்குப் புதியதாய் அமைந்தன. தமிழ் இலக்கிய உலகம் சில எழுதப்படாத விதிகளால் முடக்கப்பட்டிருப்பதாக அவர் கருதினார்.

புதுமைப்பித்தனின் சிறுகதைகள் தான் அவருக்கு எழுத்துலகில் தனி இடத்தை அளித்தன. அவர் எழுதியதாகக் கணிக்கப்படும் 108 சிறு கதைகளில் 48 மட்டுமே அவர் காலத்திலேயே வெளியாகின. அவரது சிறு கதைகள் மணிக்கொடி, கலைமகள், ஜோதி, சுதந்திர சங்கு, ஊழியன், தமிழமணி, தினமணியின் ஆண்டுமலர், நந்தன் ஆகிய பத்திரிக்கைகளில் பிரசுரமாயின. மற்றவை அவர் மறைவுக்குப் பின்னர் வெவ்வேறு காலங்களில் பிரசுரமாயின. கடைசித் தொகுப்பு 2000ல் வெளியானது. புதுமைப்பித்தன் 1930களில் உருவாகிய மணிக்கொடி இயக்கத்தின் முக்கிய எழுத்தாளர்களுள் ஒருவராக விளங்கினார்.

இவர் திரைப்படத் துறையிலும் ஆர்வம் செலுத்தினார். ஜெமினி நிறுவனத்தின் அவ்வை மற்றும் காமவல்லி படங்களில் பணிபுரிந்தார். பின்பு திரைப்படத் தயாரிப்பு நிறுவனமான "பர்வதகுமாரி புரொடக்‌ஷன்ஸ்" -ஐத் துவங்கி வசந்தவல்லி என்ற படத்தைத் தயாரிக்க முயன்று தோல்வியுற்றார். எம். கே. தியாகராஜ பாகவதரின் ராஜமுக்தி திரைப்படத்திற்கு வசனம எழுதுவதற்காக புனேவில் சில மாதங்கள் வாழ்ந்தார். அங்கு அவர் கடுமையான காச நோய்க்கு ஆளாகி மே 5, 1948-இல் காலமானார்.

## 04.2015 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1607 - எண்பதாண்டுப் போர்: கிப்ரால்ட்டரில் டச்சுக் கடற்படையினர் ஸ்பானிய கடற்படைக் கப்பலைத் தாக்கி அழித்தனர்.
- 1829 - மேற்கு அவுஸ்திரேலியாவில் சார்ல்ஸ் ஃபிரெமாண்டில் சலேஞ்சர் என்ற கப்பலில் வந்து தரையிறங்கி சுவான் ஆற்று குடியேற்றத்தை ஆரம்பித்தார்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் வோஷிங்டன், டிசியை அடைந்தனர்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் டேவிட் பராகுட் தலைமையில் லூசியானாவின் நியூ ஓர்லென்ஸ் நகரை கூட்டமைப்பினரிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஆர்கன்சஸ் மாநிலத்தில் இடம்பெற்ற போரில் கூட்டமைப்பினர் பெரும் வெற்றி பெற்றனர்.
- 1898 - ஐக்கிய அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.
- 1915 - முதலாம் உலகப் போர்: ஆஸ்திரேலியா, பிரித்தானியா, நியூசிலாந்து மற்றும் பிரெஞ்சுப் படைகள் துருக்கியின் கலிப்பொலியை முற்றுகையிட்டனர்.
- 1916 - அயர்லாந்தில் இராணுவச் சட்டத்தை ஐக்கிய இராச்சியம் பிறப்பித்தது.
- 1916- அன்சாக் நாள் முதற் தடவையாக நினைவு கூரப்பட்டது.
- 1945 - நாசி ஆக்கிரமிப்பு இராணுவம் வடக்கு இத்தாலியில் இருந்து விலகியது.
- 1961 - ரொபர்ட் நொய்ஸ் ஒருங்கிணைந்த மின்சுற்றுக்கான (integrated circuit) காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1966 - தாஷ்கெண்ட் நகரத்தின் பெரும் பகுதி நில நடுக்கத்தால் அழிந்தது. 300,000 பேர் வீடுகளை இழந்தனர்.
- 1974 - போர்த்துக்கலில் 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்த பாசிச அரசு கவிழ்க்கப்பட்டு மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டது.
- 1982 - காம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இஸ்ரேலியப் படைகள் முழுவதுமாக சினாய் தீபகற்பத்தில் இருந்து வெளியேறியது.
- 1983 - பயனியர் 10 விண்கலம் புளூட்டோ கிரகத்தின் சுற்றுப்பாதையைத் தாண்டிச் சென்றது.
- 1983 - ஹிட்லரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் "ஹிட்லரின் நாட்குறிப்புகள்" நூலின் முதற் பகுதியை ஜேர்மனியின் "ஸ்டேர்ன்" இதழ் வெளியிட்டது.
- 1986 - சுவாசிலாந்தின் மன்னனாக மூன்றாம் முசுவாட்டி முடிசூடினார்.
- 1988 - இரண்டாம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக ஜோன் டெம்ஜானுக் என்பவருக்கு இஸ்ரேல் மரண தண்டனை விதித்தது.
- 2005 - இத்தாலிய ஆக்கிரமிப்பாளர்களால் 1937 இல் களவாடப்பட்ட 1700-ஆண்டுகள் பழமையான சதுர நினைவுத்தூபியின் கடைசித் துண்டு எதியோப்பியாவுக்கு கொண்டுவரப்பட்டது.

#### பிறப்புகள்

- 1599 - ஒலிவர் குரொம்வெல், இங்கிலாந்தில் முடியாட்சியை நீக்கியவர் (இ. 1658)
- 1840 - பியோத்தர் சாய்க்கோவ்ஸ்கி, ரஷ்ய இசையமைப்பாளர். (இ. 1893)
- 1874 - மார்க்கோனி, வானொலியைக் கண்டு பிடித்தவர் (இ. 1937)
- 1906 - புதுமைப்பித்தன், நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு முன்னோடி (இ.1948)
- 1940 - அல் பசீனோ, அமெரிக்கத் திரைப்பட நடிகர்

#### இறப்புகள்

- 2005 - சுவாமி ரங்கநாதானந்தர், இந்தியாவின் சமயத் தலைவர் (பி. 1908)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

**...மனித நேயம்**

ஒன்றை மட்டும் திட்டவட்டமாகச் சொல்கிறேன். ஆண்டவன் எங்கேயும் இல்லை. மக்களுடைய இதயத்தில்தான் - மனதில் தான் இருக்கிறார்.

நான் எத்தனையோ வெளிநாடுகளைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். உலகத்தின் பல பாகங்களையும் சுற்றி வந்திருக்கிறேன். தமிழக மக்களுக்கு இருக்கிற மனிதநேயம், கருணை, அந்த மனித இயல்பு வேறு யாருக்கும் எங்கேயும் கிடையாது. அதனால் தான் நம்முடைய தமிழ்நாட்டை 'வந்தவரை வாழ வைத்த தமிழகம்' என்று சொல்கிறார்கள்.


ஒருவனிடம் திறமை இருந்து, நல்ல எண்ணம், நல்ல மனிதத் தன்மையும் இருந்தது என்று சொன்னால் அவனுடைய மொழி பற்றியோ, சாதி பற்றியோ, எதைப்பற்றியும் தமிழக மக்கள் கவலைப்பட மாட்டார்கள்.

ஆகவே, இந்த மாதிரி உயர்ந்த குணம் உள்ள மக்களிடம் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற வரைமுறை இருக்க வேண்டும் இல்லையா? இவர்களுக்கு ஏதாவது கெடுதல் செஞ்சா, துரோகம் செஞ்சா - அவர்களை ஆண்டவன் தண்டிக்காமல் விடவே மாட்டான். வினை விதைத்தவன் வினை அறுப்பான். இது உறுதி.' இவ்வாறு ரஜினிகாந்த் கூறியுள்ளார்.

நண்பர்களுக்கு உதவுவதற்காக ரஜினிகாந்த் 'வள்ளி' என்ற படத்தை எடுத்தார். கே.நட்ராஜ் டைரக்ட் செய்த இந்தப் படத்தில், ரஜினியின் நண்பர்கள் பலர் நடித்தனர்.

ஆரம்பகால நண்பர்கள் யாரையும் ரஜினி மறந்ததில்லை. படங்களில் நடித்து சூப்பர் ஸ்டாராக உயர்ந்த நேரத்தில், நண்பர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று விரும்பினார். இந்த எண்ணத்தில் உருவான படம்தான் 'வள்ளி' இதற்கான கதையை ரஜினியே எழுதினார்.

**பெண்ணின் போராட்டம்**




வள்ளி படத்தில், ரஜினி, பிரியாராமன்

ஒரு பெண்ணை காதலித்து, அவளை கர்ப்பிணியாக்கிவிட்டு தலை மறைவாகிறான் ஓர் இளைஞன். அவன் அரசியல் செல்வாக்கு மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவன். அப்பாவிப் பெண்களை ஏமாற்றுவது என்பது அவனுக்கு பொழுது போக்கு.

ஆனால் அந்தப் பெண் உண்ணாவிரதம் இருந்து தங்கள் காதலை ஊருக்கே தெரியவைத்து அவனை பணிய வைக்கிறாள். துரோகியான காதலன், கணவனான மறுநிமிடமே அவனை கத்தியால் குத்திச் சாய்க்கிறாள், கதாநாயகி.

புரட்சிகரமான கதை அமைப்பைக் கொண்ட இந்தப் படத்தை, கே.நட்ராஜ் டைரக்ட் செய்தார். ரஜினி நடிப்புக் கல்லூரியில் படித்த காலத் தில் இருந்தே இவர் ரஜினியின் நண்பர். 'அன்புள்ள ரஜினி காந்த்' படத்தை டைரக்ட் செய்தவர்.

இளையராஜா இசையமைத்தார். படத்தில் கௌரவ வேடத்தில் ரஜினியும் நடித்திருந்தார்.

இந்தப்படம் பெரிய அளவில் போகவில்லையென்றாலும் இலாபம் வந்தது. அதை நண்பர்களுக்கு பிரித்துக் கொடுத்து மகிழ்ந்தார் ரஜினி.

**நட்ராஜ் பேட்டி**

'வள்ளி' படம் உருவானது பற்றிய விவரங்களை டைரக்டர் கே.நட்ராஜ் வெளியிட்டார். அவர் கூறியதாவது:-

'1992 ஆம் வருடம் ரஜினி 'அண்ணாமலை' படத்தில் நடித்துக் கொண்டிருந்த நேரம். படத்தை சுரேஷ் கிருஷ்ணா இயக்கினார். நண்பன் என்ற முறையில் ரஜினி என்னிடம், 'நீயும் இந்தப் படத்தில் இரு' என்றார்.

அவரது 'டேஸ்ட்' எனக்குத் தெரியும் என்பதால், படத்தில் அது எதுவும் மிஸ் ஆகிவிடக் கூடாது என்பதற்காக ரஜினி என்னிடம் இப்படிச் சொன்னார்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்



**வைரமுத்து -125**

நேரஞ்செண்டு திரும்ப வந்தப்ப வேட்டியப் பெரட்டிக் கட்டியிருந்தான் பய.

மேல் சட்டையில்லாம மேனி வேறயா, அவன் தொப்பூழ்ப் பள்ளத்துக்குள்ள தலயக் குடுத்துப் பச்சக்காம்ப மட்டும் வெளிய நீட்டிக்கிட்டிருக்கு மல்லியப்பூவு ஒண்ணு.

பொழுதிருக்கப் போகணுமப்ப.

தயவு பண்ணு ராசா.

இருங்க பெருசு;

இப்பக் குடுத்திடறேன்.

கல் பதிக்கிறதுல முக்கியமான வேல மசை அடிக்கிறது.

கல்லச் சுத்தி இருக்கிற தங்கத்த இழைச்சு எழுப்பி மெருகுவலை வச்சு உருட்டி ஒரு துளித் தண்ணியும் உள்ள எறங்காத அளவுக்கு நெருங்கி அணைச்சு விடுறது தான் மசையடிக்கிறது.

புதுப்பொண்டாட்டி சோங்கு... போயிட்டுப் போயிட்டு வந்த சொகம்... கண்ணு தங்கத்துல இருந்தாலும் கவனம் அவ மடியில இருந்த மயக்கம்...

எல்லாம் சேந்து சரியா மசையடிக்காம மோதிரத்தத் தூக்கிக் கையில குடுத்துட்டான் பாவிப்பய.

அவன் குடுத்த மோதிரத்தக் கும்பிட்டு வாங்கி மடியில கட்டிப் புறப்பட்டாரு சுப்பங்செட்டியாரு.

அந்த வைரக்கல்லு அணவு பத்தாம லொடக்கு லொடக்கு லொடக்கு லொடக்குன்னு சன்னமாச் சத்தம் போட்டுக்கிட்டே போகுது.

இது சத்தமில்ல சாமி. ரெண்டு உசுருக்கு அடிக்கிற சங்குன்னு வழியெல்லாம் சொல்லிக்கிட்டே போகுது அந்த லொடக்கு லொடக்கு.

கெட்டி ராத்திரி.

நிலா இன்னும் எழும்பல.

அழுகுணி வெளிச்சம் அடிச்சுக்கிட்டிருக்குக அங்கங்க மொளைச்ச வெள்ளிக.

இடைகாட்டுப் பாதை வழி விழுந்துபோறாரு சுப்பஞ்செட்டியாரு.



கடவுளே! என்னியப்பொழுதோட சேத்திரு; எம் [illegible]ளோட சேத்திரு.

ஆகாயம் பாத்துப் பெருமாளுக்குப் போட்டாரு ஒரு பெருங்கும்புடு.

அந்து கிந்து என்னிய அநாதிக் காட்ல விட்றாத.

கீழ குனிஞ்சு செருப்புக்கும் போட்டாரு ஒரு சின்னக்கும்புடு.

நிலக் கோட்டையிலயிருந்து கோட்டப்பட்டி மார்க்கமா குள்ளப் புரம் புடிச்சு, மெட்டூரு சாவடி கப்பட்டி வழியா சொக்கத்தேவன் பட்டி எல்லைய மிதிக்க தலைக் கோழி கூவிருச்சு.

அக்கா தங்கச்சிக ரெண்டுபேருக்கும் ஒரு சொட்டு ஒறக்கமில்ல.

சாகப்போற நாளையில அப்பன் படுற பாட்ட நெனச்சு அழுது கண்ணு வீங்கிப் போனது முன் ஜாம ஒறக்கமில்ல.

உள் திண்ணையில வெலகுன வேட்டி தெரியாம கால் ரெண்டையும் அகட்டிப் படுத்துக்கெடக்குற முத்துக்காமு விட்டான் பாருங்க கூரையைப் பிரிக்கிற ஒரு கொறட்ட- அந்தப் பெருங்கொண்ட ஓசையில பின் சாமத்துல ஒறக்கமில்ல.


சுப்பஞ்செட்டியாரு செருப்புச்சத்தம் கேட்டு எந்திருச்சு உக்காந்திருச்சு மொத்த வீடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-42

## வெள்ளிவிழாவில் விவசாயபீடத்தில் உயர்தர மாணவர்களுக்கு பயிற்சி!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வெள்ளிவிழாவினை அமைதியாக ஆனால் உற்சாகமாக கொண்டாடிக்கொண்டிருக்கும் விவசாய பீடத்தில் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினது தலைவியின் வேண்டுகோளினை ஏற்று உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பாடத்திட்டத்தினுள் முதன்முறையாக உள்வாங்கியிருக்கின்ற மாணவர்கள் பலரினை அவர்களுக்கான செயனமுறை விளக்கங்களை மேலதிகமாக கற்றுக்கொள்ள கடந்த மூன்று தினங்களாக விவசாய பீடத்தின் ஆறு துறைகளிலும் அவர்களது பாடத்திட்டத்தில் உள்ள மாணவர்களின் தேவையைக்கருதி செயன்முறை விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. விவசாயபீடம் அறிவியல் நகருக்கு நகர்ந்த பின்னர் முதன்முறையாக நடைபெற்ற அதிகளவு மாணவர்கள் பங்குபற்றிய இந்த பயிற்சியில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயிற்சியளிக்க ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து எழுதும் இக்கைகளுக்கும் வாய்ப்பு கிடைத்தது. உயர்தர மாணவ, மாணவியருக்கு செயன்முறை விளக்கங்களை விவசாயபீட விரிவுரையாளர்கள், செயன்முறைகாட்டுநர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் என பலரு மிணைந்து வழங்கியமை கொண்ட எண்ணத்தை, மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முனைந்ததாக கொள்ளலாம். பயிற்சியினை மாணவர்களுக்கு வழங்கியபோது மனம் குளிர்ந்ததால் மகிழ்ச்சியுடன் உற்சாகமும் பிறந்தது. விவசாய பீடத்திற்கென கடமையொன்றுண்டு. யாழ்ப்பாண பல்கலைக் கழகம் எமது பிரதேசத்து மாண வர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு இயன்றளவு உதவிக்கரம் நீட்ட வேண்டியது அவசியமாகும். அதிலும் செயன்முறை பயிற்சிகள் முழுமையடையாத நிலையிலுள்ள முதன்முறையாக உள்வாங்கப் பட்ட உயிர்முறைமைகள் தொழில் நுட்ப பாடத்திட்டத்தினுள் உள்ளீர்க் கப்பட்ட மாணவ மாணவியருக்கு பாடத்திட்டத்தினுள் இருக்கின்ற செயன்முறை விளக்கங்களை விவசாய பீடத்திலுள்ள ஆய்வு கூட உபகரணங்களையும் வளத்தினையும் பயன்படுத்தி சிறிய எளிய தொழில்நுட்பங்களை மாண வர்கள் அறிந்து தெரிந்து கொள்ள முயற்சித்தது பாராட்டத்தக்கது. விவசாய பீட விரிவுரையாளரான ந.கண்ணன் விவசாய பீடத்தின் இச்செயற்பாட்டினை இணைப்பாளராகவிருந்து செயற்ப டுத்தியிருந்தார். இந்த செயற்பாட்டை ஏனைய பீடங்களினதும் உதவியைப்பெற்று மாணவர்களுக்கான கற்றல் செயற்பாட்டுக்கு மேலும் உதவியும் உந்துதலும் அளிக்கலாம்.

கடந்த வருட ஆரம்பத்தில் விவசாய பீடம் அறிவியல்நகருக்கு நகர்வதற்கு முயற்சித்த போது வன்னிப்பிரதேச மாணவர்கள் ஆசிரியர்களனைவரும் இணைந்து விவசாய பீடத்தில் பாரிய சிரமதான நிகழ்வொன்றை நடத்தியிருந்தனர். மாணவர்களை விவசாய பீடத்துடன் இணைப் பதனையும் அவர்களுக்கான கல்வியினை கற்றுக்கொள்ள விவசாய பீடத்தினது வளங்களை முழுமையாக பயன்படுத்துவதனையும் இந்த இணைப்பு எதிர்பார்த்திருந்தது.

2013 ஆம் ஆண்டு நகர்வதற்கு திட்டங்கள் பல தீட்டி முயற்சியெடுத்த போதும் புனர்நிர்மாண பணிகளின் தடங் கல்கள் மற்றும் இழு பறிகள் கார ணமாக கடந்த வருடம் டிசெம்பர் மாதத்திலேயே விவசாய பீடம் முழுமையாக அறிவியல் நக ருக்கு நகரமுடிந்தது. கல்விக்கான பிரதேசமாக அறிவியல் நகர் பிரகடனப் படுத்தப்பட்டிருந்ததும் அதனை மையப்படுத்தி விவசாய பீடமும் பொறியியல் பீடமும் நகர்ந்திருப்பதும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினது வளர்ச்சியில் குறிப்பாக கல்விக்கான வழித்தடத்தில் இன்னும் தொழிற்றுறை சார்ந்த அபிவிருத்தியில் இன்னொரு மைல்கல் எனலாம். விவசாய மற்றும் பொறியியல் பீடங்கள் அறிவியல் நகரில் கால் பதித்ததால் ஆரம்பத்தில் தங்குமிட வசதிகள், போக்குவரத்துகள் பலவீனப்பட்டிருந்தாலும் தற்போது அனைத்திலும் முன்னேற்றம் கண்டிருக்கின்றதனை அவதானிக்கலாம். யாழ்ப்பாண டிப்போவிலிருந்து இரு பேருந்துகள் பீடத்தின் வாசல்வரை தினமும் காலையும் மாலையும் வந்து செல்கின்றன. பருத்தித்து றையிலிருந்து

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XXIX

ஒரு பேருந்தும் பீடத்திற்கு வர ஏற்பாடாகின்றது எனவும் அறிந்தோம். பீடத்தின் வாயிற்பகுதியில் ஏ9 பாதையுடன் அண்மித்ததாக புகையிரத தரிப்பு நிலையத்தின் வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருபக்கங்களிலிருந்தும் வருகின்ற புகையிரதங்கள் இங்கே தரித்து செல்லும் போது மாணவர்களின் பணியாளர்களின் போக்குவரத்து சீர்பெற்றுவிடும். இவ்விருபீடங்களின் வளர்ச்சியென்பது வன்னி பிரதேசத்தின் வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்டது. குறிப்பாக கிளிநொச்சி நகரின் வளர்ச்சியுடன் நேரடியாக தொடர்புபட்டது. இது மக்களுக்கான வளர்ச்சி, எங்களூர் கல்வியை மேம்படுத்துவதற்கான வளர்ச்சி. பீடங்கள் இயங்க ஆரம்பித்ததால் இப்பகுதி மக்களுக்கான வேலைவாய்ப்பிற்கு தளமமைத்து கொடுக்கப்பட் டுள்ளது. இருப்பிட வசதிகள், உள்ளூர் போக்குவரத்து வசதிகள், உணவு வசதிகள், வேலைவாய்ப்புக்கள் தினமும் விருத்திகண்டு வருகின்றன. மாணவர்கள் பீடத்திற்கு வெளியே தங்கி கல்விகற்க தொடங்கியிருக்கின்றனர். மக்களுடன் அவர்களின் வாழ்க்கை ஒன்றிப்போயிருக்கின்றது. தற்போது இப்பீடங்களில் கருத்தரங்குகள், ஆய்வுகள், பயிற்சி வகுப்புகள், கல்விகற்றல் நிகழ்வுகள் என பல நடைபெற தொடங்கியிருக்கின்றன. பல கல்விமான்களும் வருகைதருகின்ற இடமாக மாறிவருகின்றது. விவசாயிகளுக்கான பயிற்சிகளை வழங்க பீடம் விரைந்து தயாராகின்றது. இந்த நிலையில் விவசாய பீடத்தின் வெள்ளிவிழா களைகட்டியிருக்கின்றது. வெள்ளிவிழாவை முன்னிட்டு இலத்திரனியல் கருத்தரங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "எதிர்கால விவசாய கல்வி" என்னும் கருப்பொருளில் இக்கருத்தரங்கு நடைபெறுகின்றது. ஆர்வமுடைய எவரும் இவ் இலத்திரனியல் கருத்தரங்கில் பங்குபற்றலாம். இன்றே agrieconference@gmail.com என்னும் ஈமெயிலுக்கு செய்தியொன்றை அனுப்புவதன் மூலம் நீங்களும் இலத்திரனியல் கருத்தரங்கின் பங்காளராகி உங்கள் கருத்துக்களை தெரிவிப்பதுடன் மற்றையவர்களுடனும் கலந்துரையாடலாம். குறைகூறுவதை தினமது வேலையாகவும் பொழுதுபோக்காகவும் வைத்திருக்காது அபிருத்திக்கான கருத்துக்களை ஆக்கபூர்வமான உங்கள் சிந்தனைகளை வெளிப்படுத்த இதோ உங்களுக்கான சந்தர்ப்பமாக இதனை கருதுங்கள். பீடங்களின் வளர்ச்சிக்கு நீங்களும் பங்களிக்கலாம். மனமுண்டானால் இடமுண்டு.

விவசாய பீடத்தின் வளர்ச்சி சமூகம் சார்ந்ததாக இருக்க வேண்டுமென வரைந்த திட்டத்தில் உயர்தர மாணவர்களை உள்வாங்கி அவர்களுக்கு விவசாய பீடத்தின் வளத்தினை பயன்படுத்தி கற்றல் செயற்பாட்டுக்கு உதவுதல் வேண்டும் எனவும் பீடம் கருதியது. பணியாளர்கள் அனைவரும் இணைந்து ஆர்வத்துடன் பயிற்சியளித்ததை நேரில் கண்டும் அதனை மாணவர்களிடம் கேட்டும் தெரிந்து கொண்டபோது மனம் குளிர்கின்றது. எதிர்பார்த்தது நிகழ்ந்தது கண்டு பீடத்து ஆசிரியரில் ஒருவராக மனம் ஆறுதலடைந்தது. இதில் விவசாய பீடமே முழுமையாக உள்வாங்கப்பட்டிருக்கின்றது. தனியொருவரின் முயற்சியென்று எதுவுமில்லை. ஆனால் சரியாக திட்டமிடல் வேண்டும். அந்த திட்டமிடல் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்னும் விவசாயபீடத்தில் பலவற்றை எதிர்பார்க்கலாம். தினமொரு செய்தி விவசாயஞ்சார்ந்து அபிவிருத்தி சார்ந்து பீடத்திலிருந்து மக்களுக்கு, குறிப்பாக மாணவருக்கு வரவேண்டும். வரும் !.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வடபகுதி மக்களுக்கான கல்விப் புலம் சார்ந்த சொத்து. பல இன மாணவர்கள் கல்விகற்கின்றதனை காணமுடிவதோடு தற்போது எமது நாட்டினது பல பாகங்களிலுமிருந்தும் மாணவர்களை முழுமையாக உள்வாங்கியிருக்கின்ற நிலையில் இப்பீடங்கள் இலங்கையிலுள்ள மற்றைய பல்கலைக்கழகங்களுடனும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடனும் தொடர்பினை ஏற்படுத்தி உயர்வடை கின்றன. பல்கலைக்கழக சமூகத்தின் எதிர்பார்ப்பை எமது பிரதேசத்து மக்களின் விருப்பத்தை கிளிநொச்சி நோக்கிய இப்பீடங்களின் நகர்வினை எள்ளளவும் விரும்பாத சிலர் தங்களை கல்விமான்கள் எனக்கூறிக்கொண்டு இப்பீடங்களின் நகர்வில் அதில் பணிபுரியும் விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்களைப்பற்றி வெளிநாட்டிலிருந்தும் பல்கலைக்கழகத்துக்குள்ளிருந்தும் அநாமதேய இலத்திரனியல் ஊடகங்களிலும் உள்ளூர் மற்றும் கொழும்பு பத்திரிகைகளிலும் உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிட்டு அவர்களை மனவுளைச்சலுக்குட்படுத்தி அவர்களின் திறந்த மனதையும் மக்களுக்காக பணிபுரியும் விருப்பத்தையும் கேவலப்படுத்திய நிலையிலும் விவசாய பீடமும் பொறியியல் பீடமும் இருக்கின்ற தடைகளையும் தாண்டி துணைவேந்தர், பீடாதிபதிகள், துறைதலைவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரினதும் பக்க பலத்துட [illegible] வடமாகாணத்திலுள்ள மாவட்ட அரச அதிபர்கள் குறிப்பாக கிளிநொச்சி அரச அதிபர் மற்றும் கல்விமான்கள் அனைவரினதும் உதவியையும் பெற்று விரைந்து வளர்ச்சி கண்டு வருகின்றமையை கண்கூடாக காணலாம். எமது மக்களின் அபிலாசைகளை நிறை வேற்று கின்ற திடசங்கற்பத்தோடு இவ்விருபீடங்களும் உயர்வடைந்து செல்கின்றன.

நடந்து முடிந்த உயர்தர மாணவர்களுக்கான இந்த குறுகிய கால மூன்று நாட்கள் பயிற்சியில் மாணவர்களும் ஆசிரியர்களும் கேட்டுக் கொண்ட குறிப்பிட்ட பாடவிளக்கங்கள் செயன்முறை பயிற்சிகளாக வழங்கப்பட்டன. விவசாய பீடத்தினது துறைகள் ஆறிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் மாணவர்கள் மிகவும் ஆர்வமாக கலந்து கொண்டு விளக்கங்களை கேட்டுத்தெரிந்து கொண்டதையும் அவதானிக்க முடிந்தது. அதிலும் இப்பாடத்திட்டத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுடனும் கலந்துரையாட சந்தர்ப்பமும் கிடைத்தது. இதில் குறிப்பிடத்தக்கதாக விவசாய பீடத்தில் கற்று வெளியேறிய மாணவர்களை ஆசிரியர்களாக விவசாய பீடத்தில் சந்திக்க முடிந்தது. விவசாய பீட பட்டதாரிகள் தற்போது ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டு உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பாடத்திட்டத்தினை கற்பிக்கின்றனர். அவர்களை மேலும் வலுவூட்டுதல் வேண்டும். விவசாய பீடத்தின் நான்கு தூண்களான மாணவர்கள், (கல்விசார்) ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் இவர்களுடன் கற்று வெளியேறியவர்கள் (பீடத்தின் பழைய மாணவர்கள்) இப்பீடத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையானவர்கள். பழைய மாணவர்கள் பலர் தற்போது ஆசிரியர்களாக பணிபுரிந்து கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கான கல்வியில் மற்றும் செயன்முறை பயிற்சியில் வலுவூட்டுதல் நிகழ்வினையும் விவசாய பீடம் இவ்வெள்ளிவிழா நிகழ்வுகளுடன் ஆரம்பிக்க வேண்டும் என்ற செய்தியையும் இவ்விடத்தில் பதிவுசெய்ய விரும்புகின்றேன். உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பாடத்திட்டத்தினை கற்கும் மாணவர்களை உள்வாங்க புதிய கற்கை நெறிகள் விவசாய பீடத்தில் ஆரம்பிக்கப்படுகின்றன. அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு இரு புதிய பட்டப்படிப்புக்கள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான பாட அலகுகளும் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றின் வருகையுடன் விவசாய பீடத்தினுள் உள்வாங்கப்படும் மாணவர்களினது எண்ணிக்கையும் உயர்வடைவதோடு வளங்களும் விருத்தியடையும். இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் 300 மில்லியன் ரூபாய்களின் உதவியுடன் மாணவர்களுக்கான கருத்தரங்கு மண்டபம், நூலகம், கணனி மையம் மற்றும் உடற்பயிற்சி கூடம் என்பன கிடைக்கவிருக்கின்றன. அதனுடன் செயன்முறை பயிற்சிக்கான பண்ணை வசதிகளும் கிடைக்கும் பட்சத்திலும் அந்த வளம் முழுமையாக விரைந்து கிடைக்கும் போது மாணவர்களுக்கான செயன்முறைப்பயிற்சியையும் விவசாய பீடத்தினால் வழங்கக்கூடியதாயிருக்கும். கனகராயன் குளத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பண்ணை விவசாய பீடத்திற்கு கிடைக்கும் பட்சத்தில் அது விவசாயம் கற்க வரும் மாணவர்கள் மாத்திரமின்றி உயர்தர மாணவர்கள், விவசாயிகள் அனைவருக்கும் பயிற்சியளிக்கும் நிலையமாகவும் அதில் ஆய்வுகள் பல நடைபெற வழியும் கிடைக்கும். கல்விக்கான செயற்பாட்டை முன்னின்று செயற்படுத்தும் இவ்விரு பீடங்களையும் இன்னும் வளப்படுத்த மாகாண சபையின் ஆதரவும் எமக்கு கிடைக்கவேண்டும். வளங் களை எமக்கு தாருங்கள் அவை மக்களையும் மாணவர்களையும் வளமாக்க, வளவாளர்களாக்க எமக்குதவும். விவசாய பீடத்திலிருந்து கற்று வெளியேறியவர்கள் விவசாய துறையில் குறிப்பாக விரிவாக்க துறையில், ஆராய்ச்சி துறையில் இன்னும் கமநல சேவையில் பணியாளர்களாக உள்வாங்கப்படுவதனாலும் ஆசிரியர்களாக, திட்டமிடலாளர்களாக, பண்ணை முகாமையாளர்களாக பணிபுரிவதனால் விவசாய பீடமும் விவசாய துறையும் இணைந்த் விவசாய மையத்தை அனைவரும் இணைந்து உருவாக்குவது வடபகுதி அபிவிருத்திக்கு அதன் தொழிற்றுறை வளர்ச்சிக்கு அதிலுள்ள வளங்களை சிறந்த முறையில் வினைத்திறனாக பயன்படுத்துவதில் பாதுகாப்பதில் பெரிதும் உறுதுணையாயிருக்கும். கைகள் அனைத்தும் ஒனறிணைந்தாலேயே பலம். எமது பலத்தை நாமே கருத் திலெடுக்காது உணர்ந்தறியாது கைகளை இணைக்காது கையேந துவதற்கு மட்டும் பயன்படுத்துகின்றோம். உளளக அரசியலும் சுயலாப அரசியலும கல்வியியலாளருக்கு வேண்டாமே!.

ஆசிரியர்களுக்கான வலுவூட்டலினை உயர்பட்ட படிப்புகள் பீடத்தினாலும் ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்புக்கள் உண்டு. அதனை எப்படி எவ்வாறு செய்யலாம் என்னும் உங்கள் கருத்துக்களையும் வரவேற்கின்றோம். கற்றலினை கல்வியை ஊக்குவிக்கும் கடப்பாடு கொண்ட பீடங்களின் வளர்ச்சி உங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை உள்வாங்கியே உயர்வடைய நினைக்கின்றன. சமூகத்தின் உறுப்பினராகிய உங்களது முன்னோடியான சிந்தனைகளுக்கு நிச்சயமாக பீடங்கள் செவிசாய்க்கும். எங்களூர் மக்களின் கல்வியை உயர் வடைய செய்ய நாமெல்லோரும் திடசங்கற்பம் கொண்டாக வேண் டும். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ஆய்வு கருத்தரங்குகள் அனைத்திலும் உங்களது காத்திரமான பங்களிப்பை செலுத்துங்கள். வாருங்கள்! கலந்துரையாடுங்கள்! கருத்துக்களை முன்வையுங்கள்! காத்தி ரமான அபிவிருத்திக்கான உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம். நாமும் முன்னேறி நாடும் முன்னேற வழியுண்டு கண்டீர்!.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை வலம்வரும் அரசியல் அநாதைகள்

**ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி குறித்து இன்று பேசுபவர்கள் கடந்த ஆறு மாதத்திற்கு முன்னர் இவ்வாறு பேசவில்லை எனவும் மகிந்தவை வலம் வருபவர்கள் அரசியல் அநாதைகள் எனவும் துறைமுகங்கள் மற்றும் விமான சேவை போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் காணப்பட்ட அரசியல் செயல்முறை குறித்து திருப்தியடைய முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற அனைவருக்கும் 90வீத குற் றப்பத்திரிகை காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுற்றி அரசியல் அநாதைகளே காணப்படுகின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அலரிமாளிகைச் செலவீனங்கள் ரணிலால் குறைக்கப்பட்டுள்ளன

அலரிமாளிகையின் மின்சார மற்றும் நீர்க் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளதாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அலரிமாளிகையின் மின்சாரக் கட்டணம் 83 இலட்ச ரூபாவாகும்.

இந்தத் தொகையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆறு இலட்சமாக குறைத்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான மின்சாரக் கட்டணம் மட்டுமன்றி, நீர்க் கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளன.

மாதமொன்றுக்கு 13 இலட்சமாக காணப்பட்ட நீர்க் கட்டணம் தற்போது 40 ஆயிரம் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடந்த அரசாங்கத்தினால் பாரியளவில் செலவழிக்கப்பட்ட பல விடயங்களின் செலவுகள் குறைகப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 30 | 60 | 25 |
| தக்காளி | 40 | 60 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 |
| கோவா | 30 | 40 | 40 | 30 |
| கரட் | 120 | 140 | 120 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 50 |
| புடோல் | 50 | 50 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 80 | 100 | 60 |
| பெரிய வெங்காயம் | 60-80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 60-120 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 60 | 100 | 40 | 50 |
| லீக்ஸ் | 160 | 150 | 160 | 240 |
| பீற்றூட் | 40 | 60 | 80 | 40 |
| கறிமிளகாய் | 40-80 | 80 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 250-340 | 600 | 600 | 400 |
| போஞ்சி | -- | 100 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 150 | 160 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 60 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 140 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 20 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

# சீன ஒத்துழைப்புகளுக்கு ருவன் நன்றி தெரிவிப்பு



இலங்கைக்கான சீன உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட யீ சியாங் லியிற்கும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன ஆகியோருக்கும் இடையில் சந் திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பு நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது சீன அரசாங்கம் இலங்கையின் அபிவிருத்திக்கும் பாதுகாப்புக்கும் வழங்கிவரும் ஒத்துழைப்புக்களுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

அதேபோல் புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெற்றியுடன் முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கைக் கான சீன உயர்ஸ்தானிகர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடலின் நிறைவில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 351


Search for people, places and things | Nagendram Home

மிது மிதுலா

**திரும்பப் பெற முடியாதவை**

1. உடலை விட்ட உயிர்
2. பேசி விட்ட வார்த்தை
3. கடந்து விட்ட நாட்கள்
4. இழந்து விட்ட இளமை
5. கொடுத்து விட்ட வாக்கு

சதீஸ் சதீசன்




லக்சி லக்சி




அனந்தி அனந்திகா




அசோக் குமார்



கேதீஸ்வரன் கமல்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனோர்: புதிய அரசினாலும் தீர்க்கப்படாத பிரச்சினை!



**1971** லிருந்து நாட்டில் இடம்பெற்ற பல்வேறு கிளர்ச்சிகளின் போதும் மோதல்களின் போதும் மக்கள் காணாமற் போவதற்கு அரச பயங்கரவாதமே காரணமாகும். தனது சொந்த நாட்டு மக்களுக்கு என்ன நடந்தது என்பதை விசாரணை செய்வதில் இலங்கை அரசாங்கம் தாமதம் காண்பிக்கிறது.

**இவ்வாறு 'சிலோன் ருடே' நாளிதழின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற இலங்கை ஜனாதிபதி தேர்தலில் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 12.1 மில்லியன் மொத்த வாக்குகளில் 52 சதவீத வாக்குகளைப் பெற்று, தனது பிரதான எதிர் வேட்பாளரான மகிந்த ராஜபக்சவை 449,072 பெரும்பான்மை வாக்குகளால், தோற்கடித்து நாட்டின் ஜனாதிபதியானார்.

இத்தேர்தலில் சிறிசேன 6.2 மில்லியன் வாக்குகளையும் ராஜபக்ச 5.8 வாக்குகளையும் பெற்றனர்.

சிறுபான்மைத் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் வாழும் ஐந்து தேர்தல் தொகுதிகளிலும் சிறிசேன ஆகக் குறைந்தது 62 சதவீத வாக்குகள் தொடக்கம் ஆகக் கூடிய 82 சதவீத வாக்குகளைப் பெற்றார். வடக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களால் சிறிசேனவுக்கு வழங்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 978,111 ஆகும்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், வன்னி மற்றும் மட்டக்களப்பு ஆகிய மூன்று தேர்தல் மாவட்டங்களிலும் சிறிசேன 604,413 வாக்குகளைப் பெற்றார். சிறிசேன பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் 21.8 சதவீதமானவை தமிழ் மற்றும் முஸ்லீம் சிறுபான்மையினர் வாழும் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்துதல், ஜனநாயகத்தை நிலைநாட்டுவதன் ஊடாக பேரினவாத ஆட்சியை மாற்றுதல் உட்பட பல்வேறு வாக்குறுதிகளை இலங்கை ஜனாதிபதி சிறிசேன தனது தேர்தல் பரப்புரையில் வழங்கியிருந்தார். சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், நாட்டில் மத ரீதியான முரண்பாடுகள் ஏற்படுவது குறைந்துள்ள போதிலும், முற்றிலும் ஒழிக்கப்படவில்லை. இவ்வாறான மத வன்முறைகளில் ஈடுபட்ட தீவிரவாத அமைப்புக்கள் இலங்கையின் முன்னைய அரசாங்கத்தால் ஆதரவளிக்கப்பட்டன.

19ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவதன் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையிலுள்ள அதிகாரங்கள் சிலவற்றை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கும் மேலாக, வடக்கில் பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தனியார் சொத்துக்கள் அதனுடைய உரிமையாளர்களிடம் மீளவும் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் இது முற்றிலுமநிறைவடையவில்லை.

தமிழ் மக்களின் சில அவாக்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை புதிய அரசாங்கம் முன்னெடுத்த போதிலும், இலங்கையில் 26 ஆண்டுகளாகத் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் போது காணாமற் போனவர்கள் தொடர்பாக எவ்வித தீர்வுகளும் எட்டப்படவில்லை.

போரின்போது காணாமற்போனவர்களில் ராஜபக்சவின் 10 ஆண்டு கால ஆட்சியின்போது காணாமற் போனவர்கள் தொடர்பாக இன்னமும் எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை. இலங்கையில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு இலங்கை மீது அனைத்துலக சமூகம் சார்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் அழுத்தம் கொடுத்து வருகிறது.

இந்நிலையில், செப்ரம்பர் மாதத்தில் மனித உரிமைகள் பேரவை ஜெனீவாவில் கூடும்போது காணாமற் போனவர்கள் தொடர்பாக இலங்கை முழுமையான விசாரணையைக் கையளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.



இலங்கைல் 1971 இல் இடம்பெற்ற கிளர்ச்சியின் போது தமது அன்பிற்குரியவர்கள் கொல்லப்பட்டும் காணாமற் போனபோதும் கூட இந்த வடயத்தில் சிங்கள சமூகமும் அனைத்துலக சமூகமும் அமைதி காத்தன. இதன்போது 13,000 வரையானவர்கள் காணாமற்போயினர் அல்லது படுகொலை செய்யப்பட்டனர்.

இதேபோன்று, 1987- 90 களில் தென்னிலங்கையில் தொடரப்பட்ட கிளர்ச்சிகளில் சிங்களவர்கள் பாதிக்கப்பட்ட போதிலும் குறிப்பாக இதில் ஜே.வி.பி தலைவர் றோகண விஜயவீர படுகொலை செய்யப்பட்ட போதிலும் இது தொடர்பாக பாதிக்கப்பட்ட சமூகம் அமைதி காத்தது.

இலங்கை அரசால் அரங்கேற்றப்பட்ட இவ்விரு கிளர்ச்சிகள் தொடர்பாக அனைத்துலக சமூகம் எவ்வித விசாரணைகளையும் முன்னெடுக்கவில்லை. இதில் காணாமற் போன தமது உறவினருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இன்றளவும் எதுவும் தெரியாது.

ஜனவரி 2010இல் ஜனாதிபதித தேர்தல் இடம்பெற்ற போது காணாமற் போன கேலிச்சித்திர வடிவமைப்பாளரான பிரகீத் எக்னலிகொடவுக்கு என்ன நடந்தது என்பதை இவரது குடும்பத்தினர் இன்னமும் அறியவில்லை.

1971 லிருந்து நாட்டில் இடம்பெற்ற பல்வேறு கிளர்ச்சிகளின் போதும் மோதல்களின் போதும் மக்கள் காணாமற்போவதற்கு அரச பயங்கரவாதமே காரணமாகும். தனது சொந்த நாட்டு மக்களுக்கு என்ன நடந்தது என்பதை விசாரணை செய்வதில் இலங்கை அரசாங்கம் தாமதம் காண்பிக்கின்றது.

ஆகவே கடந்த காலத்தில் இலங்கையல் காணாமற் போன சம்பவங்கள் பல நடந்த போதும் அனைத்துலக சமூகம் வாளாதிருந்துள்ளதால், தற்போது இலங்கையல் நடந்தேறிய பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் அனைத்துலக சமூகம் அமைதி காப்பதானது எவ்வித ஆச்சரியமளிக்கும் விடயமல்ல.

இலங்கையல் தற்போது பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்பாக விசாரணை செய்வதன் மூலம் சிங்களப் பெரும்பான்மை சமூகத்தின் வாக்குகளை இழப்பதற்கு இலங்கையின் தற்போதைய அரசாங்கம் தயாராக இல்லை.

காணாமற் போன தமிழ் மக்கள் தொடர்பாக விசாரணை செய்வதானது தேர்தலில் வாக்களிப்பதற்குத் தடையாக இருக்கும் எனவும் இது ஒரு சிக்கலான விடயமாக உள்ளதாகவும் இலங்கை அரசாங்கம் கருதுகிறது.

மீண்டும் அரசியலில் உள் நுழைய முற்படும் ராஜபக்சவுக்கு சிங்கள சமூகத்தின் அறுதிப் பெரும்பான்மை வாக்குப் பலமுண்டு. ஆனாலும் இது கடந்த தேர்தலில் பயனளிக்கவில்லை.

எடுத்துக்காட்டாக, 2010 இலங்கை ஜனாதிபதித தேர்தலில் ஆறு மில்லியன் வரையான வாக்குகளைப் பெற்ற ராஜபக்ச 2015 ஜனாதிபதித தேர்தலில் 5.7 மில்லியன் வாக்குகளையே பெற்றிருந்தார். நடந்து முடிந்த ஜனாதிபதித தேர்தலில் 1.8 மில்லியன் புதிய வாக்காளர்கள் தமது வாக்குகளை வழங்கிய போதிலும் ராஜபக்சவின் வாக்குகள் குறைவடைந்தன. ஆகவே சிங்கள பௌத்த வாக்காளர்களுக்கு மத்தியில் இனவெறி என்பது நீண்டகாலத்திற்குப் பயனளிக்காது என்பதையே இது சுட்டி நிற்கிறது.

போரின்போது காணாமற்போன தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமே நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுமலர்ச்சிகள் பயனளிக்கும். இதுவே நாட்டின் நீண்டகால நலனை உறுதிப்படுத்தும்.

அடுத்த தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும் அதன்பிறகே ராஜபக்சவால் இழைக்கப்பட்ட குற்றங்களைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஆகவே செப்ரம்பருக்கு முன்னர், பொதுத் தேர்தலை மேற்கொள்வதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படலாம். தேர்தலின் மூலம் ஆட்சிக்கு வரும் புதிய அரசாங்கம் மனித உரிமை விவகாரங்களைத் தீர்ப்பதற்கான காலக்கெடுவை அனைத்துலக சமூகமானது மார்ச் 2016 வரை நீட்டிப்பதற்கான அனுமதியை வழங்கக் கூடும.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 இற்கு ஆதரவளிக்காமை

# தேசத்துரோகம்

## ராஜித எச்சரிக்கை



(கொழும்பு)

**19 ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிக்காமை தேசத்துரோக செயலாகும் என அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் உச்ச நீதிமன்றத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள மாற்றங்களே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தோசப்படுத்தும் நோக்கில் ஒரு சில தரப்பினர் 19 ஆம திருத்தச் சட்டத்தை எதிர்த்து வருகின்றனர். இந்த முயற்சி வெற்றியளிக்காது.

அரசாங்கம் என்ற ரீதியில் 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

முடியாத பட்சத்தில் முன்னாள் ஜனாதிபதி புற்செடியில் தொங்குவது போன்று பல்வேறு தரப்பினரைக் கொண்டு ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்தி வருகின்றார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இன்னமும் முன்வைக்கப்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்குதல், புலிகளுக்கு சொந்தமான வாகனங்களை எடுத்துக்கொள்ளல் உள்ளிட்ட பாரியளவிலான குற்றச்சாட்டுக்கள் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக சுமத்தப்படவுள்ளன.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ திவிநெகும திட்ட பணத்தை தேர்தல் காலத்தில் வழங்கியமைக்கான சாட்சியங்கள் கிடைக்கப்பெறுகின்றன என ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

## எனக்கெதிராக இருபது உறுப்பினர்கள் கையொப்பமிட்டால் பதவி விலகுவேன்

### மேல் மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணசபையில் அங்கம் வகித்து வரும் 20 உறுப்பினர்கள் எனக்கு எதிராக கையொப்பமிட்டால் பதவியைத் துறக்கத் தயார் என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பதவி விலக வேண்டுமென மாகாணசபையின் 56 உறுப்பினர்களில் 20 பேர் உத்தியோகபூர்வமாக கையொப்பமிட்டு எதிர்ப்பை வெளியிட்டாலும் பதவியை துறப்பேன்.

முதலமைச்சர் பதவியிலிருந்து என்னை வெளியேற்ற சில தரப்பினர் முயற்சிக்கின்றார்கள்.



எனினும் பெரும்பான்மையான உறுப்பினர்கள் எனக்கே ஆதரவளித்து வருகின்றார்கள் என பிரசன்ன ரணதுங்க சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் பதவியிலிருந்து பிரசன்ன ரணதுங்கவை நீக்க ஆளும் கட்சியின் பிரபல அமைச்சர் ஒருவர் முயற்சித்து வருவதாக வெளியான செய்து குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது அதற்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் தமது பதவியை பறிக்க முயற்சித்தால் நீதிமன்றின் உதவியை நாட நேரிடும் என பிரசன்ன ரணதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

## சில மன்னர்கள் கடவுளை விடவும் தாம் பெரியர் எனக் கருதினார்கள்



### ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சில மன்னர்கள் கடவுளை விடவும் தாம் பெரியவர்கள் என கருதிச் செயற்பட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரச தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடவுளை விடவும் பெரியவர்கள் எனக் கருதியவர்களுக்கு இன்று பிழைத்துவிட்டது.

இலஞ்ச ஊழல் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு சிலரை வாக்குமூலம் பெற்றுக்கொள்ள அழைக்கும் போது அது துட்டகைமுனு மன்னனை ஆணைக் குழுவிற்கு அழைப்பது போன்று செயற்படுகின்றனர்.

கடந்த பத்து ஆண்டுகளில் சில தனிப்பட்ட நபர்களின் நன்மதிப்பை பூதாகரமாக காண்பிக்க முயற்சிக்கப்பட்டது.

சிலருக்கு தற்போது புதிய தலைவர்கள் இருக்கின்றார் என்பது கூட நினைவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி எனது சொந்த சொத்து அல்ல, கட்சி தோல்வி அடைந்த போதெல்லாம் அதனை கட்டிக்காக்க நடவடிக்கை எடுத்திருந்தேன்.

தற்போது அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து தீர்மானம் எடுக்கின்றோம்.

100 நாட்கள் திட்டத்தில் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் 44 வாக்குறுதிகள் பூர்த்தியாகியுள்ளன.

52 வாக்குறுதிகள் பூர்த்தியாகும் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

நான்கு வாக்குறுதிகள் மட்டும் நீண்ட கால அடிப்படையில் அமுல்படுத்தப்பட வேண்டியுள்ளது.

2005 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ பிரபாகரனுடன் இணைந்து என்னைத் தேர்தலில் தோற்கடித்தார்.

அதன் பின்னர் குமரன் பத்மநாதனுடன் அவர் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தார் என ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### வெற்றியின் விதைகள்

வாய்ப்புக்களே வெற்றியின் விதைகள். வாய்ப்புக்கள் எப்போதும் வந்து கொண்டே இராது. எப்போதாவதுதான் அது வரும். நாம்தான் கவனமாக இருந்து அதைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும்.

ஒரு வாய்ப்பு, இரண்டு முறை உங்கள் வீட்டுக்கதவைத் தட்டாது என்கிறார் அறிஞர் கம்போர்ட். ஒரு உண்மைச் சம்பவத்தைச் சொல்கிறேன்...

தந்தி கொடுப்பது அதிக பிரபலமாக இருந்த நேரம் அது. அதில் பயிற்சி பெற்றவர்களையே அந்தக் காலத்தில் வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள். அதற்கு மோர்ஸ் கோடு அதாவது கட்கட கட்கட என்ற ஒளியின் மூலம் தகவலை அனுப்புகிற முறையை அவர்கள் கற்றிருக்க வேண்டும். ஒரு தந்தி அலுவலகத்தில் இதற்கான நேர்முகத் தேர்வு நடைபெற்றது. அது முற்பகல் 10 மணிக்கு துவங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. 15 பேர் தேர்வுக்காகக் காத்திருந்தனர். நீண்ட நேரமாகியும் யாரும் அழைக்கப்படவிலலை. இவர்கள் பொறுமை இழந்து தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த 15 பேரிலிருந்த ஒருவர் வேகமாக எழுந்தார். தேர்வு நடக்கும் அறைக்குள் போனார். கொஞ்ச நேரத்தில் வேலையில் சேர்வதற்கான கடிதத்தோடு வெளியே வந்தார். தேர்வுக்கு வந்திருந்த எல்லோரும் குழம்பிப் போனார்கள். எங்களையெல்லாம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்காமல் அவரை எப்படி தேர்ந்தெடுக்கலாம் என்று தகராறு செய்தனர். அப்போது தேர்வை நடத்திய தலைவர் சொன்னார். நாங்கள் உங்கள் எல்லோருடைய பெயர்களையும் வரிசையாக அழைத்துக்கொண்டு தான் இருந்தோம்.

அதாவது வாய்மொழியாக இல்லாமல் தந்தி கொடுப்பதற்குரிய "மோர்ஸ் கோடு" மூலம் அழைத்தோம். நீங்கள் யாரும் அதைக் கவனிக்கவில்லை. உங்களில் ஒருவர் மட்டும் தன்பெயர் அழைக்கப்படுவதை கவனித்து விட்டு உள்ளே வந்தார். அவருக்கு அந்த வேலையைக் கொடுத்து விட்டோம் என்றார்.

இன்னொரு நிகழ்ச்சியைப் பாருங்கள். ஒரு நாட்டின் அரசர் மக்களின் மன நிலையை அறிய ஒரு சோதனை நடத்தினார். மக்கள் அதிகமாக நடக்கும் மலைப்பாதையின் நடுவில் ஒரு பாறாங்கல்லைப் போட ஏற்பாடு செய்தார்.

அந்தப் பாதையில் நடந்த மக்கள் பாறாங்கல்லைப் பார்த்து ஓரமாக நடந்து போக தொடங்கினர். கல்லை எடுத்த பின்னர் போகலாம் என்று சிலர் வாகனங்களோடு அங்கேயே காத்துக்கிடந்தனர். சிலர் அரசாங்கத்தை திட்டித் தீர்த்தனர்.

அந்த வழியாக வந்த ஒரு இளைஞன் தன் பலம் கொண்ட மட்டும் அந்தப் பாறாங்கல்லை நகர்த்த முயற்சி செய்தான். சிலர் அதை வேடிக்கை பார்த்தனர். சிலர் அவனை பரிகாசம் செய்தனர். இளைஞன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் பாறாங்கல்லை நகர்த்தி மலைச்சரிவில் உருட்டி விட்டான். பாறாங்கல்லின் அடியில் நிறையைப் பொற்காசுகள் இருந்தன. அத்துடன் மன்னன் கையெழுத்திட்ட ஒரு கடிதமும் இருந்தது. இந்த பாறாங்கல்லை நகர்த்தியவருக்கு பாராட்டு.

இங்கிருக்கும் பொற்காசுகளை பரிசாக ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களைப் போன்றவர்களே இந்நாட்டுக்குத் தேவை. இப்படித்தான் நாம் பயணிக்கும் வழியெல்லாம் வாய்ப்பு என்னும் புதையல்கள் புதைந்து கிடக்கின்றன. வாய்ப்புகள் வரும்போது அதை பயன்படுத்துவது ஒரு வகையென்றாலும். நாமே வாய்ப்பை உருவாக்கும் பயிற்சியும் பெற வேண்டும்.

"வெற்றியாளர்கள் சந்தர்ப்பங்களையே அதாவது வாய்ப்புக்களையே உருவாக்கும் ஆற்றல் படைத்தவர்கள்" என்கிறார் அறிஞர் லாயி பாஸ்டியர்.

வாய்ப்பு என்பது எப்போதும் நம் காலடியிலேயே உள்ளது. நாம் செய்ய வேண்டியதெல்லாம். அந்த வாய்ப்பை கண்டுணர்வதேயாகும்.

எப்போதும் இக்கரைக்கு அக்கரை பச்சையாகத் தெரியும். அக்கரையிலுள்ள பசுமையை நாம் நன்றாக இருக்கிறதே என்று பார்த்துக்கொண்டு இருக்கும் போது வேறு சிலரோ நாம் இருக்கும் கரையை பசுமை என பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

வாய்ப்புக்களை எப்படிக் கண்டுணர்வதென்று தெரியாதவர்கள் அந்த வாய்ப்பு கதவைத் தட்டும் போது அந்தச் சத்தத்தை பற்றி குறைகூறிக்கொண்டிருப்பார்கள். இந்த மனோபாவம் மாற வேண்டும்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவானி சிங் வாதாடலாமா?

சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ஆர்.கே. அகர்வாலின் பதவியேற்புக்காக கவர்னர் ரோசய்யாவும் அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவும் கூடியிருந்தனர். அகர்வால் பதவியேற்ற பிறகு ஜெயலலிதா பொக்கே கொடுத்து 'பணி சிறக்க வாழ்த்துகள்' என்றார்.

2011 நவம்பர் 3,
சுப்ரீம் கோர்ட்.

'சொத்துக் குவிப்பு வழக்கில் நேரில் ஆஜராவதிலிருந்து ஜெயலலிதாவுக்கு விலக்கு அளித்து தவறான முன்னுதாரணத்தை உருவாக்க விரும்பவில்லை'- சுப்ரீம் கோர்ட் நீதிபதி தீபக்மிஸ்ரா.

இவர்கள்தான் ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில், அரசு வழக்கறிஞராக பவானி சிங் ஆஜராகக் கூடாது என தொடரப்பட்ட மனுவை விசாரிக்கப் போகிறவர்கள். இந்த பெஞ்சுக்கு நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமை. இந்த மூன்று நீதிபதிகளைப் பற்றிய முன்னோட்டம் இங்கே...

**நேர்மையை வலியுறுத்தும் தீபக் மிஸ்ரா!**

டெல்லி உயர்நீதிமன்றத்தலைமை நீதிபதியாக இருந்த தீபக் மிஸ்ரா பதவி உயர்வில் சுப்ரீம் கோர்ட் நீதிபதியானவர். வழக்கின் விசாரணையை எப்போதும் தாமதப்படுத்துவதை விரும்பாதவர். அதை வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார். சென்னை ஜுடிஷியல் அகாடமியில் நடைபெற்ற மாவட்ட நீதிபதிகளுக்கான பயிற்சியில் பங்கேற்ற தீபக் மிஸ்ரா, 'நீதிமன்றத்தில் நடக்கும் விசாரணையை தாமதப்படுத்தும் செயலைத் தடுக்க வேண்டும்' என்றார். 'கோர்ட்டு விசாரணையில் நேர்மை அவசியம். முறைகேடுகளைத் தடுக்கவேண்டும். அப்போது தான் விரைவாக நீதி பரிபாலனை செய்ய முடியும்.

'நீதிபதிகளின் பணி தெய்வகமானது' என்றார். கடந்த ஜனவரியில் டெல்லி பார் கவுன்சில் நடத்திய பயில ரங்கத்தில் பேசியபோது 'வாய்தா வாங்குவது ஒரு நோய் போன்றது. அந்த ஒழுங்கீனமான செயலை இளம் வழக்கறிஞர்கள் தவிர்க்க வேண்டும்' என்றார்.

'குற்றப் பின்னணி உள்ளவர்களை அமைச்சர்களாக நியமிக்க வேண்டாம் என பிரதமருக்கு, மாநில முதல்வர்களுக்குகடந்த ஆண்டு சுப்ரீம் கோர்ட் அறிவுரை வழங்க, அது நாடு முழுவதும் பரபரப்பைக் கிளப்பியது. 'குற்றப் பின்னணி இல்லாதவர்களைக்கொண்ட அரசாங்கத்தால் ஆளப்பட வேண்டும் என்பது தான் ஜனநாயகக் குடியரசின் லட்சியம்.

ஜனநாயகத்தில் குற்ற வரலாறு கொண்டவர்களால் ஆளப்படுவதை மக்கள் ஒருபோதும் விரும்புவதில்லை. நல்ல நிர்வாகத்தை குற்றப் பின்னணி இல்லாத, சேவை மனப்பான்மை கொண்டவர்களால் நிர்வகிக்கப்படும் அரசால் மட்டுமே வழங்க முடியும்' என்று தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கும் நீதிமன்றம், 'பிரதமர், முதல்வர்கள் அரசியல் சாசனத்தின் நம்பிக்கை பெட்டகம். அவர்கள் நாட்டு நலனைக் கருத்தில் கொண்டு செயறபட வேண்டும். பதவிப் பிரமாணத்தின்போது எடுத்துக்கொண்ட உறுதிமொழியின் புனிதத்தை கருத்தில்கொண்டு நாட்டு மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின்படியும் செயறபட வேண்டும். இதை கவனத்தில்கொண்டு குற்ற வரலாறு உடையவர்களை அமைச்சர்களாக அமர்த்த பரிசீலிக்கக் கூடாது' என்று தெளிவாகச் சொல்லியிருந்தது. இந்த வழக்கை விசாரித்த ஐந்து பேரில் தீபக் மிஸ்ராவும் ஒருவர். அவர்தான் மற்றவர்களின் சார்பில் தீர்ப்பை எழுதியவரும்கூட.

இதையெல்லாம்விட ஜெயலலிதா வழக்கிலும் முன்பு தீபக் மிஸ்ராவுக்கு பங்கு உண்டு! பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கின் போது நேரில் ஆஜர் ஆகி, கேள்விகளுக்குப் பதில் கொடுத்தார் ஜெயலலிதா. 1,339 கேள்விகளில் எஞ்சிய 772 கேள்விகளுக்குப் பதிலளிக்க நேரில் ஆஜராகும்படி அப்போதைய நீதிபதி மல்லிகார்ஜுனையா உத்தரவிட்டார். உடனே ஜெயலலிதா 'தனி நீதிமன்றத்தில் மீண்டும் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். தனி நீதிமன்றத்தின் கேள்விகளுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளிக்க அனுமதிக்க வேண்டும்' எனச் சொல்லி சுப்ரீம்கோர்ட்டில் மனு போட்டார். இந்த வழக்கு நீதிபதிகள் தல்வீர் பந்தாரி மற்றும் நீதிபதி தீபக் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் முன்பு வந்தது. ஜெயலலிதாவின் மனுவை நிராகரித்த சுப்ரீம் கோர்ட், தனி நீதிமன்றத்தில் ஜெயலலிதா நேரில் ஆஜராகும்படி உத்தரவிட்டது. 'நேரில் ஆஜராவதில் இருந்து ஜெயலலிதாவுக்கு விலக்கு அளிக்க முடியாது. அவ்வாறு செய்து, நாங்கள் தவறான முன்னுதாரணத்தை உருவாக்க விரும்பவில்லை' என்றார்கள் நீதிபதிகள்.

தீபக் மிஸ்ரா தமிழக தொடர்பான வழக்குகளையும் விசாரித்திருக்கிறார். அதில் முக்கியமானது மக்கள் நலப் பணியாளர்கள் வேலை பறிப்பு வழக்கு. 'தமிழக அரசின் மக்கள் நலப் பணியாளர்களின் பணி நீக்க ஆணை செல்லும்' எனச் சொன்னது உயர் நீதிமன்றம். இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு தீபக் மிஸ்ரா அடங்கிய அமர்வு முன்புதான் நடைபெற்றது. உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ரத்து செய்ததோடு மக்கள் நலப் பணியாளர்களின் மேல்முறையீட்டு மனுவை விசாரித்து 6 மாதங்களுக்குள் தீர்ப்பளிக்க வேண்டும்எனஉத்தரவிட்டது சுப்ரீம் கோர்ட். அதோடு 'வழக்குவிசாரணை முடியும்வரை, தமிழக அரசு வாய்தா போன்ற இழுத்தடிப்புகளைச்செய்யக் கூடாது, மக்கள் நலப் பணியாளர்களின் வாழ்க்கையை அரசு பாழடித்திருக்கிறது. 20 வருடம் அரசுக்காக அவர்கள் தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கின்றனர் என்பதை அரசு கருத்தில்கொள்ள வேண்டும்' என்றும் அறிவுறுத்தியது.

இதேபோல டி.என்.பி.எஸ்.சி வழக்கையும் கூடங்குளம் வழக்கையும் தீபக் மிஸ்ரா அடங்கிய பெஞ்சுதான் விசாரித்தது. டி.என்.பி.எஸ்.சி குரூப் 1 தேர்வில் தேர்வு செய்யப்பட்ட 65 அதிகாரிகளின் விடைத்தாள்களை மறு ஆய்வு செய்ய யு.பி.எஸ்.சி-க்கு உத்தரவிட்டது சுப்ரீம் கோர்ட். 'கூடங்குளம் அணுமின் நிலைய திட்டத்துக்கு தடை விதிக்க முடியாது' என சுப்ரீம் கோர்ட் சொன்னபோதும், 'அணு உலைக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள் மீது தொடரப்பட்ட கிரிமினல் வழக்கு களை தமிழக அரசு வாபஸ்பெற வேண்டும்' எனவும் உத்தரவிட்டது. இந்த அதிரடி உத்தரவுகள் போடப்பட்ட பெஞ்சில்தான் தீபக் மிஸ்ரா இடம்பெற்றிருந்தார்.

**அகர்வாலுக்கு ஏற்பட்ட 'சென்னை' கசப்பு!**

சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக அகர்வால் பதவி யேற்றபோது '150 ஆண்டு கால பாரம் பரியமிக்க சென்னை நீதிமன்றத்தில் பணியாற்றுவதில் பெருமைப்படுகிறேன்' என்றார். ஆனால், சிறிது காலம்தான் இங்கு அவர் இருந்தார். பதவியுயர்வில் சுப்ரீம் கோர்ட் டுக்குப் போனார் அகர்வால். அதற்காக சென்னை ஹைகோர்ட்டில் வழியனுப்பும் விழா நடந்தபோது, "சென்னை உயர் நீதிமன்றத்துக்கு வர வெளி மாநில நீதிபதிகள் தயங்குகிறார்கள்" என மனம் வருந்திச் சொன்னார்.

"நான் இங்கே வந்தபோது நீதிமன்றத்தின் ஓர் அங்கமாக இருந்து வழி நடத்தினேன். ஆனால், உங்களில் சிலரால் நான் காயப்படுத்தப்பட்டேன். சக நீதிபதி ஒருவரே என்னை வசைபாடினார்' என்று வெளிப்படையாகப் பேசினார்.

சென்னையில் கொத்தடிமை தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான விழாவில் பேசிய அகர்வால், 'சட்டத்தின் பயன்களும் நீதியும் நாட்டின் அனைத்துப் பகுதி மக்களுக்கும் கிடைக்க வேண்டும். மாறாக, சிலருக்கு மட்டுமே அவை கிடைக்குமானால், அவை அர்த்தமற்றதாகி விடும'என்றார்.

**பதவி நீக்கம் செய்த பிரபுல்ல சி.பந்த்!**

பிரபுல்ல சி.பந்த் முக்கியமான பல வழக்களில் தீபக் மிஸ்ராவுடன் சேர்ந்து அதிரடி தீர்ப்புகளைத் தந்தவர். கோவை தேக்கம்பட்டியைச் சேர்ந்த அ.தி.மு.க பிரமுகர் கிருஷ்ணமூர்த்தி. 2006 உள்ளாட்சித் தேர்தலில் தேக்கம்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார்.

வேட்பு மனுவில் தன்மீதுள்ள குற்ற வழக்குகளை கிருஷ்ண மூர்த்தி தெரிவிக்கவில்லை. இது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் கிருஷ்ண மூர்த்தியின் வெற்றியை ரத்து செய்தது சென்னை உயர் நீதிமன்றம். இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்த வழக்கில் கடந்த பெப்ரவரி மாதம் தீர்ப்பு அளிக்கப்பட்டது. 'வேட்பாளர் குறித்த முழு தகவல்களும் வாக்காளர்களுக்குத் தெரிய வேண்டும். இது அவர்களுடைய உரிமையாகும். கிரிமினல் குற்றப் பின்னணி உள்ளவர்கள் அதை மறைத்து தேர்தலில் போட்டியிட்டால், அவர்கள் வெற்றி பெற்றாலும் செல்லாது.

அரசியல் கிரிமினல் மயமாவது ஏற்க முடியாது' எனச் சொல்லி கிருஷ்ண மூர்த்தியின் பதவிப் பறிப்பு செல்லும் என்றது. இந்த உத்தரவைப் போட்ட பெஞ்சிலும் தீபக் மிஸ்ராவும் பிரபுல்ல சி.பந்த்தும் இடம்பெற்றிருந்தார். இப்படி முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளை விசாரித்து தீர்ப்பளித்த மூன்று நீதிபதிகள் முன்தான் பவானி சிங் வழக்கும் வரப் போகிறது!


**ஜுனியர் விகடன்-**



ஆர்.கே.அகர்வாலின் பதவியேற்பில் ஜெயலலிதா...



தீபக் மிஸ்ரா





பிரபுல்ல சி.பந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் தீர்க்கதரிசன உரைகள்

**தந்தை செல்வா 1898 ஆம் ஆண்டு மலாயாவில் பிறந்து 1977 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமது சீவிய ஓட்டத்தை முடித்தவர். அன்னாரின் சிராத்த தினம் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியாகும்.அவரை நினைவுகூரும் வண்ணமாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**



"இன்று இலங்கையை ஆண்டு வரும் சேனநாயக்க அரசாங்கம் ஹிட்லரின் நாடு பிடிப்புக் கொள்கையைக் கையாண்டு தமிழினத்தை ஒடுக்க வழிகோலுகின்றது. அதாவது ஹிட்லர் தனது எதிரிகளில் மிக வலிமை குறைந்தவனே முதல் வென்று பின் வலிமை கூடிய நாடுகளை ஒவ்வொன்றாகச் சூறையாடினார். அதுபோலவே சேனநாயக்க அரசாங்கமும் செய்கின்றது. முதல் இந்தியரின் வாக்குரிமையைப் பறிப்பதில் தனது கருத்தைச் செலுத்தியுள்ளது. அடுத்து கல்லோயா, கந்தளாய்த் திட்டங்களின் கீழ் சிங்களவரைக் குடியேற்றுவதன்மூலம் தமிழ் இனத்தின் வலியைக் குறைக்க நடவடிக்கை எடுப்பார்கள். இவையெல்லாம் நிறைவேறிய பின்பே தமிழர் நெருக்கமாக வசிக்கின்ற யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்கள் மீது தாக்குதலை ஆரம்பிப்பார்கள். அதுவரை ஆசைவார்த்தை காட்டிக்கொண்டு இருப்பார்கள். நாங்கள் இந்த அபாயத்தை உணர்ந்தமையினால் இதிலிருந்து தமிழ்பேசும் இனத்தைக் காப்பாற்ற முயற்சி எடுத்து வருகின்றோம்"-11.09.1950

"அந்நிய ஆங்கிலேய ஆட்சியிலும் தமிழ் இனத்தவர்கள் அடிமைகளாய் இருந்தவர்கள் என்பது உண்மையே. ஆனால் அந்த ஆட்சியில் தமிழினத்தை அழிக்கும் முயற்சிகள் நடைபெறவில்லை. இன்று அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள சிங்கள மக்களுடைய ஆட்சியில் தமிழ்மக்கள் அழிவிலிருந்து தப்பிப் பிழைப்பார்களோவென்ற பயங்கரமான ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. தம்மை அழிவுக்கே ஆளாக்கக்கூடிய நிலையை ஏற்படுத்திய பெப்ரவரி 4ஆம் திகதியை தமிழ்மக்கள் துக்கதினமாக அனுஷ்டிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கமில்லை"-03.02.1959

"இலங்கையைப் போன்ற ஒரு சிறிய நாட்டிலே ஒரு பெரிய பிரச்சினையை நாம் எதிர்நோக்கி நிற்கின்றோம். இந்தநாட்டிலே நிலைபதிகளாக வாழ்ந்துவரும் 8 இலட்சம் இலங்கை வாசிகளை இந்தியாவுக்கு அனுப்பிவிட இலங்கையின் ஆட்சியாளர் திட்டமிட்டுள்ளனர். இந்த 8 இலட்சம் மக்களும் இந்த நாட்டு மொத்தக்குடிசனத் தொகையில் 10 சதவீதத்தினர். இது நாங்கள் நம்ப முடியாத அளவுக்கு ஒரு பைத்தியக்காரத்தனமான நடவடிக்கை.ஆனால் இதுதான் உண்மை நாட்டின் நிலை"-10.10.1954

ஒரு தமிழ் இராச்சியம் ஸ்தாபிக்கப்படும் பட்சத்தில் முஸ்லிம் மக்களும் தங்களுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பினால் அந்தக் கோரிக்கை எந்தவித எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள்ளப்படும். தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் சமஷ்டி அரசியலில் தமிழ் மக்களுடன் ஒத்துழைக்கத் தவறமாட்டார்கள் என்பதில் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையிருக்கின்றது. ஆயினும் அவர்களும் ஒரு தனிச் சுயாட்சி மாகாணத்தை அமைக்க விரும்பினால் ஜனநாயகக் கொள்கையின் அடிப்படையில் அந்த விருப்பம் ஈடேற்றப்படும் என்பதை உறுதியாக என் கட்சியின் சார்பாக நான் கூற விரும்புகின்றேன்"-12.08.1951

"இவ்வளவு காலமும் நாம் அந்நியர் ஆட்சிக்குட்பட்டு அவர்களுக்கு அடங்கி நடுங்கிப் பெட்டிப் பாம்பைப்போல என்ன செய்வதென்றறியாது தயங்கிக்கிடந்தோம்.ஒருவாறு அவர்களிடமிருந்து தவறிச் சுதந்திர இலக்கைப் பெறுந் தருணத்தில் கடைசியாக நம்மை ஆண்ட ஆங்கிலேயர் என்னசெய்தார்கள்? பேச்சளவிலுள்ள சுதந்திரத்தைத் தமிழருக்கும் செய்கையளவிலுள்ள சுதந்திரத்தை நம் சிங்களச் சகோதரர்களுக்கும் கொடுத்து ஒரு பட்டியில் அடைக்கப்பட்ட ஆடுகளைப்போல் தமிழர்களையும் சிங்களவர்களையும் ஒன்றாக அடைத்துவிட்டுச்சென்றார்கள். அத்துடன் அவர்கள் சில சிங்களப்பிரபுக்களுடன் சில பொருத்தங்களையும் ஒழுங்குபடுத்திக் கொண்டுதான் சென்றார்கள். தமிழரசுக்கட்சி [illegible] தமாக ஒன்றும் கேட்கவில்லை. மாகாண சுயாட்சிதான் கேட்கிறார்கள். பங்காளம், பம்பாய் முதலிய மாகாணங்கள் எவ்விதமான சுய உரிமை பெற்று டில்லியிலுள்ள மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருக்கின்றனவோ அப்படியே தமிழ் மாகாணங்கள், சிங்கள மாகாணங்களாகப் பிரித்து ஒரு மத்திய அரசாங்கத்தின் குடையின்கீழ் தமிழினம் பரிபாலிக்கப்படவேண்டும் என்பதுதான் தமிழரசுக் கட்சியின் கோரிக்கை"-17.05.1950

"ஒருநாட்டில் தேசியம் வளருவதுடன் மக்கள் ஐக்கியமாக வாழ்வதற்கு அந்நாட்டில் பெரும்பான்மையினராகவிருக்கும் மக்கள் தங்களின் ஆதிக்கத்தை சிறுபான்மையினர் மீது நீதியுடன் செலுத்தவேண்டும். இதைச் சிங்களவர் முற்றாக மறந்துவிட்டார்கள். இதன் விளைவாகத்தான் "சிங்களம் மாத்திரம்" கூச்சல் எழுந்திருக்கின்றது. தமிழ்மொழி இலங்கையில் இல்லாவிட்டாலும் இந்தியாவில் பாதுகாக்கப்படுமென்றும் சிங்களமோ அப்படியல்லவென்றும் ஒரு சில சிங்கள அரசியல்வாதிகள் கூறுகின்றனர். இதைப்பார்த்தால் இந்தியாவில் வாழும் தமிழர் உணவு உட்கொள்கிறார்கள். ஆகவே இலங்கையில் உள்ள தமிழர் சாப்பிடவேண்டியதில்லை என்றுகூறுவதைப் போல இருக்கின்றது"-29.01.1956

"உண்மையான நிலைமையென்னவெனில் இன ஒழிப்பு என்னும் கொடிய அரசியற் குற்றத்திற்கு ஆளாகியிருக்கிறது அரசாங்கம். எவ்விதத் தடையுமின்றி அரசாங்கத்தை, அது போகிற போக்கிலேயே விட்டுவிட்டால் இலங்கையில் தமிழினத்தை அறவே அழித்து விடுவதில் அது வெற்றியீட்டிவிடும். இந்த நிலைமையை எதிர்நோக்க வடக்கு கிழக்கின் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற அரசியல் கட்சி மாத்திரமல்லாமல் சுதந்திர இயக்கமாகவும் விளங்கும் தமிழரசுக் கட்சிக்கு மூன்று வழிகள் உண்டு. ஒன்று சரணாகதி, இரண்டு ஆயுதப்புரட்சி, மூன்று காந்திய முறையான அஹிம்சையும் சட்ட மறுப்பும். முதலாவது வழியான சரணாகதி எமது மக்களுக்கு இழிவைத்தேடித் தருவதோடு நில்லாது அரசாங்கத்தின் இன ஒழிப்புக் கொள்கைக்கு உதவியாகவும் இருக்கும். இரண்டாவது வழியான ஆயுதப்புரட்சி நடைமுறைக்கு ஒவ்வாததும் அறவழிக்கு முரண்பட்டதுமாகும். எனவே எமக்கு மிஞ்சியிருப்பது மூன்றாவது வழிதான். அதாவது காந்தியமுறையே"-31.03.1963

"தொன்றுதொட்டு இந்நாட்டில் தமிழ்பேசும் இனம் ஒரு தனியினமாக வாழ்ந்து வந்திருக்கின்றது.ஆனால் இந்நாடுசுதந்திரமடைந்த பின்பு படிப்படியாக எமது இனம் நசுக்கப்பட்டு வருகின்றது. காலஞ்சென்ற உங்கள் (சிறிமாவோ) கணவனால் இயற்றப்பட்ட "சிங்களம் மட்டும்" சட்டம் அவர் பெயராய் நடத்தப்படும் உங்கள் அரசாங்கத்தின் கையில் எமது இனத்தை அழித்தொழிக்கும் கருவியாய் விட்டது. உங்கள் கணவரின் வாக்குறுதிகளை ஏன்தான் மறந்துவிட்டீர்கள். அதுமட்டுமல்ல உங்கள் ஆட்சியே தமிழ்பேசும் மக்கள் காட்டிய ஆதரவால் தோன்றியதென்பதை மறப்பதற்கு உங்கள் மனச்சாட்சி எவ்விதம்தான் இடமளிக்கிறது"-25.08.1963

"தமிழரசுக்கட்சி ஒரு அரசியல் கட்சியல்ல. அழிந்துபோகும் நிலையிலுள்ள தேசிய இன மொழியொன்றைக் காப்பாற்ற வேண்டிய மாபெரும் பொறுப்பையும் அது ஏற்றுக் கொண்டிருக்கின்றது. எங்கள் கட்சி அங்கத்தவர்களும் கட்சியை ஆதரிக்கின்றவர்களும் எதிர்காலத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும். தமிழன் தன்னைத்தானே ஆட்சிசெய்யக் கூடிய நிலை என்றாவது ஏற்படும் என்ற தளராத நம்பிக்கை இருந்துவருகிறது. அந்த நம்பிக்கை ஒருபோதும் தளராது. எமக்கு என்று ஒரு அரசு ஏற்படும் என்ற விசுவாசம் ஏற்படவேண்டும். பலவீனத்தால்தான் பல தேசங்கள் அடிமை நிலைக்கு உதைத்துத் தள்ளப்பட்டன. ரட்சிப்புக்கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் போராடிய மக்கள் காலகதியில் அடிமைத்தளையை அறுத்துச் சுயாதீனம் அடைந்தனர். இலங்கையில் தமிழரசு நிறுவ முடியாதெனச் சொல்லும் தமிழரைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. வேண்டுமென்றே அவ்வாறு கருதுபவர்களுக்குத் தெம்பூட்டுவது கஷ்டமானது. சமஷ்டி அரசை விசுவாசிக்கும் மக்களை, அந்த மக்களின்ஆதரவு பெற்ற கட்சி, நல்வழியில் நடத்திச்சென்று இலட்சியத்தை அடைய வேண்டியதாய் இருக்கின்றது"-02.02.1959

தொகுப்பு:
பேராயர் கலாநிதி
சு.ஜெபநேசன்
(தலைவர்,தந்தை செல்வா நினைவு அறங்காவலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்த மீது இலக்குவைக்க விடுதலைப்புலிகள் காரணம்

## பந்துல கண்டுபிடிப்பு

**(கொழும்பு)**

**தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்களுக்கு தேவையான வகையில் முன்னாள் பாது காபபுச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ இலக்கு வைக்கப்படுவதாக முன்னாள அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவி த்துள்ளார்.**

புலி ஆதரவு புலம்பெயர் சமூகத்திற்கும், காலனித்துவ நாடுகளுக்கும் கோத்தபாயவை தண்டிக்கும் தேவையுண்டு.

அந்த தேவைகளை தற்போதைய அரசாங்கம் பூர்த்தி செய்ய முயற்சிக்கின்றது.

எனினும், இந்த நடவடிக்கைகளுக்கு மக்கள் இடமளிக்கமாட்டார்கள், புலிகளின் தேவைகளை அரசாங்கம் பூர்த்தி செய்யக்கூடாது.

கொடிய பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதில் முதன்மை பங்கு வகித்து வந்தவர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவேயாகும்.

காலனித்துவ நாடுகளும் புலம்பெயர் புலி ஆதரவு தரப்புமே தற்போதைய அரசாங்கத்தை வெற்றி பெறச் செய்தது.

இவர்கள் தேசியத் தலைவர்களை வேட்டையாடும் இலக்கில் இவ்வாறு ஆதரவளித்துள்ளனர்.

அந்த முயற்சிகளுக்கு இடமளிக்கப்பட முடியாது என பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவிற்கு அழைக்கப்பட்டமையை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் நேற்று முன்தினம் பங்கேற்ற போது இதனைத் தெரிவித்தார். (இ-5)

## தராகி டி.சிவராமின் நினைவேந்தல் நிகழ்வு

(கொழும்பு)

ஊடகவியலாளர் தராகி டி.சிவராமின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3 மணிக்கு மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அருள் சஞ்ஜீத் தலைமையில் நடைபெறும் இந்நினைவு நிகழ்வில் நினைவுரைகளை எக்ஸ்பிறஸ் நாளிதழின் ஆசிரியர் வி.தேவராஜ்,மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம்.கனிபா, மண்முனைவடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.சுகுமாரன், ஊடக சுதந்திர இயக்கத்தின் அமைப்பாளர் சுனில் ஜயசேகர,தினகரன் ஆசிரிய பீட பணிப்பாளர் சமன் வராச்சி, மன்னார் புதியவன் நாளிதழ் பிரதம ஆசிரியர் வி.எஸ் சிவகரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.ரகுராம் **தமிழ்ச் சமூகத்தில் ஊடகக் கல்வி வாய்ப்புக்களும் சவால்களும்** எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை வழங்கவுள்ளார்.

தொடர்ந்து ஆவணப்பட வெளியீடும் இடம் பெறவுள்ளது. (இ-3)

**டிப்ளோமா கற்கைநெறிக்கு**

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் 3வருட கால முழுநேர தொழில்நுட்வியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்கான தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இரண்டு வருட முழுநேர கற்றலையும் ஒரு வருடகால தொழிற் பயிற்சியையும் உள்ளடக்கிய இக் கற்கைநெறிகள் அனைத்தும் ஆங்கில மொழி மூலத்தில் நடத்தப்படும்.

**இக்கற்கை நெறிகளுக்கான கல்வித் தகைமையாக விண்ணப்பதாரி 2012 ,2013 அல்லது 2014 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளில் ஒன்றில் ஒரே தடவையில் இணைந்தகணிதம்,உயர்கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் மூன்றிற்கு குறையாமல் சித்தி பெற்றிருப்பதுடன் விண்ணப்பதாரி 31.12.2014 அன்று 24 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவமானது “ பிரதிப்பதிவாளர், தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகம், கட்டுப்பெந்தை,மொறட்டுவ” எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் எதிர்வரும் மேமாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**இக்கற்கைநெறிகள் தொடர்பான மேலதிக விபரங்களையும் கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவத்தையும் நேற்று வெளியான வர்த்தமானி பத்திரிகையிலோ அல்லது** http://www.mrt.ac.lk/itum **எனும் இணையத்தளத்திலோ பார்வையிட முடியும்.** (இ

## ஆணைக்குழுச் செயற்பாடுகளை ட்ரான்ஸ்பரன்சி வரவேற்றுள்ளது

(கொழும்பு)

ஆணைக்குழுவின் தலைவியாக இருக்கும் தில்ருக்சி டயஸ் விக்கிரமசிங்கவின் பணிகளை இன்டர் நஷனல் ட்ரான்ஸ்பரன்சி அமைப்பு பாராட்டியுள்ளது.

இலங்கையின் கடந்த ஆட்சியில் பல பில்லியன் டொலர் நிதி மோசடிகள் இடம்பெற்றன. இதனால் நாட்டில் பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது.

அதேநேரம் குறித்த மோசடிகளை விசாரணை செய்யமுடியாதபடி இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவின் பணிகளும் அரசியல்மயப்படுத்தப்பட்டிருந்தன.

எனினும் புதிய ஆட்சியின்கீழ் ஆணைக்குழு சிறப்பான சேவையை ஆற்றி வருகிறது. இதன் காரணமாக ஆணைக்குழுவுக்கு உயர் மட்டத்தினர் தொடர்பில் ஆயிரத்து 500 முறைப்பாடுகள் வரை கிடைத்துள்ளன.

இதேவேளை நிதிமோசடி மற்றும் ஊழல்கள் தொடர்பில் இலங்கையின் பொலிஸ் தரப்பும் சிறப்பான சேவையை மேற்கொண்டு வருவதாக ட்ரான்ஸ்பரன்சி இன்டர் நஷனல் தெரிவித்துள்ளது.(இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதிவிவேகானந்தர் ஞானாம்பிகை

அச்சுவெலி தெற்கு,தச்சன் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விவேகானந்தர் ஞானாம்பிகை நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற பின்னர் பூதவுடல் பிற்பகல் 2மணியளவில் அச்சுவேலி முழுக்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### பெனடிக்ற் கிருபானந்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிக்ற் கிருபானந் கடந்த 16ஆம் திகதி வியாழக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று சனிக்கிழமை மு.ப 11.30மணி தொடக்கம் பி.ப 12.15மணிவரை Croydon Crematorium,Cro 3AA,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### அப்பச்சி நற்குணசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் பரீஸை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பச்சி நற்குணசிங்கம் கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 29ஆம் திகதி Funeraire de Menilmontant 07,Boulevard de Menilmontant 75011 Paris (M:Phillippe Auguste) என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணபதிப்பிள்ளை கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை Elgin Mills, Visitation Centre 1591 Elgin Mills Rd East, Richmond Hill,ON L4S 1M9,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### நாகரட்ணம் இராமச்சந்திரன்

வடமராட்சி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் இராமச்சந்திரன் கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave,Markham,ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி குமரையா யோகேஸ்வரி

தெல்லிப்பழை அம்பனைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, கனடா Scarborough ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குமரையா யோகேஸ்வரி கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பி.ப2. 30 மணி தொடக்கம் 3மணி வரை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave,Markham,ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி கந்தையா செல்லம்மா சின்னமணி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வசிப்பிடமாகவும் பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தையா செல்லம்மா சின்னமணி கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 11மணி தொடக்கம் பி.ப1.30மணி வரை Pompes Funebres Et Marbrerie Lescarcelle,55 Rue De Boissy-Saint-Legar,91480 Quincy-Sous-Senart,France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முப்படைகளும் சிக்கனத்தை கடைப்பிடிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் வலியுறுத்து

இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைகளும் நிதி விவகாரத்தில் சிக்கனத்தையும் எச்சரிக்கை உணர்வையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பரிக்கர் வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற முப்படை தளகர்த்தர்களின் கருததரங்கில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பரிக்கர் பேசும் போது, "முப்படைகளும் தங்களுக்குத் தேவையான தளபாடங்கள் என்று பெரிய பட்டியலை வைத்துள்ளன. அவற்றில் புதிய நீர்மூழ்கிக் கப்பல்கள், துப்பாக்கிகள், ஏவுகணைகள், போர் விமானங்கள் ஆகியவை அடங்கும். முப்படைகளுக்குமான நிதித் தேவையைக் கருத்திற் கொண்டு, எந்தெந்தத் திட்டங்களுக்கு முன்னுரிமை என்பதை ஆராய்ந்து நிதி ஒதுக்கும் வகையில் அரசு செயற்பட்டு வருகிறது.

முப்படைகளையும் நவீனமயமாக்குவதில் அனைத்து ஆதரவையும் அளிக்க அரசு உறுதி பூண்டுள்ளது. அதனால், முப்படைகளும் நிதி விவகாரத்தில் சிக்கனம், எச்சரிக்கை உணர்வைக் கடைப்பிடிக்க வேண்டியதும், அனைத்து வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டியதும் அவசியம்" என்று வலியுறுத்தியுள்ளார். (இ-5)

## ஸ்ரீ சாய்பாபா மரணம் பற்றி சி.பி.ஐ.விசாரிக்க வேண்டும்

ஆந்திர மாநிலம் புட்ட பர்த்தி சத்ய சாய்பாபா கடந்த 2011ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆந்தேதி இறைபதம் அடைந்தார்.

அவரது மரணத்தில் பல மர்மங்கள் இருப்பதாகவும் இதுபற்றி சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவரது உறவினர் கணபதி ராஜு மத்திய மாநில அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுபற்றி அவர் பிரதமர் நரேந்திர மோடி, ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.


இதனை ஐதராபாத்தில் நிருபர்களிடம் தெரிவித்த கணபதிராஜு மேலும் கூறியதாவது,சத்ய சாய்பாபா மரணத்தில் பல சந்தேகங்கள் உள்ளதுஎன்றார். (இ-5)

# பிரிவினைவாதிகளை நாடுகடத்த வேண்டும்

### ஆர்.எஸ்.எஸ்.மூத்த தலைவர் சர்ச்சைக்குரிய கருத்து

(காஷ்மீர்)

**பாகிஸ்தான் ஆதரவு பிரிவினைவாதிகளை நாடுகடத்த வேண்டும் என ஆர்.எஸ்.எஸ். மூத்த தலைவர் கூறியிருப்பது இருநாட்டிலும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.**



ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் நேற்று முன்தினம் பங்கேற்று பேசிய இந்திரேஷ் குமார் பாகிஸ்தானுக்கு ஆதரவாக யாரெல் லாம் குரல் எழுப்புகிறார்களோ குறிப்பாக பிரிவினைவாதிகளையும், அவர்களது குடும்பத்தினரையும் இந்திய மண்ணில் வாழ மத்திய அரசு அனுமதி அளிக்கக்கூடாது என கூறியுள்ளார்.

பிரிவினைவாத தலை வர்களை பாகிஸ்தானுக்கு நாடு கடத்துவதன் மூலம் காஷ்மீரின் அமைதியும், வளர்ச்சியும் ஏற்படும் என அவர் கூறினார்.

சிறையில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட காஷ்மீர் பிரிவினைவாத தலைவர் மஸ்ரத் ஆலம் அம்மாநிலத்தில் நடத்திய பேரணியில் பாகிஸ்தானுக்கு ஆதரவான முழக்கங்களும், அந்நாட்டு கொடி யையும் ஏந்தி சென்றதால் சர்ச்சை ஏற்பட்டது.

இதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு கிளம்பியதையடுத்து மஸ்ரத் ஆலம் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் ஆர்.எஸ்.எஸ். மூத்த தலைவர் சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்திருப்பது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நான்கு கால்கள் நான்கு கைகளுடன் அதிசய ஆண் குழந்தை பிறந்துள்ளது

(ராஞ்சி)


ஜார்க்கண்ட் மாநிலத்தில் நான்கு கால்கள் மற்றும் நான்கு கைகளுடன் அதிசய ஆண் குழந்தை பிறந்துள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள சிறிய நகரமான டும்ரி-இஸ்ரியில் தம்பதியினர் ஒருவருக்கு, நான்கு கால்கள் மற்றும் நான்கு கைகளுடன் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

பிறந்து சில நாட்களே ஆன நிலையில், இக்குழந்தையை பார்ப்பதற்காக அம்மாநில மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

மேலும், இக்குழந்தையை விநாயகரின் அவதாரம் எனவும் கூறி வருகின்றனர்.

இந்த அதிசய குழந்தையை பார்க்க வந்த குந்தலேஷ் பாண்டே கூறுகையில், 72 மைல் தொலைவிலிருந்து இந்த அவதார குழந்தையை பார்க்க வந்தேன்.



எனது நண்பர் குழந்தையின் புகைப்படத்தை அனுப்பியபோது என்னால் நம்பமுடியவில்லை, ஏனெனில் போட்டோஷொப்பில் வேலை செய்து இவ்வாறு அனுப்பியிருப்பார் என கருதினேன்.

ஆனால், அந்த புகைப்படம் உண்மை என நண்பர் கூறியதால், குழந்தையை பார்க்க நேரில் வந்துள்ளேன் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து வைத்தியர்கள் கூறியதாவது, கருவில் இருந்த இரட்டை குழந்தைகளின் வளர்ச்சி குறைபாட்டின் காரணமாக, இவ்வாறு நான்கு கைகளுடன் குழந்தை பிறந்துள்ளது என்று கூறியுள்ளனர். (இ-5)

### பாரதச் செய்தி

## அமெரிக்க தலைமை வைத்தியராக இந்திய வம்சாவளியைச்சேர்ந்தவர்

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் மூர்த்தி அமெரிக்க அரசின் தலைமை வைத்தியராக உத்தியோகபூர்வமாக கடந்த புதன் கிழமை பதவியேற்றுள்ளார்.

அவருக்கு அந்த நாட்டின் துணை ஜனாதிபதி ஜோபிடன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அமெரிக்க சட்டப்படி, தலைமை வைத்தியர் பதவியென்பது, கடற் படையின் துணைத் தலைமைத் தளபதிக்கு இணையானதாகும். விர் ஜினியா மாகாணம்,போர்ட் மையர் இராணுவ முகாமில் கடந்த புதன்கி ழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அமெரிக்க சுகாதாரத்துறை அமைச் சர ஸில் வியா பர்வெல், முன்னாள் தலைமை வைத்தியர் டேவிட் ஸாட்சர், விவேக மூர்த்தியின் குடும்பத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பகவத்கீதை மீது விவேக் மூர்த்தி உறுதிமொழி எடுத்துக் கொண்டார். அவர் அந்த நாட்டின் 19ஆவது தலைமை வைத்தியராக இருப்பார்.

இந்திய வம்சாவளியினரான டாக்டர் விவேக் மூர்த்தி (37) பிரிட்டனில் பிறந்து, அமெரிக்காவின் ஹார்வர்டு, யேல் பல்கலைக்கழகங்களில் மருத்துவ மேற்படிப்பு படித்தவர். இவரது தந்தை வழிப் பாட்டனார் ஒரு விவசாயி. தந்தை இந்தி யாவில் கல்வி கற்று, வேலை நிமி த்தமாக வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொண்டார்.

விவேக் மூர்த்தியை அமெரிக்காவின் அரசுத் தலைமை வைத்தியராக ஜனாதிபதி ஒபாமா 2013ஆம் ஆண்டு நவம்பரில் நியமித்தார். ஆயினும், அந்த நியமனத்தை அமெரிக்க நாடாளுமன்றம் உறுதி செய்யாமல் காலதாமதம் செய்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

## இளைஞனை அறைந்த எம்.எல்.ஏ.விளக்கம்



ஆம் ஆத்மி கட்சியின் பெண் எம். எல். ஏ. அல்கா லம்பா. இவர், தன்னிடம் தவறாக நடந்ததாக கூறி இளைஞர் ஒருவருக்கு நேற்று முன்தினம் அடி கொடுத்துள்ளார்.

பாரம்பரிய கட்டடத்தை பார்வையிடச் சென்ற போது அந்த நபர் தன்னை தவறான கண்ணோட்டத்துடன் பார்த்ததாகவும், தனதருகே நெரு ங்கியதால் அவரை அடித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதற்கு போதிய ஆதாரங்கள் எதையும் அவரது குடும்பத்தினர் அளிக்கவில்லை.

அதனால் அவர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அல்கா தெரிவித்துள்ளார். (இ-5)

# விவசாயி தற்கொலையின் பின் கூட்டத்தில் பேசியது தவறுதான்

### அரவிந்த் கெஜ்ரிவால் கவலை

டில்லியில் விவசாயி தற்கொலை செய்து கொண்ட பிறகும் பொதுக் கூட்டத்தில் பேசியது தவறுதான் என ஒப்புக கொண்டுள்ள ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் அதற்காக வருத்தம் தெரிவித்துள்ளார். டில்லியில நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் விவசாயி தற்கொலை செய்து கொண்டமரம்பொதுக்கூட்ட மேடையில் இருந்து தொலைவில் இருந்ததால் என்ன நடந்தது என மேடையில் இருந்த தமக்கு தெரியவல்லை என்றார்.

ஆம் ஆத்மி கட்சி தொண்டர்கள் ஒட்டு மொத்தமாக குரல் எழுப்பிய பிறகே விபரீதத்தை உணர்ந்ததாக கூறிய கெஜ்ரிவால் அதன் பிறகு



பொதுக்கூட்டத்தில் தான் உரையாற்றியது தவறுதான் என்றும் அந்த தவறுக்காக வருந்துவதாகவும் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

விவசாயி தற்கொலைக்கான காரணம் குறித்து விவாதிப்பதற்கு பதிலாக ஊடகங்கள்அது தொடர்பான விசாரணை குறித்தே விவாதிப்பதாக விமர்சித்த கெஜ்ரிவால் டிஆர்பியை அதிகரிப்பது குறித்து மட்டுமே ஊடகங்கள் சிந்திக்கக்கூடாது விவசாயி தற்கொலை விவகாரத்தில் டில்லி பொலிஸாரை குறைகூற முடியாது என்று குறிப்பிட்ட அவர்விபரீதம் நடக்கப்போவது தெரிந்திருந்தால் பொலிஸார அதனை தடுத்திருப்பார்கள் என தெரிவித்தார்.(இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எபோலாவால் 10800 பேர் பலி

(ஜெனீவா) ---------------------

**எபோலா நோய்க்கு இதுவரை 10 ஆயிரத்து 800 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதாகவும உலக சுகாதார நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.**

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு எபோலா நோய் பரவியது. இந்நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. உலகுக்கே அச்சுறுத்தலாக உள்ள எபோலாவுக்கு இதுவரை 10 ஆயிரத்து 800 பேர் பலியாகியுள்ளனர். சுமார் 26 ஆயிரத்து 79 பேர் பாதிக்கப்பட்டனர். லைபீரியா, கினியா, சியரா லியோன் ஆகிய நாடுகளில் எபோலாவால் அதிகளவில் உயிரிழந்துள்ளனர்.

இந்நோயை கட்டுப்படுத்த இந்த 3 நாடுகளும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. எபோலாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எபோலாவால் உயிரிழந்தவர்களை புதைப்பதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. முன்னெச்சரிக்கை நடவடிக்கை, கடுமையான விதிமுறைகள் போன்றவற்றால் எபோலா தற்போது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதியன்று, கினியாவில் 22, சியராவில் 12 பேருக்கு எபோலா அறிகுறி இருப்பது தெரிய வந்துள்ளது. லைபீரியாவில் எபோலாவால் புதிதாக யாரும் பாதிக்கப்படவில்லை. எபோலா கட்டுக்குள் வந்தாலும் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் எபோலாவிற்கான மருந்து குரங்குகளிடம் பரிசோதனை செய்து வெற்றியளித்திருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## தற்கொலைத் தாக்குதலில் 8 யாத்திரிகர்கள் மரணம்

(பக்தாத்)

ஈராக்கில் புனித யாத்திரை மேற்கொண்டவர்களைக் குறிவைத்து கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 8 யாத்திரிகர்கள் உயிரிழந்தனர்.

9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு இமாம்களின் நினைவிடம் ஈராக்கின் ஸமாரா நகரில் உள்ளது.

அந்த இடத்துக்கு ஷியா பிரிவைச் சேர்ந்த யாத்திரிகர்கள் புனித யாத்திரை மேற்கொண்டனர்.

அதன் பிறகு யாத்ரிகர்கள் குழு பாலாட் நகரை கடந்த புதன்கிழமை இரவு சென்றடைந்தனர். அப்போது, பயங்கரவாதியொருவர், வெடிகுண்டுகள் நிரப்பிய காரை யாத்திரிகர்கள் தங்கியிருந்த இடத்தின் மீது மோதினார்.

இந்தத் தற்கொலைத் தாக்குதலில் 8 யாத்திரிகர்கள் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## அகதிகளை மீட்பதற்கான நிதி 3 மடங்கு அதிகரிப்பு

மத்திய தரைக்கடலில் அகதிகள் கப்பல்களை தேடுவதறகும், மீட்பதற்குமான நிதியை ஐரோப்பிய ஒன்றியம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களது விசேட சந்திப்பின் போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அதேநேரம் ஆட்கடத்தல் காரர்களை கண்டறிந்து அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கவும் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பல நாடுகள் கப்பல்களையும், மீட்பு பணிகளுக்கான வளங்களையும் வழங்க உறுதியளித்துள்ளன. (இ-5)




## விமானக் குண்டுவீச்சினால் தீவிரவாதிகள் 20பேர் பலி!

வடமேற்கு பாகிஸ்தானில பழங்குடியினர் வசிக்கும் கைபர் ஏஜென்சி பகுதியில் அந்நாட்டு இராணுவம் நேற்று திடீரென விமான தாக்குதலில் ஈடுபட்டது. இந்த தாக்குதலில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் தீவிரவாதிகளை ஒழிப்பதை பாகிஸ்தான இராணுவ நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளது.

இதனையடுத்து கைபர் ஏஜென்சியின் திராஹ் பள்ளத்தாக்கில் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் பகுதியில் விமானங்கள் நேற்று சரமாரியாக குணடுகளை வீசி தாக்கின.

இந்த கடும் தாக்குதலில், தீவிரவாதிகளின் மறை விடங்கள், அவர்களின் ஆயுதங்கள் சேதமடைந் தன. இந்த தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-5)

## ஏமன் உள்நாட்டுப் போரில் 1080பேர் பரிதாப மரணம்

### 4352 பேர் படுகாயம்



ஏமன் உள்நாட்டுப் போரில இதுவரை ஆயிரத்து 80 பேர் உயரிழந்துள்ளதுடன் 4 ஆயிரத்து 352 படுகாயம் அடைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்து உள்ளது.

ஏமன் நாட்டில், ஜனாதிபதியை ஓட வைத்து, முக்கிய நகரங்களை தங்கள் வசப்படுத்திய, ஷியா பிரிவை சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கு, சன்னி பிரிவை சேர்ந்த சவுதி அரேபியா தலைமையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், பஹ்ரைன், கட்டார், ஜோர்தான், மொராக்கோ, எகிப்து, சூடான் ஆகிய நாடுகள் கரம் கோர்த்தன. இந்த நாடுகளின் கூட்டுப்படைகள் ஏமனில் கடந்த மாதம் 26ஆம் திகதி தொடங்கி வான் தாக்குதல்களை நடத்தி வந்தன. இந்த தாக்குதல்களில் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்தனர்.


ஏறத்தாழ ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த இந்த தாக்குதல்களை, ஏமன் ஜனாதிபதி கேட்டுக்கொண்டதன் பேரில், போரை நிறுத்திக் கொள்வதாக சவுதி கூட்டுப் படைகள் கடந்த செவ்வாய்க் கிழமை அறிவிப்பு வெளியிடப்பட்டது. சவுதி அரேபியா மற்றும் அதன் அண்டை நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாகவும், அந்த அச்சுறுத்தலை [illegible] தங்கள் நோக்கம் நிறைவேறி விட்டதாகவும் சவுதி கூட்டுப்படைகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஏமன் மீதான தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வந்தாலும் கூட, கடற்படையின் முற்றுகை தொடரும் எனவும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடமாட்டம் இருந்தால் தாக்குதல் தொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் போர் நிறுத்த அறிவிப்பு வெளியான 24 மணி நேரத்திற்குள், டாய்ஸ் நகரில் ஏமன் இராணுவத்தின் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் தொடுத்தனர். அதைத் தொடர்ந்து, அங்கு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் மீண்டும் வான் தாக்குதல்கள் நடத்தியது. ஏமனில் தாக்குதல்களை மீண்டும் சவுதி கூட்டுப்படைகள் தொடங்கி விட்டனவா அல்லது இது ஒரு குறுகிய கால நடவடிக்கையா என தெரியாத நிலையே நிலவியது. இந்நிலையில் ஏமன் விவகாரத்தில் ஐ.நா. ஆதரவுடன் கூடிய அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டும். ஆனால் தாக்குதல்கள் முழுமையாக நிறுத்தப்பட்ட பின்னர்தான் பேச்சுவார்த்தை என்று கிளர்ச்சியாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில் ஏமன் போரில் ஆயிரத்து 80 பேர் உயிரிழந்தும் 4ஆயிரத்து 352 படுகாயம் அடைந்தும் உள்ளனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்து உள்ளது. காயம் அடைந்தவர்கள் பலர் வைத்தியசாலையில் சேர்க்கப்படாத நிலையில் இறப்பு எண்ணிக்கை மேலும் உயரக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதற்கிடையே உதவி பணிகளுக்கான நடவடிக்கையும் தொடங்கப்பட்டு உள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## ஐம்பது வயது நடிகை உலகின் அழகியபெண்

### அமெரிக்க பத்திரிகை தேர்வு



உலகின்மிகஅழகானபெண்ணாக 50 வயதாகும் ஹொலிவுட் நடிகை சாண்டரா புல்லக் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் பிரபல வார இதழான பீப்பிள், சாண்ட்ராவை 2015ஆம் ஆண்டின், உலகின் மிக அழகிய பெண்ணாக தேர்ந்தெடுத்துள்ளது. சாண்ட்ரா புல்லக்கின் படத்தை அட்டையிலும் பதிப்பித்து செய்தி வெளியிட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு ஹேங் மேன் படத்தின் மூலம் ஹொலிவுட்டில் தடம் பதித்த சாண்ட்ரா புல்லக், ஸ்பீடு, தி ஹீட், கிராவிட்டி உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களில் நடித்துள்ளார்.

இப்போதும் நடிப்பை தொடர்ந்து வருகிறார். 2010 ஆம் ஆண்டில் தி பிளைண்ட் சைடு படத்தில் நடித்ததன் மூலம் சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருதை வென்றார்.

தன்னை மிக அழகான பெண் என பத்திரிகை தேர்வு செய்துள்ளது குறித்துப் பேசிய அவர், "இது சற்று கேலிக்குரிய விடயமாகவும் தோன்றுகிறது.

உண்மையான அழகு அமைதியாக இருக்கும். அழகாக இருக்க முயற்சி செய்யாதவர்களே எனக்கு மிக அழகாகத் தெரிகிறார்கள்" என்றார். சாண்ட்ராவுக்கு 5 வயதில் மகன் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மதக்குழு உறுப்பினர்கள் அங்கோலா படைகளுடன் மோதியதில் பலர் மரணம்

உலகம் அழியப்போ கிறது என்று நம்பும் ஆயுதந்தாங்கிய மதக்குழு ஒன்றின் உறுப்பினர்கள் பலருடன் அங்கோலா படைகள் நடத்திய மோதலில் அவ்வமைப்பின் பல உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த மோதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 வரை இருக்கலாம் எனறு நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியான யூனிட்டா கூறுகிறது.

ஆனால் ஆளும் எம்.பி.எல்.ஏ கட்சியோ இதில் 13 பேர்தான் கொல்லபட்டனர் என்று கூறுகிறது.

"ஏழாம் நாள் உலக ஒளி" என்ற இந்தக் குழுவினைப் பின்பற்றுப வர்கள் கொல்லப்பட்டதை விசாரிக்க வேண்டும் என்று அங்கோலா அரசை யுனிட்டா வலியுறுத்துகிறது. இந்த அமைப்பு, ஏழாம் நாள் அட்வெண்டிஸ்ட் என்ற கிறிஸ்தவ மதப்பிரிவின் ஒரு கிளையாகும்.

இந்தக் குழு உலகம் இந்த ஆண்டோடு முடிந்துவிடும் என்று நம்புகிறது. எனவே இந்த இயக்கத்தைப் பின்பற்றுபவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி மலைகளை நோக்கிச் செல்லவேண்டும் என்று அது கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழிதேடும். உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழிதேடும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் மைத்திரி தீவிரம்

நூறுநாள் வேலைத்திட்டத்தின் நிறைவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு உரையாற்றியுள்ளார்.

நூறுநாள் வேலைத்திட்டத்தின் வெற்றி என்பதற்கு அப்பால் சர்வதேசத்துடனான உறவில் இலங்கை வெற்றி பெற்றுள்ளது என்ற செய்தி முக்கியப்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அதாவது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சர்வதேச நாடுகளுடனான இலங்கையின் உறவு மிகவும் மோசமாக இருந்தது. இலங்கை தனது உள்நாட்டு மக்களையே கொன்றொழித்த மிகவும் மோசமான நாடு என்ற கருத்தே சர்வதேசம் முழுவதிலும் இருந்தது.

ஆனால் அதனை முறியடித்து சர்வதேசத்தின் உதவியை தாராளமாகப் பெறுகின்ற அளவில் நாம் வெற்றி கண்டுள்ளோம் என்பது ஜனாதிபதி மைத்திரி ஆற்றிய உரையின் சாராம்சமாகும்.

சர்வதேசத்துடனான உறவில் இலங்கை வெற்றி கண்டுள்ளது எனக் கூறியதற்குள் ஒன்றுக்கு மேற்பட்ட வகையில் பொருள் கொள்ள முடியும். எதுவாயினும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை கைது செய்ததன் மூலம் மைத்திரியின் அரசு சர்வதேச சமூகத்திற்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

அதேநேரம் 19ஆவது திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்னதாக பசில் ராஜபக்ஷவை கைது செய்ததன் ஊடாக மகிந்தவின் ஆதரவாளர்களுக்கு மைத்திரி ஒரு செய்தி சொல்கிறார்.

அதாவது 19ஆவது திருத்தச் சட்டமூலத்தை நீங்கள் ஆதரிக்கத் தவறினால் மகிந்த மீதும் அவரது சகோதரர்கள் மீதும் சுமத்தப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் உங்கள் மீதும் திசைதிரும்பும் என்பதே அதுவாகும்.

எனவே 19ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு தரமறுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பசில் ராஜபக்ஷவின் கைதை அடுத்து தமது முடிவில் முக்கிய மாற்றம் செய்வர் என்று நம்பலாம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது முன்வைக்கப்பட்ட இலஞ்சஊழல் குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணை நடத்தப்படவிருந்த வேளையில் மகிந்தவுக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர். இலஞ்சஊழல் தொடர்பில் விசாரணை இடம்பெறுவதை எதிர்ப்பது என்பது சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை தடுப்பதற்கு சமமானதாகும்.

இந்நிலையில் ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் மகிந்தவை விசாரிக்கக் கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்த பாராளுமன்ற உறுப்பினர்கள் யார் என்பது இப்போது ஐயம் தெளிவுற இனம் காணப்பட்டுள்ளது.

மகிந்தவுக்கு ஆதரவாக பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்பதை விட குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக மகிந்த நாட்டைக் குழப்புகிறார் என்ற கருத்தியலும் உண்டு.

நிலைமை இதுவாக இருக்கையில் பசில் ராஜபக்ஷவை கைது செய்தன் மூலம், கோத்தபாய ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படலாம் என்ற எச்சரிக்கையுடன் நிலைமை கட்டுக்கு வரக்கூடியதான சூழமைவு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் 19ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக பிரதமர் பதவி முதன்மை பெறும் என்ற அடிப்படையில் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தனது கட்சி சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை நெருக்கியடித்து 19ஆவது திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற கடும் பிரயத்தனம் செய்வார்.

ஆக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற பாடுபடுவதுதான் இங்கு வரவேற்கத்தக்க விடயமாகும்.

அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி தனக்குக் கிடைத்தபோதும் அந்தப் பதவியில் சில வருடங்களேனும் இருந்துவிட்டு அதிகாரத்தைக் குறைப்போம் என்று நினைக்காமல் ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிப்படி நிறைவேற்று அதிகாரங்களை குறைக்க வேணடும் என நினைப்பது மைத்திரியின் உயர்ந்த பண்பை காட்டுவதாகும்.

19ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் எதிர்க்கின்ற வாய்ப்பு உள்ள போதிலும் அதனை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த நினைக்காமல் எப்படியேனும் 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமையை பலம் இழக்கச் செய்வதில் தீவிரமாக இருக்கும் ஜனாதிபதி மைத்திரி வித்தியாசமானவர் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

# போதைப்பொருள் குற்றச்சாட்டு மயூரனுக்கு மரணதண்டனை உறுதி

இந்தோனேஷியாவில் போதைப் பொருள் கடத்தல் குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட மயூரன் சுகுமாரன் உள்ளிட்ட 10 பேருக்கு மரணதண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மரணதண்டனை நேற்றுமுன்தினம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களுக்கான மரணதண்டனை உறுதி செய்யப்பட்ட போதிலும் மரண தண்டனை நிறைவேற்றப்படும் திகதி குறித்து இறுதியான அறிவிப்பை அந்நாட்டு அரசாங்கம் இதுவரை விடுக்கவில்லை.

ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருள் கடத்திய குற்றத்திற்காக பிரேசில், பிரான்ஸ், நைஜீரியா, அவுஸ்திரேலியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டைச சேர்ந்த 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தோனேஷிய ஜனாதிபதியிடம் கருணைமனு அளிக்கப்பட்டது.

இதேவேளை, தண்டனை பெற்றவர்களின் நாட்டு தூதரகங்களும் மரண தண்டனையை இரத்து செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தன.

இந்நிலையில், அவுஸ்திரேலிய குற்றவாளிகளான ஆன்ட்ரூசான் மற்றும் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவரும் அவுஸ்திரேலியப் பிரஜையுமான மயூரன் சுகுமாரனுக்கு ஆதரவாக அந்நாட்டு அரசு குரல் கொடுத்து வந்த போதிலும் அதனை பொருட்படுத்தாமல் இந்தோனேசிய அரசாங்கம் நிராகரித்துள்ளது.

போதைபொருள் கடத்தலால் குற்றங்கள் அதிகரிப்பதாகவும், நாட்டில் அதிகளவிலான பாதிப்புகள் ஏற்படுவதாக கூறி இந்தோனேஷிய ஜனாதிபதி மறுப்பு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே மயூரன் சுகுமாரன் உள்ளிட்ட 10 பேருக்கும் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் நுசாகம்பங்கன் தீவின் அருகிலுள்ள ஜாவா தெற்கு கடற்கரையின் கிலகெப்பிலுள்ள சிறைச்சாலையில் தூக்கிலிடப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## மின்னல் தாக்கி மின்மாணி நாசம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று இடியுடன் கூடிய பலத்த மழை பெய்துள்ளது.

அத்துடன் கடும் மழை பெய்து கொண்டிருந்தவேளை மின்னல் விழுந்ததில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மின்மாணி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. (இ-3-29)

## பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கனேஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் சங்கத்தின் தலைவராக அ. குகதாசனும் உப தலைவராக சி.இராசநாயகமும் மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்களாக கி. அருணகிரிராசாவும் சி.மகேந்திரனும் மா. பரமானந்தமும் கோ.இராகவானந்தமும் ப. சபேசனும் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

## முதியவரின் சடலத்தை பொறுப்பேற்கவும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை உயிரிழந்த எஸ். நாகலிங்கம் (வயது79) என்பவரின் உறவினர்கள் யாராவது உடலை அடையாளம் கண்டு பொறுப்பேற்கும்படி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் வி.ஜெயராஜா கேட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோயிலில் வசித்து வந்தபொழுது 29.03.2015 அன்று நோய் வாய்ப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## நெடுந்தீவில் பெறமுடியும்

இதுவரை காலமும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக காணி மாவட்டப் பதிவகத்தில் இடம்பெற்று வந்த நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிறப்பு, இறப்பு, விவாக பதிவு தொடர்பான சேவைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் நெடுந்தீவு பிரதேச செயலகத்திலே பெற்றுக் கொள்ள முடியும்.

நாளை மறுதினம் தொடக்கம் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிறப்பு, இறப்பு, விவாக பதிவு தொடர்பான விண்ணப்பங்கள் மாவட்டச் செயலக காணி மாவட்டப் பதிவகத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அருகிலுள்ள பிரதேச செயலகங்களில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு தொடர்பான உறுதிப்படுத்திய சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமான ப.பிரபாகர் அறிவித்துள்ளார். (இ

## மகிழ்ச்சியான பட்டியலில் இலங்கைக்கு 132ஆவது இடம்

(லண்டன்)

உலகில் மகிழ்ச்சியாகவுள்ள நாடுகளின் பட்டியலில் ஆய்வு நடத்தப்பட்ட 158 நாடுகளில் இலங்கை 132 ஆவது இடத்தை பிடித்துள்ளது. 2015ஆம் ஆண்டை அடிப்படையாக கொண்டே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

சர்வதேச கல்வியாளர்கள் குழு ஒன்றினால் மக்களின் வாழ்க்கை தரம், மொத்த உள்நாட்டு உற்பத்தி, தலா வருமானம், ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் எதிர்பார்ப்பு ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

லண்டன் பொருளியல் கல்லூரியில் நன்றாக உள்ளவர்கள் திட்டத்தின் தலைவராக உள்ள ரிச்சர்ட் லேயார்ட், அமெரிக்க பொருளியலாளரான ஜெப்ரி சச்ஸ் ஆகியோரினால் மேற்படி பட்டியல் மேற்பார்வை செய்து வெளியிடப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் சுவிட்சர்லாந்து முதலாமிடத்தையும், ஐஸ்லாந்து இரண்டாமிடத்தையும், டென்மார்க் மூன்றாமிடத்தையும் வகிக்கின்றன.

இலங்கையின் அயல் நாடுகளான பூட்டான்-79, பாகிஸ்தான்-81, பங்களாதேஷ்-109, இந்தியா-117, நேபாளம் -121ஆம் இடங்களை வகிக்கின்றன. இந்த பட்டியலில் இறுதியாக உள்ள 10 நாடுகளில் ஆப்கானிஸ்தான், ருவாண்டா, சிரியா,புரூண்டி போன்ற நாடுகளும் உள்ளடங்குகின்றன. (எ-11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



**சேவை**

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதுநாம் என்றோ அறிந்தவிடயம்.ஒவ்வொரு கடவுளருக்கும் ஒவ்வொரு பிரசாதம் பிடிக்கும். பிள்ளையாருக்கு- மோதகம், முருகனுக்கு-காவடி, அனுமானுக்கு- நெய் உருண்டை, வைரவருக்கு- வடைமாலை. இப்படியாக நாம் அறிந்தவரை எவ்வளவோ இருக்கின்றன. ஆனால் நம் அன்பு அம்மா பகவானுக்கு பிடித்த பிரசாதம் துயரத்தில் வாழும் மக்களை இத்துயரத்திலிருந்து வெளியேறுவதற்கு எம்மால் எவ்வளவு தூரம் உதவு முடியுமோ அந்த அளவிற்கு நீ செய்யும் சேவையே எங்களுக்கு பிடித்தமான பிரசாதம் என்பர்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



மெல்லெனப் பனி பெய்கிறது. அதை யாரும் காண்பதில்லை, கேட்பதுமில்லை. எனினும் அழகிய ரோஜாக்களை அது எவ்வளவு அற்புதமாக மலரச் செய்து விடுகிறது. சிந்தனை உலகிற்குத் தன் நன்கொடையை வழங்கியதும் இவ்விதமே.

தேவாலயத்திற்குப் போவதோ, நெற்றியில் சின்னங்களை இட்டுக்கொள்வதோ விசித்திரமாக உடை அணிந்து கொள்வதே மதம் ஆகிவிடாது.

நீ ஒரு ரிஷியாகாதவரை, உனக்கு ஆன்மீக வாழ்க்கை இல்லை. நீ ரிஷியான பிறகே உங்களுக்கு ஆன்மீகம் என்பது ஆரம்பமாகிறது.

யாருடைய வழிகாட்டுதலும் இல்லாமல் உங்களால் எதையும் செய்யமுடியும். எல்லா ஆற்றலும் ஆன்மாவில் இருக்கிறது. எழுந்திருங்கள்! உங்கள் உள்ளிருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துங்கள்.

முதலில் இதயபூர்வமான உணர்ச்சி. அறிவிலும் ஆராய்ச்சியிலும் என்ன இருக்கிறது? அது சில அடிகள் செல்லும், பிறகு நின்றுவிடும். ஆனால் இதயத்தின் மூலம்தான்உத்வேகம் பிறக்கிறது. திறக்க முடியாத கதவுகளை எல்லாம் அன்பு திறக்கிறது. பிரபஞ்சத்தின் எல்லா இரகசியங்களுக்கும் வாசல் அன்புதான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சென்னை சுப்பர் கிங்ஸ் 5 இலட்சம் ரூ. மட்டுமே



ஐபிஎல் தொடரில் முக்கிய அணியான சென்னை சுப்பர் கிங்ஸின் மதிப்பு 5 இலட்சம் ரூபா மட்டுமே என மதிப்பீடு செய்யப்பட்டது பெரும் சர்ச்சையை எழுப்பியுள்ளது.

கடந்த 2008இல் தொடங்கிய ஐபிஎல் தொடரில், 2010, 2011 இல் சம்பியன் ஆன சென்னை அணி, 2008, 2012, 2013 இல் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. மேலும், அணித்தலைவர் டோனி தலைமையில் 'நம்பர்-1' ஆகவுள்ளது.

இதனிடையே, 6 ஆவது ஐபிஎல் தொடரில் நடந்த சூதாட்ட விசாரணையில், சென்னை அணியை இந்தியா சிமென்ட் நிறுவனம் வாங்கியது தவறு என நீதிமன்றம் தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து சென்னை அணியின் பங்குகள், 'சென்னை சூப்பர் கிங்ஸ் லிமிடெட்' என்ற துணை நிறுவனத்துக்கு மாற்றப்பட்டன.

ஒரு ஐபிஎல் அணியை விற்கும் போது அதன் மொத்த விலையில் 5 சதவீதத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு கட்டணமாக செலுத்த வேண்டும்.

இந்நிலையில் சென்னை அணியின் மதிப்பு 5 இலட்சம் ரூபா என நிர்வாகிகள் மதிப்பிட்டுள்ளனர். அதாவது, கடந்த 2008 இல் 355 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்ட சென்னை அணி, 7 ஆண்டுகள் கழித்து 5 இலட்சத்துக்கு விற்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சென்னை அணியை விற்ற வகையில், 5 சதவீத உரிமத் தொகையாக, பிசிசிஐ-க்கு 25 ஆயிரம் ரூபா மட்டும் கொடுத்து விடலாம் என திட்டமிட்டுள்ளனர். ஆனால் புதிய ஐபிஎல் குழு சென்னை அணி மதிப்பை குறைத்து காட்டியதை ஏற்க மறுத்தது.

ஏனெனில், சென்னை அணியின் கடந்த ஆண்டு மதிப்பு 450 கோடி ரூபா என அமெரிக்க நிறுவனம் ஒன்று மதிப்பீடு செய்தது.

இதன்படி, சென்னை அணி விற்றதில் பி.சி.சி.ஐ உரிமத்தொகையாக சுமார் 22.5 கோடி ரூபா (5 சதவீதம்) வரை கிடைத்திருக்க வேண்டும்.

சென்னை அணி நிர்வாகத்தின் இச்செயல் பெரும் சர்ச்சையை எழுப்பியுள்ளது. (க)

# போர்ஸ்ச் டென்னிஸ் போட்டி சானியா ஜோடி தோல்வி



போர்ஸ்ச் டென்னிஸ் கிராணப்பிரி போட்டி ஜேர்மனியின் ஸ்டட் கர்ட் நகரில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் இரட்டையர் முதலாவது சுற்றில் மார்ட்டினாங்கிஸ் (சுவிட்சர்லாந்து) - சானியா மிர்சா (இந்தியா) ஜோடி, பெட்ரா மார்ட்டிக் (குரோஷியா)- ஸ்டெபானி வோட் (லிச்டென்ஸ்டெயின்) இணையுடன் மோதியது.

இதில் 3-6, 3-6 என்ற நேர் செட்டில் சானியா-மார்ட்டினாங்கிஸ் அதிர்ச்சி கரமாக தோல்வியை தழுவியது. அண்மையில் மார்ட்டினாங்கிசுடன் முதல்முறையாக கூட்டணி அமைத்த சானியா மிர்சா வரிசையாக இண்டியன்வெல்ஸ், மியாமி, சார்லஸ்டன் ஆகிய போட்டிகளில் சம்பியன் பட்டத்தை வென்றதுடன், இரட்டையர் தரவரிசையில் முதல் இடத்தை பிடித்து வரலாறும் படைத்தார்.

ஜோடியாக கைகோர்த்த பிறகு இவர்கள் சந்தித்த முதல் தோல்வி இது தான். சானியா- ஹிங்கிசின் வெற்றிப்பயணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த மார்ட்டிக்-ஸ்டெபானி இப்போது தான் முதல் முறையாக ஜோடி சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஜோரூட் சதம் இங்கிலாந்து ஆதிக்கம்



இங்கிலாந்து- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் போட்டி கிரண்டாவில் நடந்து வருகிறது.

முதலில் விளையாடிய மேற்கிந்திய தீவுகள் 299 ஆட்டங்களுக்கு ஓல்-அவுட் ஆனது. நேற்று 3 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 6 வக்கெட் இழப்புக்கு 373 ஓட்டங்கள குவித்தது.

ஜோரூட் 118 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் களத்தில் உள்ளார். கப்டன் கூக் 76 ஓட்டங்களும், பேலன்ஸ் 77 ஓட்டங்களும் எடுத்தனர். (க)

# ஷம்கிர் செஸ் போட்டி 6 ஆவது சுற்றில் ஆனந் சமநிலை



ஷம்கிர செஸ் தொடரின் ஆறாவது சுற்று போட்டியை ஆனந்த் சமநிலை செய்தார்.

அஜர்பெய்ஜானில் ஷம்கிர் செஸ தொடர் நடக்கிறது. இதில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், "உலக சம்பியன்" நோர்வேயின் கார்ல்சன் உள்ளிட்ட 10 பேர் விளையாடுகின்றனர்.

முதல் 5 சுற்று முடிவில் ஆனந்த் 1 வெற்றி, 4 சமநிலையுடன், 3 புள்ளிகள் பெற்றிருந்தார். ஆறாவது சுற்றில் அஜர்பெய்ஜானின் ஷாக்ரியாரை சந்தித்தார். இதில் ஆனந்த் கறுப்பு நிற காய்களுடன் விளையாடினார். போட்டியின் துவக்கத்தில் சற்று பின் தங்கிய ஆனந்த், போகப் போக பதிலடி கொடுக்கத் தொடங்கினார். 29 ஆவது நகர்த்தலில் தனது குதிரையை மண்டும் மீண்டும் ஒரே மாதிரி நகர்த்த, போட்டி சமநிலையானது. இதுவரை நடந்த 6 சுற்று முடிவில் ஆனந்த் 3.5 புள்ளிகள் பெற்றுள்ளார். (க)

# ஆசிய காற்பந்தாட்டத்தி[ல்] மகாஜனா மாணவிகள்

நேபாளத்தில் கடந்த திங்கள் ஆரம்பமான ஆசிய காற்பந்தாட்ட கூட்டுச்சம்மேளனத்தின் 14 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பிராந்திய காற்பந்தாட்ட போட்டியில் மாலைதீவுகள் அணியை இலங்கை அணி 6 இற்கு 0 என்ற கோல்கள் கணக்கில் துவம்சம் செய்துள்ளது.

நடைபெற்ற இப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியைச் சேர்ந்த சுரேந்திரன் கௌரி (4ஆவது நிமிடம்), சிவேனேஸ்வரன் தர்மிகா (70ஆவது நிமிட[ம்]) ஆகியோர் கோல்களைக் போட்டமை குறிப்பிடத்தக்கது.

14 வயதுக்குட்பட்ட இலங்கை பெண்கள் அணிக்கு அணியின் உதவி தலைவியாக கௌரி விளையாடுகின்றமை விசேட அம்சமாகும்.


யாழ். பாடசாலை மாணவி ஒருவர் உதவி அணித்தலைவியாக விளையாடுவது இதுவே முதல் தடவையாகும்.

இவர் கடந்த வருடமும் இலங்கை அணியில் இடம்பெற்றவராவார். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# எனது மகளின் சிரிப்பு என் வாழ்வை மாற்றி விட்டது

## மகிழ்ச்சியில் டோனி



இந்திய அணி உலக கிண்ணத்தில் விளையாடி கொண்டிருக்கும் போது கப்டன் டோனிக்கு பெண் குழந்தை பிறந்தது.

உலக கிண்ண போட்டி முடிந்த பிறகுதான் தனது செல்ல மகளை பார்த்தார். முதலில் மகளின் முகத்தை பத்திரிகைக்காரர்கள், போட்டோகிராபர்களிடம் காட்ட டோனி தவித்தார். தற்போது மகளின் முகத்தை வெளி உலகுக்குக் காட்டி வருகிறார்.

குழந்தைக்கு 'ஜியா' என்று பெயர் வைத்துள்ளனர். தற்போது ஐபிஎல் கிரிக்கெட்டில் விளையாடி வரும் டோனி 3 மாத மகளுடனே வலம் வருகிறார்.


பெங்களூரில் நடந்த போட்டியில் டோனியின் மனைவி சாக்ஷி குழந்தையுடன் கலரியில் அமர்ந்து போட்டியை ரசித்தார். அதன் பின்னர் டோனி குழந்தையை வீரர்களின் அறைக்கு கொண்டு கொஞ்சி மகிழ்ந்தார். சக வீரர்களும் குழந்தையை ஆர்வத்துடன் பார்த்தனர். குழந்தை குறித்து டோனி கூறியதாவது,

எனது மகள் பிறந்த போது நான் இந்தியாவில் இல்லை. அவரது முகத்தை பார்க்கவில்லை. அது கடினமான நாட்களாக இருந்தது.

பெற்றோர்வாழ்க்கையை குழந்தை மாற்றிவிடும். எனது மகளின் சிரிப்பு என் வாழ்க்கையை மாற்றி விட்டது. அவளுக்கு நான் இந்திய அணிக்கோ, சென்னை சுப்பர் கிங்ஸ அணிக்கோ விளையாடுவது பற்றியெல்லாம் கவலை இல்லை. அவளுக்கு அழ வேண்டும். அவள் அழுகிறாள். அது நல்ல உணர்வை தருகிறது போல' என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரின் அதிரடியில் கதிகலங்கியது ராஜஸ்தான்



ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை பெங்களூர் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 22ஆவது லீக் ஆட்டம் அகமதாபாத் சர்தார் பட்டேல் ஸ்ரேடியத்தில் நேற்று நடைபெற்றது.

இதில், ராஜஸ்தான் றோயல்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி களத்தடுப்பை தேர்வு செய்ய, ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது.

ஆரம்ப வீரர்களாக ரஹானே, வோட்சன் களமிறங்கினர். இவர்கள் இருவரும் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினர்.

36 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் இந்த ஜோடியை பட்டேல் பிரித்தார். அவரது துல்லிய பந்துவீச்சில் ரஹானே (18) எல்.பி.டபிள்யூ. ஆனார்.

அதன்பின்னர் களமிறங்கிய ஸ்மித் நிதானமாக விளையாட, அதிரடியைத் தொடர்ந்த வோட்சன் 26 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். கருண் நாயர் (16), ஹூடா (1), சாம்சன் (4) என சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்தன. பெங்களூர் பந்துவீச்சை தாக்குப்பிடித்து ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த போராடிய ஸ்மித் 31 ஓட்டங்களிலும், பின்னி 20 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். கடைநிலை துடுப்பாட்ட வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 130 ஓட்டங்கள் சேர்த்தது.


பெங்களூர் தரப்பில் ஸ்ரார்க் 3 விக்கெட்டுகளும், பட்டேல், சாகல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் எடுத்தனர்.

இதையடுத்து 131 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பெங்களூர் அணியின் தொடக்க வீரர்கள் கிறிஸ் கெயில் கோலி இருவருமே அதிரடியான தொடக்கத்தைக் கொடுத்தனர். வோட்சன் வீசிய 5ஆவது ஓவரில் 20 ஓட்டங்களுடன் கிறிஸ் கெயில் வெளியேற, அடுத்து வந்த டி வில்லியர்ஸ் கோலியுடன் ஜோடி சேர்ந்து சரமாரியாக ஷாட்களை அடித்தார்.




மறுமுனையில் கோலியும் அதிரடியாக ஆடி 46 பந்துகளில் 62 ஓட்டங்கள் குவித்தார். இருவரது அதிரடியாலும் 16ஆவது ஓவரின் முதல் பந்திலேயே 134 ஓட்டங்கள் எடுத்து, 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி வெற்றி வாகை சூடியது.

போட்டியின் ஆட்டநாயகனாக பெங்களூர் அணியின் ஸ்ரார்க் தெரிவானார். (கு)



## தீக்குளிப்...

பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் முஸ்லிம்களின் அராஜகம் தலை தூக்கிவிட்டது. இதற்கு பிரதான காரணம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே. அவரின் அரசாங்கத்தில் முஸ்லிம் அமைச்சர்களை பாதுகாத்தமையும் முஸ்லிம்களின் உரிமைகள் என்ற பெயரில் அவர்களின் தீவிரவாத செயற்பாடுகளை அமைதியாக வேடிக்கை பார்த்தமையுமே இன்று நாட்டை பாதித்துள்ளது. அவரின் அமைதியே இன்று அழிவின் பக்கம் நாட்டை கொண்டு சென்றுள்ளது. எனினும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரச ஊழியராக இருந்தாலும் அவர் பல சந்தர்ப்பங்களில் நல்ல தீர்வுகளை பெற்றுக் கொடுத்திருக்கிறார். யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டது முதற் கொண்டு நாட்டை அபிவிருத்தியின் பாதையில் கொண்டு சென்றது வரை முழுமையான புகழும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கே சேரும்.

அவரின் முயற்சியே இன்று தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களை அமைதியாக வாழ இடம்கொடுத்துள்ளது. அதேபோல் ராஜபக்ஷ அரசாங்கத்தைப்போல் இந்த நாட்டில் வேறு ஒரு அரசாங்கம் இருந்ததில்லை. இனி இருக்கப் போவதும் இல்லை. அதிலும் குறிப்பாக கோத்தபாய ராஜபக்ஷ என்றநபர் சாதாரண மனிதர் இல்லை. அவர் ஒரு இரும்பு மனிதர். நாட்டில் முஸ்லிம்களின் கரம் ஓங்கியபோதிலும் தீவிரவாதம் பரவிய போதும் எமக்கு தீர்வினை பெற்றுக் கொடுத்தவர் கோத்தபாயவே ஆவார். அவரைப்போல் ஒரு தலைவர் வேறு எவரும் இல்லை. அதேபோல் மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோரும் சிறந்த தலைவர்களே, எனினும் இன்று அவர்களுக்கு எதிராகவே சூழ்ச்சிகள் பலமடைந்துவிட்டது. ராஜபக்ஷ குடும்பத்தினை தண்டிக்க துடிக்கும் அரசாங்கம் ரிஷாத் பதியுதீன், ராஜித ஆகியோரை ஏன் விட்டுவைத்துள்ளது.

மகிந்த அரசாங்கத்தில் இவர்கள் செய்த குற்றச்சாட்டுக்கள் ஏன் மறைக்கப்படுகின்றது. இவர்கள் தற்போது தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதன் காரணமே இவர்களின் தவறுகள் மூடி மறைக்கப்படுகின்றது.

கோத்தபாய ராஜபக்ஷ மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்த அவரை தண்டிக்க நினைப்பதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். கோத்தபாய ராஜபக்ஷ ஒரு இரும்பு மனிதர். அவர் மீது நாட்டு மக்கள் அதீத அன்பும் மரியாதையும் வைத்துள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் அவரை தண்டிக்க நினைத்தால் மக்கள் சார்பில் பலர் தீக்குளிப்பார்கள். அதில் எமது உயிரும் உள்ளடங்கும் என்பதை அரசாங்கத்துக்கு தெரிவிக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

## வாக்குமூலம்...

முறைப்பாட்டை யார் செய்தார்கள், முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள், விசாரணை நடத்தப்படும் முறைமை குறித்தும் அறிந்து கொள்ளும் உரிமை எனக்கு உண்டு என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் தலைவர் ஜகத் பாலபட்டபெந்திக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு சமுகளித்து வாக்குமூலமொன்றை அளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள சிலர் எதிர்ப்பை வெளியிட்டதனைத் தொடர்ந்து, முன்னாள் ஜனாதிபதியிடம் சென்று வாக்குமூலம் பெற்றுக்கொள்ள லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு இணங்கியிருந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தனக்கும் இடையில் இன்றைய தினம் நடைபெறவிருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் காணப்படும் அரசியல் சூழ்நிலை காரணமாக இது நடந்திருக்கலாம் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் பசில் ராஜபக்ஷவை நேற்று நேரில் சென்று சந்தித்திருந்தார். இதன் போது ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போது மகிந்த இதனைத் தெரிவித்தார்.

அங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த மகிந்த, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்று தானும் கூறியிருந்ததாகவும் அது மகிந்த சிந்தனை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது எனவும் கூறியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுச் சம்பந்தமாக எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், திவிநெகும தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் அல்ல அமைச்சரவை எடுத்த தீர்மானமே அது, திவிநெகும தனிப்பட்ட நபர் ஒருவரின் தேவைக்கு அமைய கொண்டுவரப்படவில்லை நாட்டின் தேவைக்காக கொண்டு வரப்பட்டது. இந்த குற்றச்சாட்டுக்கள் தெளிவாக அரசியல் தேவைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும் பழிவாங்கல் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவர் நாடாளுமன்றத்துக்கு அழைக்கப்பட்டமை சம்பந்தமாக கருத்து வெளியிட்டிருந்த பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பீ. பெரேரா, சகோதரர்களுக்கு இடம் கிடைப்பதால் நடக்கும் முறையற்ற செயல் எனக் கூறியிருந்தார்.

பிரதி வெளிவிவகார அமைச்சரின் கருத்து கேட்ட கேள்விக்கு பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ, முட்டாள்களுக்கு கீழ்த்தரமானவர்களுக்கும் பதிலளிக்க வேண்டியதில்லை என தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பில் மாற்றங்களை செய்வதில் தனக்கு பிரச்சினைகள் இல்லை எனவும் தேர்தல் முறையில் சீர்த்திருத்தங்களை செய்வதில் தனக்கு தனிப்பட்ட நிலைப்பாடுகள் இருந்தாலும் கட்சி ஏற்கெனவே அது பற்றி தீரமானித்து விட்டது என்றும் முன்னாள் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார். (எ-11)

## பேரவை உறு...

ஆறு திருமுருகன், முன்னாள் அரச அதிபர் நேசையா, யாழ். மாவட்ட அரச அதிபர் வேதநாயகன், பேராசிரியர் ரட்னாயக்க, பேராசிரியர் கிஸ்புல்லா, கணபதிப்பிள்ளை, சிவசேகரம், மனோசேகரம், முன்னாள் பிரதம செயலாளர் ரங்கராயன் ஆகியோரே பேரவை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பதின்நான்கு பேருக்குமான நியமனக்கடிதங்கள் நேற்றைய தினம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ-11)

## தமிழகத்துக்கு...

கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கங்கள் தமக்கு எதையுமே செய்யவில்லை. இதனால் தாம் மீண்டும் அகதிகளாக தமிழகத்தை வந்தடைந்துள்ளதாக இந்தியக் காவற்துறையினரிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மூன்று வாரத்திற்கு முன்னர் சில அகதிகள் தமிழகத்திற்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு முதலமைச்சருக்கு...

டுள்ள செய்தியையிட்டு தாம் ஆச்சரியமடைவதாகத் தெரிவித்திருக்கும் வடமாகாண முதலமைச்சர் செயலக வட்டாரங்கள், குறிப்பிட்ட செய்தி திரிவுபடுத்தப்பட்ட ஒன்று எனவும் சுட்டிக்காட்டியுள்ளன.

பிரேமானந்தா ஆசிரமத்தில் இடம்பெற்ற பாலியல் வன்புணர்வு மற்றும் கொலை வழக்கில், பிரேமானந்தாவுடன் தண்டனை விதிக்கப்பட்ட கமலானந்தா, பாலன் எனப்படும் பாலேந்திரன், சதீஸ் எனப்படும் சதீஸ் குமார் ஆகிய மூவரையுமே விடுதலை செயயக கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கடிதம் எழுதியுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இருந்தபோதிலும், இந்த வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரின் மகள் அத்தண்டனையை ரத்துச் செய்யக்கோரி இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் ஒன்றை முதலமைச்சரின் ஊடாக அனுப்பி வைத்துள்ளார்.

அந்தப் பெண்ணின் கடிதத்தை இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைத்த முதலமைச்சர், சம்பந்தப்பட்டவர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுடைய கடிதத்தை உங்களுடைய கவனத்துக்கு அனுப்பிவைக்கிறேன் எனஒருகுறிப்பை இணைத்துள்ளார்.

இதனைவிட கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்யுமாறு முதலமைச்சர் கோரவில்லை எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-11)

## காய்ச்சலினால்...

திகை ஆதார வைத்தியசாலையில் கடந்த 22 ஆம் திகதி காலை அனுமதிக்கப்பட்ட குறித்த மாணவி மறுநாள் 23 ஆம் திகதி இரவு 7.00 மணியவில் திடீரென மயக்கமுற்றுள்ளார்.

இதனையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அம் மாணவி இரவு 7.45 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

மேலும், மாணவிக்கு இருதய சதையில் நோய் ஏற்பட்டிருந்ததாக யாழ்.போதனாவைத்தியசாலை வைத்திய வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. அதேவேளை மந்திகையில் மாணவி அனுமதிக்கப்பட்டபோது நிமோனியாக் காய்ச்சலால் குறித்த மாணவி பீடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருந்தது என தெரியவருகின்றது. (எ-4,6)

## 90 ஆயிரம் மில்லியன்...

உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர மீன்பிடி வலைகள் உபகரணங்களுக்கு விதிக்கப்படும் வரிகளை நீக்கவும் இலங்கை கடல் எல்லைக்குள் வரும் வெளிநாட்டு படகுகளை தடுப்பது குறித்து இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கம் காணப்படும் எனவும் ஜனாதிபதியின் ஆலோசகர் திலக் ரணவிராஜா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடல் எல்லைக்குள் வந்த 8 படகுகள் கடந்த வருடம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டன.

இதற்கு தீர்வாக 50 படகு கண்காணிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீன்பிடியில் ஈடுபடுவதற்காக ஆயிரத்து 500 படகுகள் சர்வதேச கடல் எல்லைக்குள் செல்கின்றன. அந்த படகுகளுக்கு இந்த கண்காணிப்பு கருவிகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் பொருததப்படும்.

அதேவேளை சட்டவிரோதமான முறையில் சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடியில் ஈடுபடும் படகு உரிமையாளர்களிடம் அபராத தொகையை அறவிடுவது குறித்து கலந்து ரையாடப்பட்டு வருகிறது.

தலதா மாளிகையில் இருந்து 500 மீற்றர் சுற்றளவு பகுதிகளில் உள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களையும் மூடுவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டு வருகிறது.

இந்த சுற்றளவு பகுதிக்குள் கண்டி கிங்ஸ் ஹோட்டலில் உள்ள மதுபான நிலையமும் அடங்குவதாகவும் திலக் ரணவிராஜா மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## பேரவை உறு...

கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் கடந்த அரசின் காலத்தில் இருந்த பேரவை பல எதிர்ப்புக்களிற்கு மத்தியில் கலைக்கப்பட்டு புதிய பேரவை புதிய அரசின் காலத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். பேரவை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட பதின்நான்கு உறுப்பினர்களும் வருமாறு,

பேராசிரியர் சிற்றம்பலம், பேராசிரியர் தர்மரத்தினம், வைத்திய நிபுணர் லக்ஸ்மன், வைத்திய நிபுணர் ஜெயக்குமார், பொறியலாளர் விக்னேஸ்வரன், செஞ்சொற் செல்வர் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியை புகழ்ந்த...

தூதுவர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் முன்னெடுக்கும் அர்ப்பணிப்புக்களை ஒருபோதும் மாற்றப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த சந்திப்பில் கூறியுள்ளார்.

புதிய அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகம் வழங்கும் ஒத்தாசை மற்றும் நாட்டில் சமாதானத்தை கொண்டுவருவதற்கு யுத்த காலத்தில் நோர்வே அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பு என்பவற்றுக்கு ஜனாதிபதி தனது நன்றிகளையும் தெரிவித்துள்ளார். (எ-11)

## நீதிமன்றத்தை அவமதித்த...

தாக்கல் செய்த அறிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய, சந்தேகநபர்கள் 27 பேரையும் எதிர்வரும் 8-ம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பித்தார்.

ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, ஜானக பிரியந்த பண்டார, சரத் வீரசேகர, ரொஷான் ரணசிங்க, ஜயந்த கெட்டகொட, காமினி லொக்குகே, பந்துல குணவர்த்தன, எஸ்.எம்.சந்திரசேன, வீரகுமார திஸாநாயக்க, உதித்த லொக்குபண்டார ஆகியோருககும் மேல் மாகாண முதலமைசசர் பிரசன்ன ரணதுங்க, மாகாண சபை உறுப்பினர்களான உதய கம்மன்பில, ரொஜர் செனவிரத்ன ஆகியோர் உள்ளிட்ட 27 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

அத்துடன், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட வட்டினாபா சோமானந்த, முருந்தெட்டுவே ஆனந்த, மெதகொட அபேதிஸ்ஸ, இத்தேகந்தே சத்தாதிஸ், கலகொட அத்தே ஞானசார ஆகிய தேரர்களுக்கும் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கும் வகையில், நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்.
Computer Repair
0779086737 52, Hospital Road, Jaffna.
GUNAA BEST PC
(182)

கனடா
Express Entry Visa
தொழில்வாய்ப்புடன் குடியுரிமை (Work with PR)
0/L உடன்
Student Visa
UK, Australia, New Zealand, Switzerland, Canada, Malaysia, Singapore...
ஆங்கிலம் பேசி பழகும்
ENGLISH SPEAKING Club
தெரிந்த சொற்களுடன் பேச ஆரம்பித்து IELTS வரையில் தேர்ச்சிபெற
Any Visa to Any Country
Studen Visa - Spouse Visa - Visit Visa - Rejection Appeal & Migration
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...
SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
யாழ் பஸ் நிலையத்துக்கு மிக அருகில்
Tel: 0777 32 4004
(C-805)

தென்னிந்திய திரையுலக பாடகர் T.M.S. சௌந்தராஜனின் புதல்வர் செல்வக்குமார் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் போல் வேடம் கொண்டு உலகையே கலக்கிவரும் நடிகர் 'நாமக்கல்எம்.ஜி.ஆர்' அவர்களை உங்கள் இசை நிகழ்வுகளிற்கு அழைத்திட மற்றும் இசைக் குழு தொடர்புகளிற்கு
(184)
மோகன் சவுண்ஸ் - 0777 030 234

British College of Higher Studies
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS
இப்பாட நெறியானது Settlement Visa மூலமாக UK செல்ல இருப்பவர்கள் எளிதாகக் கற்கக் கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகிறது
Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்
Batches Start on
Batch I : 05/05/2015 Batch II : 09/05/2015
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935

CNR WORLD WIDE EXPRESS & TRAVELS
யாழ்ப்பாணத்தில் மங்களகரமான ஆரம்பம்
'அலுவலக திறப்பை முன்னிட்டு நீங்கள் அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது'.
- வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் ( AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)
சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை
401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062
(C-801)



வெளிநாட்டு வேலைவாய்ப்பு
அரிய சந்தர்ப்பம் - இன்றும் நாளையும் மட்டும்
மொறீசியஸ், டுபாய், பஹ்ரேன், சவுதி அரேபியா, கட்டார் ஆகிய நாடுகளில் படித்தவர்கள் மற்றும் திறமையுள்ளவர்களுக்கான வேலைவாய்ப்புக்கள்.
Office Secretary, Work shop Supervisor, Operation Supervisor, Disel Mechanic, Supervisor, Heavy Vehicle Driver, Bus Driver, Call taxi driver, Cook, Electrician, Carpenter, Mason, Tiles layer, Plumper, Pipe fitter, Pipe fitter helper, Construction labour, Car polisher, Clearnar.
சம்பளம் :- 40000 - 100000 வரை
மொத்தச் செலவு :- 20000 முதல் (ரிக்கெட், பீறோ உட்பட)
25 (சனி), 26 (ஞாயிறு) ஆம் திகதிகளில்
நேர்முகத் தேர்வு இடம் பெற்று தகுதியானவர்கள் உடன் தெரிவு செய்யப்படுவர்.
தேவைப்படும் நபர்கள் ஒவ்வொரு வேலைக்கும் குறைந்தது 5 முதல் 25 நபர்கள் வரை தெரிவு செய்யப்படுவார்கள்.
நேரம் :- காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை.
இடம் :- 49A சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
(வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அருகில்)
தொடர்பு:- 077 866 8420
SV INTERNATIONAL (KANDY) PVT LTD
(C-807)



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org